




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:218 | 22-02-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி







## இன்றைய பஞ்சாங்கம்

22.02.2026 மாசி 10
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.32

திதி:
இன்று காலை 12.17 வரை பஞ்சமி பின்பு சஷ்டி.

நட்சத்திரம்:
இன்று மாலை 6.55 வரை அசுவினி பின்பு பரணி

யோகம் :
இன்று பிற்பகல் 2.10 வரை சுப்பிரம் பின்பு பிராம்யம்.

கரணம் :
இன்று அதிகாலை 1.14 வரை பவம் பின்பு பிற்பகல் 12.17 வரை பாலவம் பின்பு இரவு 11.12 வரை கௌலவம் பின்பு தைதுலம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று மாலை 6.55 வரை உத்திரம் பின்பு அஸ்தம்

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 1.30 – 2.30.

இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று சுபமுகூர்த்த நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# அனைத்து நாடுகளுக்கும் புதிதாக 10% வரி விதிப்பை அமல்படுத்தினார் டிரம்ப்

**வாஷிங்டன், பிப்.22:**

அமெரிக்க அதிபர் டிரம்ப் வரி விதிப்பை அந்நாட்டு சுப்ரீம் கோர்ட் ரத்து செய்துள்ள நிலையில், உலக நாடுகளுக்கான வரி விதிப்பு இனி 10 சதவீதமாக மட்டுமே இருக்கும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த வரி விதிப்பு 24ந்தேதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அனைத்து நாடுகள் மீதான வரி விதிப்பும், இப்போது 10 சதவீதம் என்றே கணக்கிடப்படும் என்று அமெரிக்க வரித்துறை நிபுணர்கள் கூறுகின்றனர். வரி விதிப்பு விவகாரத்துக்கு பிறகு, அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்ட ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், பிரிட்டன் என அனைத்து நாடுகளுக்கும் இனி வரி 10 சதவீதம் என்றே கணக்கிடப்படும்

டிரம்ப் வரி விதிப்புக்கு முன்னதாக இருந்த 3.5 சதவீதம் வரி விதிப்பும் கூடுதலாக வசூலிக்கப்படுமா அல்லது, 10 சதவீதம் மட்டும் வசூலிக்கப்படுமா என்பது பற்றி தெளிவான விளக்கத்தை இன்னும் அமெரிக்க அதிகாரிகள் வெளியிடவில்லை.

தற்போது வரி குறைக்கப்பட்டுள்ள நிலையில் கூடுதலாக வசூலிக்கப்பட்ட வரியை திருப்பித் தர வேண்டிய நிலைக்கு அமெரிக்க அரசு நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளது. இந்த தொகை மட்டும் 140 பில்லியன் டாலர்கள் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தனது வரி விதிப்புகளை செல்லாது என்று அவற்றை ரத்து செய்த 6 நீதிபதிகளின் தீர்ப்பு அவமானத்துக்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த தீர்ப்பு குறித்து வெட்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபராக கடந்த ஆண்டு டிரம்ப் பொறுப்பேற்றார். அதன்பிறகு அந்நாட்டின் குடியேற்ற கொள்கையில் திருத்தம், மானியம் ரத்து என பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதனையடுத்து உலகில் உள்ள பல நாடுகளில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது அதிபர் டிரம்ப் பரஸ்பர வரி விதித்தார்.

சீனா, கனடா, மெக்சிகோ, இந்தியா உள்பட சுமார் 100-க்கும் மேற்பட்ட நாடுகள் மீது கடுமையான வரிகளை விதித்தார். இந்தியப் பொருள்கள் மீது 25 சதவீத பரஸ்பர வரி, ரஷியாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்கியதால் இந்தியப் பொருள்கள் மீது கூடுதலாக 25 சதவீத வரி என மொத்தம் 50 சதவீத வரி விதிக்கப்பட்ட நிலையில், அமெரிக்கா-இந்தியா இடைக்கால வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையின் விளைவாக, அது 18 சதவீதமாக குறைக்கப்பட்டது.

இந்த வரி விதிப்பு நடவடிக்கைக்கு அமெரிக்க அரசியலமைப்பில் உள்ள சர்வதேச அவசர பொருளாதார அதிகார சட்டம் 1977-ஐ அதிபர் டிரம்ப் பயன்படுத்தினார்.

வர்த்தக பற்றாக்குறையை குறைத்து அமெரிக்காவில் அதிக உற்பத்தியை ஊக்குவிப்பதே தனது குறிக்கோள் என்று அவர் கூறினார்.

> தற்போது வரி குறைக்கப்பட்டுள்ள நிலையில் கூடுதலாக வசூலிக்கப்பட்ட வரியை திருப்பித் தர வேண்டிய நிலைக்கு அமெரிக்க அரசு நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளது. இந்த தொகை மட்டும் 140 பில்லியன் டாலர்கள் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ”



### 9 நீதிபதிகள் அமர்வு

இதனிடையே, டிரம்ப்பின் வரி விதிப்பு நடவடிக்கை சட்டவிரோதமானது என 3 கீழமை நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியதை தொடர்ந்து, இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு சென்றது. இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அமர்வு நேற்று தீர்ப்பளித்தது. அந்த அமர்வில் 6 நீதிபதிகள் அளித்த தீர்ப்பில், ‘வரி விதிக்கும் அதிகாரத்தை அமெரிக்க நாடாளுமன்றத்துக்குத்தான் அரசமைப்புச் சட்டம் மிகத் தெளிவாகவழங்கியுள்ளது. அரசமைப்புச் சட்டத்தை வகுத்தவர்கள் அந்த அதிகாரத்தை அரசு நிர்வாகத்துக்கு அளிக்கவில்லை. எனவே டிரம்ப்பின் வரி விதிப்புகள் செல்லாது’என்று தீர்ப்பளித்தனர்.

அதேவேளையில், அமர்வில் இடம்பெற்ற 3 நீதிபதிகள், ‘தற்போதைய வரி விதிப்புகள் அறிவார்ந்த கொள்கையாக இருக்கலாம் அல்லது அறிவார்ந்த கொள்கையாக இல்லாமலும் போகலாம். ஆனால், வரலாறு மற்றும் கடந்த கால நடவடிக்கைகள், முடிவுகளைக் கருத்தில் கொள்ளும்போது, டிரம்ப்பின் வரி விதிப்புகள் சட்டபூர்வமானவைதான்’என்று தெரிவித்தனர்.

இதையடுத்து பெரும்பான்மை அடிப்படையில் டிரம்ப்பின் வரி விதிப்பு செல்லாது என்று 6 நீதிபதிகள் அளித்த தீர்ப்பு இறுதி செய்யப்பட்டது.

# மதுரையில் ரூ.213 கோடி மதிப்பிலான புதிய மேம்பாலம்: முதல்வர் திறந்து வைத்தார்



**மதுரை, பிப்.22:**

மதுரையில் நடைபெறும் அரசு விழாக்கள் மற்றும் கட்சி நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக முதல்வர் ஸ்டாலின் சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை இன்று காலை வந்தடைந்தார். பின்னர், அவர் மதுரை வடபழஞ்சி எல்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பினாகிள் இன்ஃபோடெக் நிறுவனத்தின் விரிவுப்படுத்தப்பட்ட புதிய உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையக் கட்டிடத்தை திறந்து வைத்தார்.

அதையடுத்து, தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரையில் ரூ.213.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலத்தை திறந்து வைத்தார். வைகை ஆற்றில் ஆல்பர்ட் விக்டர் பாலத்துக்கு இணையாக அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம், 1305 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டுள்ளது. சேவைச் சாலை பாலத்தின் இடதுபுறத்தில் 7.50 மீட்டர் அகலத்திற்கு இரண்டு வழித்தடமாகவும், வலது பகுதியில் 10.5 மீட்டர் அகலத்துக்கு மூன்று வழிதடமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மேம்பாலம், செல்லூர், தல்லாகுளம், தமுக்கம், நெல்பேட்டை, அண்ணாநகர், மதுரை மத்திய பகுதிகளுக்கிடையேயான போக்குவரத்தை எளிதாக்கி, பொதுமக்களின் பயண நேரத்தை குறைப்பதுடன், சாலை பாதுகாப்பையும் மேம்படுத்தும். மேலும், அவசர சேவை வாகனங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து வாகனங்கள் விரைவாகச் செல்ல வழிவகுப்பதன் மூலம் நகரின் மொத்த போக்குவரத்து திறன் மற்றும் நகர்ப்புற இணைப்பை மேம்படுத்தும்.

தொடர்ந்து அவர், திருமங்கலம் - கள்ளிக்குடி ரயில் நிலையங்களுக்கு இடையே ரூ.38.81 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் சாலை மேம்பாலம், சிவகங்கை மாவட்டம் சூரக்குளத்தில் ரூ.1.7 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திர போராட்ட வீரர்கள் மருதுபாண்டியர்கள் சிலை ஆகியவற்றை காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். பின்னர், அவர் ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.50 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஹெச்பி கணினி திறன் மேம்பாட்டு மையத்தை தொடங்கி வைத்தார்.

# இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட Td தடுப்பூசி அறிமுகம்

## மத்திய சுகாதார அமைச்சர் நட்டா வெளியீடு

**புதுடில்லி,பிப்.22:**

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட டிடி (Td) தடுப்பூசியை மத்திய சுகாதார அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டா அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார். இந்த தடுப்பூசி இமாச்சலப் பிரதேச மாநிலம் கசோலியில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிலையத்தில் தயாரிக்கப்பட்டது.




நிகழ்ச்சியில் பேசிய நட்டா, “கசோலியில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், ஊழியர்களை பாராட்டுவதற்கான தருணம் இது. அவர்களால்தான், Tetanus and Adult Diphtheria (Td) தடுப்பூசி தயாரிப்பு சாத்தியமாகி இருக்கிறது. இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு. இந்த தடுப்பூசி, நாட்டின் தேசிய சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், பொது சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

சுகாதாரம் மற்றும் மருந்துத் துறைகளில் தன்னிறைவை அடைவதற்கான தெளிவான இலக்குகளை பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. தற்சார்பு பாரதம் எனும் தொலைநோக்குப் பார்வையை நோக்கிய ஒரு உறுதியான நடவடிக்கை இது. உலகளாவிய நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் இந்த டிடி தடுப்பூசி விநியோகிக்கப்படும். வரும் ஏப்ரல் மாதத்துக்குள் 55 லட்சம் டோஸ்களை மத்திய ஆராய்ச்சி நிறுவனம் வழங்கும். அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்த உற்பத்தி படிப்படியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் மருந்தகமாக இந்தியா பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உலகின் முன்னணி தடுப்பூசி தயாரிப்பாளர்களில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய தர வரிசையில் இந்தியா முதிர்ச்சி நிலை 3-ஐ அடைந்துள்ளது. தடுப்பூசி தயாரிப்பு என்பது நீண்ட காலம் ஆகும் நடைமுறையைக் கொண்டது. காசநோய்க்கான மருந்துகள் உருவாக கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் ஆனது. என்செபாலிடிஸ் தடுப்பூசி கிட்டத்தட்ட 100 ஆண்டுகள் எடுத்துக்கொண்டது.

ஆனால், கோவிட் தொற்றுக் காலத்தில் இந்தியா 9 மாதங்களுக்குள் இரண்டு உள்நாட்டு தடுப்பூசிகளை உருவாக்கி 220 கோடிக்கும் மேற்பட்ட டோஸ்களை வழங்கியது. கோவிட் தடுப்பூசி சான்றிதழ்கள் டிஜிட்டல் முறையில் வழங்கப்பட்டன. இந்தியா கிட்டத்தட்ட 100 நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்கியது. அவற்றில் 48 நாடுகள் இலவசமாக பெற்றன” என தெரிவித்தார்.

உலக சுகாதார நிறுவனம் 2006-இல் TT தடுப்பூசியை Td தடுப்பூசியாக மாற்ற பரிந்துரைத்தது. அந்த அடிப்படையில் மத்திய ஆராய்ச்சி நிலையம், தற்போது Td தடுப்பூசியை உருவாக்கி, அனைத்து ஆய்வுகள் மற்றும் அங்கீகாரங்களை முடித்து, வணிக ரீதியிலான உற்பத்தியை துவக்கியுள்ளது.

# இந்தியா-பிரேசில் வர்த்தகத்தை 5 ஆண்டுகளில் ரூ.1.81 லட்சம் கோடிக்கு மேல் உயர்த்த இலக்கு நிர்ணயம்



**புதுடில்லி,பிப்.22:**

டெல்லியில் இன்று பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டி சில்வாவுடன் பிரதமர் மோடி இன்று பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தபேச்சுவார்த்தையின்போது கனிம வளங்கள் மற்றும் பாதுகாப்பு துறை தொடர்பாக முக்கிய ஆலோசனைகள் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்து பேசினர். அப்போது பேசிய பிரதமர் மோடி, அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியா-பிரேசில் வர்த்தகத்தை உயர்த்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இது தொடர்பாக அவர் கூறியதாவது;-

“இந்தியா-பிரேசில் இடையிலான உறவுகள், அதிபர் லூலா டி சில்வாவின் தொலைநோக்கு பார்வையாலும், உத்வேகம் அளிக்கும் தலைமையாலும் நீண்ட பயனை அடைந்துள்ளன.

லத்தீன் அமெரிக்காவில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாக பிரேசில் உள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியா-பிரேசில் வர்த்தகத்தை 20 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் (இந்திய மதிப்பில் சுமார் 1.81 லட்சம் கோடி) கொண்டு செல்ல நாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

இந்தியாவும், பிரேசிலும் இணைந்து செயல்படும்போது, உலகளாவிய தெற்கின் குரல் வலுவடைகிறது. பயங்கரவாதமும் அதன் ஆதரவாளர்களும் முழு மனிதகுலத்திற்கும் எதிரிகள் என்பதை இந்தியாவும், பிரேசிலும் ஒப்புக்கொள்கின்றன.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.








# திருக்குறள் குறள்-538

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையும் இல்



சான்றோர் புகழ்ந்து சொல்லியச் செயல்களைப் போற்றிச் செய்யவேண்டும், அவ்வாறு செய்யாமல் மறந்து சோர்ந்தவர்க்கு ஏழுப் பிறப்பிலும் நன்மை இல்லை.

## சிந்திக்க ஒரு நொடி



நிலைமை மாறினால்
மகிழ்ச்சியாக வாழலாம்
என்று நினைப்பது
பொய்....

மகிழ்ச்சியாக
வாழ்ந்தாலே நம்
நிலைமை மாறிவிடும்
என்பதே உண்மை...

**உஷா முத்துராமன்**

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்மாசி மண்டலத்திருவிழா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மாசி மண்டலத்திருவிழா-2026-21.02.2026-சுற்று கொடியேற்றத்துடன் ஆரம்பம். ஆதியந்தமாயினாய் ஆலவாயில் அண்ணலே சோதியந்தமாயினாய் சோதியுள்ளொர் சோதியாய் கீதம் வந்த வாய்மையால் கிளர்தருக்கினார்க்கல்லால் ஓதிவந்த வாய்மையால் உணர்ந்துரைக்கலாகுமே-எம்பிரான்திருஞானசம்பந்தர் பெருமான். சொக்கே நின் தாளே துணை

## வந்தவாசி ஜலகண்டேஸ்வரர் கோயில் பிரம்மோற்சவ விழா கொடியேற்றத்துடன் தொடக்கம்..!



**வந்தவாசி, பிப் 22:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீசத்புத்ரி நாயகி சமேத ஸ்ரீஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் நேற்று மாசி மகம் பிரம்மோற்சவ விழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த வைபவத்தில் மூல மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு யாகசாலை பூஜைகள் மற்றும் வேத மந்திரங்கள் முழங்க கொடியேற்றம் நடைபெற்றது. பிறகு உற்சவ மூர்த்திகள் மேளதாளத்துடன் வீதியுலா வந்தனர். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். **பா. சீனிவாசன், வந்தவாசி.**

## உலக தாய்மொழி தின விழா



திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் திருவண்ணாமலை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை திருக்குறள் திருப்பணிகள் திட்டம்-செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கம் இணைந்து நடத்திய உலக தாய்மொழி தின விழா முன்னிட்டு தமிழ் அறிஞர்களின் படத்திறப்பு விழா, தாய்மொழி தின பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா, தமிழ்நாடு அரசு நெல் நூலகம் விருது பெற்ற நூலகருக்கு பாராட்டு விழா, என முப்பெரும் விழா நேற்று நடைபெற்றது.

## என்டிஏ கட்சியினர் ஆர்ப்பாட்டம்



திண்டுக்கல்லில் திமுக அரசை கண்டித்து என்டிஏ கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## ஒன்பதாம் திருநாள் காலை பல்லக்கு தீர்த்தவாரி



திருப்புட்குழி ஸ்ரீவிஜயராகவன் பிரம்மோற்சவம் ஒன்பதாம் திருநாள் காலை பல்லக்கு தீர்த்தவாரி மாசி 9 ( 21/2/26 ) சனிக்கிழமை காலை.

## ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி அம்மன் 73 -ஆம் ஆண்டு ரத பிரமோற்சவ விழா



**திருவண்ணாமலை, பிப்.22:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி குளக்கரை அருகில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி திருக்கோயிலில் 73- ஆம் ஆண்டு ரத பிரம்மோற்சவ விழா நடைபெற்றது.

மூலவர் ஸ்ரீபுற்றரசி அம்மனுக்கும், உற்சவமூர்த்தி அருள்மிகு ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி அம்மனுக்கும், சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங் களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.


பின்னர் உற்சவமூர்த்தியை தேரில் அமர வைத்து வானவேடிக்கை, மேதாளங்கள் முழங்க, பக்தர்கள் பொங்கல் வைத்து, பக்தர்கள் வேண்டுதலை நிறைவேற்ற அலகுகுத்தி நேர்த்திக்கடனை நிறைவேற்றினார்கள். லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேர் வடம் பிடித்து திருவீதி உலாவும் வந்தனர்.

வெகு சிறப்பாக ரத பிரமோற்சவ விழா நடைபெற்றது. ஸ்ரீ அங்காள பரமேஸ்வரியை வேண்டி அருள் பெற்றனர். பக்தர்களுக்கு நீர் மோர் வழங்கினார்கள்.

காலை முதல் மாலை வரை ஸ்ரீவாசவி மஹாலில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## மாசி மாதம் வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை , பிப்.22:**

திருவண்ணாமலை அருள்மிகு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாசி மாதம் இரண்டாவது வெள்ளிக்கிழமையை முன்னிட்டு பாலசுப்பிரமணி ஐயர் அவர்களால் அவர்களால் மூலவருக்கும், ஆதி அம்மனுக்கும், உற்சவருக்கும், அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், மங்கள வாத்தியங்கள் இசைக்க, வேத மந்திரங்கள் ஒலிக்க, பெண்கள் அனைவரும் பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதீபாராதனையும் நடைபெற்றது.

பின்னர் உற்சவர் அலங்காரத்துடன் தேரில் மூன்று முறை மங்கள வாத்தியங்கள் இசைக்க ஆலயம் சுற்றி வந்தது. மற்றும் ஊஞ்சல் உற்சவமும் வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி மகாதீபாராதானையும் நடைபெற்றது.

உபயதாரர் திரு. கோபாலகிருஷ்ணன் செட்டியார் அவர்கள், விக்னேஷ் அவரது குடும்பத்தினரும், ஆர்ய வைஸ்ய ஆண்கள்,பெண்கள் அனைவரும் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## மகளிர் கலைக் கல்லூரி பட்டமளிப்பு விழா



சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரி விழாவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் ஜோதிபாசு பட்டம் வழங்கினார்.

## பக்கிள் விரிவாக்கப்பணி



தூத்துக்குடியில் பக்கிள் விரிவாக்கப்பணிகளை கனிமொழி எம்.பி. தொடங்கி வைத்தார்.அமைச்சர் கீதாஜீவன், கலெக்டர் இளம்பகவத், மேயர் ஜெகன் உடன் உள்ளனர்.

## விசிக தலைவர் திருமாவளவன் பேச்சு



செஞ்சியில் நடந்த பொதுக் கூட்டத்தில் விசிக தலைவர் திருமாவளவன் எம்.பி பேசினார்.

## வண்டியூர் பூங்கா மற்றும் படகு சவாரி முதல்வர் தொடங்கி வைத்தார்



மதுரை கே.கே. நகரில் மாநகராட்சி சார்பில் ரூ.50 கோடியில் மறுசீரமைத்து அழகுபடுத்தப்பட்ட வண்டியூர் பூங்கா மற்றும் படகு சவாரியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன். மாநகராட்சி ஆணையாளர் சித்ரா உடன் உள்ளனர்.

## தமிழறிஞர் பெருமக்களுக்கு"தமிழ்மாமணி விருது"



**திருச்சி, பிப்.22:**

உலகத் தாய்மொழி தினமான நேற்று (21.02..26) திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்க குளிர்மை சிற்றரங்கில் நந்தவனம் அறக்கட்டளை சார்பில் 11 தமிழறிஞர் பெருமக்களுக்கு "தமிழ் மாமணி" விருது வழங்கப்பட்டது.

முன்னதாக தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய, இந்நிகழ்ச்சிக்கு இனிய நந்தவனம் திருசந்திரசேகரன் முன்னிலை வகிக்க, மக்கள் தொடர்பாளர் திரு.பா.தனபால் வரவேற்புரை நல்க, தமிழ்ச்சங்க அமைச்சர் திரு பெ.உதயகுமார், கோத்தாரி சர்க்கரை ஆலை பொதுமேலாளர் திருகோபி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் .

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்ற தலைப்பில் காவேரி மகளிர்கல்லூரி பேராசிரியர் முனைவர் சாத்தம்மை மப்ரியாவும்" தமிழ் எங்கள் சமூகத்தின் வேர்" என்ற தலைப்பில் ஜமால் முகமது கல்லூரி தேர்வு நெறியாளர் முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசனும் சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கவிஞர் பா.தென்றல் நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## விளையாட்டு திடல் கனிமொழி எம்.பி. திறந்து வைத்தார்



தூத்துக்குடி எழில் நகர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு திடலை கலெக்டர் இளம்பகவத் தலைமையில், அமைச்சர் கீதாஜீவன் முன்னிலையில், கனிமொழி எம்.பி. திறந்துவைத்தார்.

## திமுக பரப்புரை கூட்டம்



நெல்லை மாவட்டம் களக்காட்டில் நடந்த திமுக பரப்புரை கூட்டத்தில் செய்தி தொடர்பாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் பேசினார்.

## குழந்தைகள் நல காவல் அலுவலர்களுக்கான அறிமுக பயிற்சி



தென்காசி மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் மூலம் குழந்தைகள் நல காவல் அலுவலர்களுக்கான அறிமுக பயிற்சி அளிக்கப்பட்டது.

## எழும்பூரில் பராமரிப்பு பணி: 8 ரயில்கள் மாம்பலம் ரயில் நிலையத்தில் நின்றுச் செல்லும்!

**சென்னை, பிப்.22:**

எழும்பூரில் பராமரிப்பு பணிகள் காரணமாக 8 ரயில்கள் மாம்பலம் ரயில் நிலையத்தில் நின்றுச் செல்லும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பு: எழும்பூர் ரயில் நிலையத்தில் 10 மற்றும் 11 ஆவது நடைமேடைகளில் நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகள் காரணமாக, பயணிகளின் வசதிகளுக்காக 8 ரயில்கள் மாம்பலம் நிலையத்தில் கூடுதலாக நின்றுச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிப். 22 முதல் ஏப்ரல் 6 வரை, 8 ரயில்கள் மாம்பலம் ரயில் நிலையத்திலும் நின்றுச் செல்லும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

சென்னை எழும்பூர் - திருச்சி சோழன் அதிவிரைவு ரயில், சென்னை எழும்பூர் – கன்னியாகுமரி அதிவிரைவு ரயில், சென்னை எழும்பூர் - புதுச்சேரி விரைவு ரயில், சென்னை எழும்பூர் - செங்கோட்டை பொதிகை அதிவிரைவு ரயில், சென்னை எழும்பூர் – திருநெல்வேலி நெல்லை அதிவிரைவு ரயில், சென்னை எழும்பூர் – மதுரை பாண்டியன் அதிவிரைவு ரயில், சென்னை எழும்பூர் – மன்னார்குடி விரைவு ரயில், சென்னை எழும்பூர் – சேலம் அதிவிரைவு ரயில், இந்த 8 அதிவிரைவு/விரைவு ரயில்கள் இன்று (பிப். 22) முதல் ஏப்ரல் 6 வரை கூடுதலாக மாம்பலம் ரயில் நிலையத்தில் நின்றுச் செல்லவுள்ளது.

## தேதி குறிப்பிடாமல் சட்டப்பேரவை ஒத்திவைப்பு

**சென்னை, பிப்.22:**

16 ஆவது தமிழக சட்டப் பேரவையின் எட்டாவது கூட்டத் தொடர் வெள்ளிக்கிழமை நிறைவுற்றது. 202526 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை அறிக்கை மீதான விவாதம் நிறைவடைந்த பின்னர், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பதில் உரையாற்றினர். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சிறப்புரை ஆற்றியதைத் தொடர்ந்து சட்டமன்றத் தலைவர் மு. அப்பாவு நிறைவுரை வழங்கினார். அடுத்த கூட்டத்தொடருக்கான தேதி குறிப்பிடப்படாமல் சட்டப்பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## இடைக்கால பட்ஜெட் விவாதம்: அதிமுக, பாஜக புறக்கணிப்பு!

**சென்னை, பிப்.22:**

தமிழ்நாடு சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரின் இறுதிநாள் கூட்டம் வெள்ளிக்கிழமை பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் தொடங்கியது. கூட்டத்தில் 2026-27 ஆம் ஆண்டின் முன்பணமானிய கோரிக்கைகளைநிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். இடைக்கால பொது நிதிநிலை அறிக்கை மற்றும் இடைக்கால வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்கு முறையே நிதியமைச்சர் தங்கம் தென்னரசும், வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வமும் பதிலுரையாற்றினர். 2025-26 நிதியாண்டின் கூடுதல் செலவுக்கான மானிய கோரிக்கைகள் மற்றும் 2026-27 ஆண்டின் முன்பண மானிய கோரிக்கைகள் விவாதமின்றி வாக்கெடுப்பில் நிறை வேற்றப்பட்டன. எனினும், பிரதான எதிர்க்கட்சியான அதிமுக உறுப்பினர் கள் அனைவரும் அன்றைய அவை நடவடிக்கைகளை ஒட்டு மொத்தமாக புறக்கணித்தனர். அவர்களுக்கு ஆதரவாக பாஜக மற்றும் பாமக அன்புமணி ராமதாஸ் ஆதரவு எம்எல்ஏக்களும் சபை நடவடிக்கைகளை முழுமையாக புறக்கணித்தனர். இந்நிலையில், ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவு எம்எல்ஏவான அய்யப்பன், பாமக ராமதாஸ் ஆதரவு எம்எல்ஏக்கள் ஜி.கே. மணி, அருள் ஆகிய நான்கு பேர் பேரவை நடவடிக்கையில் கலந்து கொண்டனர்.

## மீண்டும் முதலமைச்சராக மு.க.ஸ்டாலினே வர வேண்டும்: அதிமுக எம்எல்ஏ வாழ்த்து!

16 ஆவது தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடரின் கடைசி நாளான வெள்ளிக்கிழமை, அதிமுக உறுப்பினர்கள் ஒட்டு மொத்தமாக நடவடிக்கைகளை புறக்கணித்த நிலையில், ஓ. பன்னீர்செல்வம் தரப்பு எம்எல்ஏவான உசிலம்பட்டி தொகுதி அய்யப்பன் பேரவை நடவடிக்கையில் பங்கேற்று, வரும் சட்ட மன்றத் தேர்தலில் மு.க.ஸ்டாலினே மீண்டும் முதலமைச்சராக வர வேண்டும் என்று வாழ்த்து தெரிவித்தார். சத்துணவுத் திட்டத்தை இன்றும் பாராட்டிக் கொண்டிருப் பதைப் போல, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்ச் சமூகம் உள்ளவரை போற்றிக் கொண்டே இருக்கும் என்று கூறிய அய்யப்பன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி ஜெயலலிதாவின் ஆசியுடன் மு.க. ஸ்டாலின் மீண்டும் வெற்றி பெற்று தமிழக முதலமைச்சராக வர வேண்டும் என்று வாழ்த்தினர்.

## ‘பணப்பெட்டியை வாங்கிக் கொண்டு திமுகவுடன் கூட்டணி!’ - நயினார் நாகேந்திரன் கூறுகிறார்



**திருச்சி, பிப்.22:**

பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் திருநெல்வேலியில் இருந்து வந்தே பாரத் ரயில் மூலம் நேற்று காலை திருச்சி ரயில் நிலையம் வந்தடைந்தார். ரயில் நிலையத்தில் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: வரும் மார்ச் 11-ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி திருச்சிக்கு வருகை தர உள்ளார்.

அன்றைய தினம் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது அதற்காக இடம் தேர்வு செய்ய உள்ளோம். இடம் தேர்வு செய்து கூட்டணி கட்சிகளிடம் ஆலோசித்து எந்த இடத்தில் பொதுக்கூட்டம் வைப்பது என்பது தொடர்பான இறுதி முடிவை அறிவிப்போம். 200 இடங்களில் திமுக வெற்றி பெறுவோம் என்கிறார்கள். ஆனால் 200 இடங்களில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை மக்கள் தான் முடிவு செய்வார்கள்.

திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை எவ்வளவு சதவீதம் நிறைவேற்றி உள்ளது என்பதை திமுக தலைவர்கள் மாற்றி மாற்றி கருத்து கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் 90% தேர்தல் வாக்குறுதியைநிறைவேற்றவில்லை.

ஏற்கெனவே பொய்யான வாக்குறுதியை கொடுத்தது போல், மீண்டும் பொய்யான வாக்குறுதிகளை திமுக அரசு கொடுக்க தொடங்கியுள்ளது. இப்போது எங்களுக்கு உள்ள கூட்டணி 2021-ம் ஆண்டே இருந்திருந்தால் நாங்கள் அப்போது 110 இடங்களில் வெற்றி பெற்று இருப்போம். வரும் தேர்தலில் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

திமுக ஆட்சியில் 5 ஆண்டுகளும் சட்டம் ஒழுங்கு சரியில்லை, கஞ்சா மிகுந்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. கொங்கு பகுதிகளில் வயதானவர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். யாருக்கும் எந்த பாதுகாப்பும் இல்லை. 33 லாக்கப் மரணங்கள் நடந்துள்ளது. தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறவில்லை. பணப்பெட்டியை வாங்கிக் கொண்டுதான் திமுக கூட்டணியில் சேர்ந்து வருகிறார்கள். எங்கள் கூட்டணி வலுவாக உள்ளது, திமுக கூட்டணி வலுவிழந்து உள்ளது. இந்த நிலையில்தான் மக்கள் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள். அதிமுக - தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் தான் மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்ற முடியும் என மக்கள் நம்புகிறார்கள். நாங்கள் 200 இடங்களில் நிச்சயம் வெற்றி பெறுவோம். ஓபிஎஸ் மீது மதிப்பு வைத்துள்ளோம். எந்த பக்கம் இருந்தால் அவருக்கு நல்லது என்பதை அவர்தான் முடிவு செய்ய வேண்டும். திமுக அமைச்சர்கள் பலர் மீது நிறைய வழக்குகள் உள்ளது. அமைச்சர் கே.என். நேரு விவகாரம் தொடர்பாக நீதிமன்றம் கூறிய கருத்துக்குள் நாங்கள் செல்லவில்லை.

தொகுதி பங்கீடு தொடர்பாக இதுவரை நாங்கள் பேச்சுவார்த்தை தொடங்கவில்லை. பேச்சு வார்த்தை தொடங்கி கூட்டணி கட்சிகளுடன் பேசி இறுதி முடிவை எடுப்போம். தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய அனைத்து நிதிகளையும் மத்திய அரசு வழங்குகிறது. அனைத்து நிதிகளையும் பெற்றுக்கொண்டு, நிதி கொடுக்கவில்லை என தமிழக அரசு கூறுகிறது. ஆண்டுதோறும் ரூபாய் ஆயிரம் கோடி பேரிடருக்கான நிதியாக ஒதுக்கப்படுகிறது. கல்விக்கான நிதியும் ஒதுக்கப்பட்டு கொண்டுதான் உள்ளது. ஆதி திராவிடர் நலத் துறைக்கு கொடுக்கும் நிதியை வேறு துறைக்கு தமிழக அரசு பயன்படுத்து கிறது.”

மேலும் “பணப்பெட்டியை வாங்கிக் கொண்டு திமுக கூட்டணியில் சேர்ந்து வருகிறார்கள்” என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.

## மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த முற்பட்டால் தமிழ்நாடே கொந்தளிக்கும்: நிதியமைச்சர்

**சென்னை, பிப்.22:**



கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை யாரேனும் நிறுத்த முற்பட்டால் தமிழ்நாடே கொந் தளிக்கும் என்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு வெள்ளிக்கிழமை தமிழ்நாடு சட்டப்பேரவையில் உறுதி யாக தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசின் இடைக்கால பொது நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரையாற்றிய அவர், திமுக ஆட்சியின் சாதனை களை எடுத்துரைத்தார்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தை நடைமுறைப் படுத்த பல தடைகளும் சோதனை களும் எழுந்த போதிலும், இந்த ஆட்சி பதவியேற்றவுடன் முறையாகப் பயிற்சி பெற்ற 23 பேரை அர்ச்சகர் களாக நியமித்ததாக அவர் தெரி வித்தார். மாவட்டம்தோறும் தோழி விடுதி கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கான சிறப்பு நலத் திட்டங்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டங்கள் என அனைத்தும் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார். முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் பதவியேற்றவுடன் போட்ட முதல் கையெழுத்தே மகளிர் விடியல் பேருந்து திட்டம் என்று நினைவுகூர்ந்த அமைச்சர், பெண் களுக்கு பொருளாதார சுதந்திரம் வழங்கும் வகையில் விடியல் பயணம் திட்டம் தொடங்கப்பட்டதையும் வலி யுறுத்தினார். கலைஞர் மகளிர் உரி மைத் தொகை திட்டம் நாட்டிற்கே முன் னோடியாக விளங்குவதாகவும் அவர் பெருமிதம் கொண்டார். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் அளிப்பதில் இந்தியாவி லேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதாகவும், உயர்கல்வி மாணவர் சேர்க்கை தேசிய சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகமாக உள்ள தாகவும் அவர் தெரிவித்தார். பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம், பெற்றோரை இழந்த குழந்தை களை அரவணைக்கும் அன்புக்கரங் கள் திட்டம் ஆகியவற்றையும் அவர் எடுத்துரைத்தார். கடந்த ஐந்து ஆண்டுகளில் சாதி, மத மோதல்கள் எதுவும் இல்லா மல் தமிழ்நாடு அமைதியாக உள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் ஜல் ஜீவன் திட்டத் திற்கான நிதி வழங்குவதை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருப்பதை கண் டித்தார். கொரோனா நெருக்கடியை சமாளித்ததோடு மட்டுமல்லாமல், ஒன்றிய அரசால் ஏற்படுத்தப்படும் செயற்கை நிதி நெருக்கடிகளையும் திமுக அரசு வெற்றிகரமாக சமாளித்து வருவதாக தெரிவித்தார். மகளிர் உரிமைத் தொகையை யாரேனும் நிறுத்த முற்பட்டால் தமிழ்நாடே கொந்தளிக்கும் என்று உறுதியாக தெரிவித்த அவர், அந்தக் கொந்தளிப்பு உணர்வு இருக்கும்வரை தமிழ்நாட்டில் ஆட்சி செய்வது முத லமைச்சர் மு.க.ஸ்டாலினே என்று வலி யுறுத்தினார்.

## நவீன ரோபோடிக் அறுவை சிகிச்சை தொழில்நுட்பம்: போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையில் அறிமுகம்

**சென்னை, பிப்.22:**



போரூரில் உள்ள ஸ்ரீராமச் சந்திரா மருத்துவமனையில் சிக் கலான அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக, நவீன ரோபோடிக் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளதாவது: ஸ்ரீராமச் சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந் தர் வி.ஆர்.வெங்கடாசலம், ‘டாவின்சி எக்ஸ்ஐ அட்வான்ஸ்டு ரோபோடிக் சர்ஜிக்கல் சிஸ்டம்’ என்ற ரோபோடிக் தொழில் நுட்ப கருவியின் பயன்பாட்டை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீராமச் சந்திரா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை அறங்காவலர் சம் யுக்தா வெங்கடாசலம், துணை வேந்தர் மருத்துவர் உமா சேகர், இணை துணைவேந்தர் மருத்துவர் மகேஷ் வக்கமுடி, மருத்துவக் கல்லூரி தலைவர் மருத்துவர் கே.பாலாஜி சிங், பதிவாளர் மருத்துவர் எஸ்.செந்தில் குமார்.

மருத்துவ இயக்குநர் மருத்துவர் ஆர்.பி.சுதாகர் சிங், மருத்துவ கண்காணிப்பாளர் மருத்துவர் பி.சுரேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த ரோபோடிக் கருவியில் அறுவை சிகிச்சை நிபுணருக்கான கட்டுப்பாட்டு கன்சோல், நோயாளியின் பக்கத்தில் 3 முதல் 4 ரோபோடிக் கரங்களை கொண்ட கார்ட் மற்றும் 3டி எச்டி மற்றும் அறுவை சிகிச்சை நிபுணரின் கை அசைவுகளை உடனுக்குடன் துல்லியமாக பிரதிபலிக்க ஃபோர்ஸ் ஃபீட்பேக் உயர்தொழில்நுட்பம் உள்ளது.

சிக்கலான அறுவை சிகிச்சைகள் சாதாரண அறுவை சிகிச்சையுடன் ஒப்பிடுகையில் இந்த ரோபோடிக் தொழில்நுட்பத்தால் நோயாளிகள் விரைவாக குணமடையலாம்.

சிறிய அளவு காயங்கள், குறைந்த நோய் தொற்றுடன், மருத்துவமனையில் குறைந்த நாட்கள் இருப்பது போன்ற பலன்கள் கிடைக்கின்றன. புரோஸ்டேட் அகற்றுதல், கருப்பை அகற்றுதல், கொலோரெக்டல் அறுவை சிகிச்சை மற்றும் இதய மார்பு அறுவை சிகிச்சை உள்ளிட்ட பல சிக்கலான அறுவை சிகிச்சைகளை துல்லியமாக செய்வதற்கு பயன்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### பாடாய்ப் படுத்தும் இந்த ஜலதோஷத்தை நம்மால் தடுக்க முடியுமா?

எந்த ஒரு வலியையும் ஓரளவு சமாளிக்க முடிகிற பலரும், சளி தொல்லையை(COLD PROBLEM) மட்டும் சமாளிக்க முடியாமல் தங்கள் தூக்கத்தை தொலைப்பர். ஏன் இது நம்மை விடாமல் துரத்துகிறது? இதை முற்றிலும் தடுக்க முடியுமா? தெரிந்து கொள்வோம்.

ஜலதோஷம், சுவாசக் குழாயை பாதிக்கும் ஒரு வைரஸ் தொற்று. எளிதில் அனைவருக்கும் பரவக்கூடியது. இதனால் பாதிக்கப்பட்ட நபரின் இருமல், தும்மல் அல்லது பேசும்போது அவர்கள் வெளியிடும் நீர்த்துளிகளின்(AEROSOL DROPLETS) மூலம் இது வேகமாகப் பரவுகிறது.

சில்லென்று குளியல் போடுவதால் நமக்கு ஜலதோஷம் வருமா? நாம் குளிர்ந்த நீரில் குளிப்பதால் ஜலதோஷம் வருவதில்லை. இருப்பினும், குளிர்ந்த நீரில் குளிப்பது அல்லது குளிர்ந்த சூழலில் ஈரமாக இருப்பது உடல் வெப்பநிலையைக் குறைத்து, நோய் எதிர்ப்பு சக்தியை பலவீனப்படுத்தி வைரஸ்கள் பரவுவதை எளிதாக்குகிறது. இதைத் தடுக்க வெதுவெதுப்பான நீரில் குளிப்பதும் அதன் பின் உங்கள் உடலை நன்றாக துடைத்து கொள்வதும் நல்லது. இதை பின்பற்றினால் உங்களுக்கு தேவையான வலுவான நோய் எதிர்ப்பு சக்தியை வரவைத்து சளி பிடிப்பதை தடுக்க முடியும்.

காலம் முழுக்க நம்மால் இந்த ஜலதோஷத்தை தடுக்க முடியுமா?

ஜலதோஷத்தை முற்றிலுமாகத் தடுப்பது சவாலானது. காரணம், அதை ஏற்படுத்தும் பல்வேறு வகையான வைரஸ்கள் மற்றும் அவற்றின் உருமாறும் திறன் அவற்றை தடுப்பத்தை மிகவும் கடினமாக்குகிறது. இருப்பினும், நாம் நல்ல சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பது இதன் ஆபத்தை கணிசமாகக் குறைக்க உதவுகிறது. அதற்கு முதலில் அடிக்கடி கைகளை கழுவ வேண்டும் முடிந்தவரை, முகத்தைத் தொடுவதைத் தவிர்க்க வேண்டும். பின் நோய்வாய்ப்பட்ட நபர்களிடமிருந்து சமூக இடைவெளியை எதற்கும் தயங்காமல் பின்பற்ற வேண்டும். முடிந்தால் இருமல் மற்றும் தும்மல் வரும் நேரங்களில் டிஸ்ஸு தாள்கள்(TISSUE PAPERS), கைகுட்டைகள் அல்லது முழங்கைகளை பயன்படுத்துவது இந்த தொற்று உங்களிடமிருந்து மற்றவர்களுக்கு பரவாமல் தடுக்கும்.

ஜலதோஷத்திற்கு தடுப்பூசி இல்லை என்றாலும் சீரான உணவு, வழக்கமான உடற்பயிற்சி மற்றும் போதுமான தூக்கம் போன்ற ஓர் ஆரோக்கியமான வாழ்க்கை முறை நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துவதோடு, தொற்றுநோய்களுக்கு எளிதில் நீங்கள் மாட்டிக் கொள்ளும் வாய்ப்பையும் குறைக்கிறது. எனவே ஜலதோஷத்தை முற்றிலுமாகத் தடுப்பது சாத்தியமில்லை என்றாலும், இந்த நடவடிக்கைகள் மூலம் வாழ்நாள் முழுவதும் தொற்றுநோய்களின் தீவிரத்தை உங்களாலும் மற்றும் பிறருக்கு இதை அறிவுறுத்துவதாலும் இதன் தீவிரத்தை முற்றிலுமாக குறைக்க முடியும்.

குளிர்காலங்களில் நாம் என்ன செய்ய வேண்டும்:

நீரேற்றத்துடன் இருப்பதும் மற்றும் சத்தான உணவை உண்பதும் உங்கள் உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தை அதிகரிக்கும். அதற்கு நீங்கள் வசிக்கும் வீட்டின் உட்புற காற்றின் ஈரப்பதத்தை பராமரிப்பது மிகவும் முக்கியம். அதை செய்ய ஹுமிடிபைர்ஸ் (HUMIDIFIERS) பயன்படுத்துங்கள். இதனால் குளிர்காலங்களில் உங்கள் சுவாச குழாய்களில் உள்ள(MUCOUS MEMBRANES) ஜவ்வு போன்ற திரவத்தை ஈரமாக வைத்திருக்கும், இது வைரஸ் போன்ற கிருமிகளை பிடித்து வைத்து உடலுக்குள் போவதை முற்றிலும் தடுக்கிறது.

இந்த நடவடிக்கைகளை உங்கள் வீட்டில் மேற்கொள்வதால், ஜலதோஷத்தின் தாக்கத்தை திறம்பட குறைக்கலாம் மற்றும் குளிர் காலங்களில் உங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தாலும், நீங்கள் நேசிக்கும் உங்கள் வீட்டாருக்கு பரவாமல் பார்த்துக்கொள்ளலாம்.

ஆக, ஜலதோஷம் என்கிற சளி தொல்லை நம் வாழ்வில் ஓர் அங்கமாக மாறிவிட்டது. இதை தடுக்க முடியாவிட்டாலும், அதை சமாளிக்க கூடிய பழக்கத்தையாவது நாமும், மற்றவர்களும் தெரிந்து கொண்டு இதன் வீரியத்தையாவது குறைப்போம்!

## லாட்டரி விற்ற 6 பேர் கைது

நாகர்கோவில், பிப்.22:

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே இருளப்பபுரம் பகுதியில் நிதி நிறுவனம் என்ற பெயரில் ஆன்லைன் லாட்டரி விற்பனை செய்து வந்த 6 பேர் கொண்ட கும்பலை போலீசார் கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து 15 செல்போன், ஒரு லட்சத்து 68 ஆயிரம் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம் கல்லுக்குடி பகுதியை சேர்ந்த தினேஷ்பாபு (39),நெல்லை மாவட்டம் நாங்குநேரி பகுதியை சேர்ந்த வீரமணிகண்டன்( 27),கோவைகுளம் பகுதியை சேர்ந்த துரை(18), தூத்துக்குடியை சேர்ந்த மாடசாமி (30), நாங்குநேரி திருக்குறுங்குடி சேர்ந்த அரவிந்த் 29,),மற்றும் பொன்னாக்குடியை சேர்ந்த இசக்கி தவசி 18 ஆகிய ஆறு பேரை போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## சாக்கடை கழிவு நீரால் பொதுமக்கள் அவதி

நாகர்கோவில், பிப்.22:

நாகர்கோவில் பீச் ரோட்டில் கழிவுநீர் வெளியேறி அங்கேயே தேங்கிக்கிடப்பதால் சுகாதாரச்சீர்கேடு ஏற்பட்டுள்ளது. இதனை உடனடியாக அகற்றி சீரமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கழிவு நீர் நிரம்பி சாலை வழியாக செல்கிறது.

இதனால் துர்நாற்றம் வீசி, சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது. மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து கழிவுநீரை அகற்றி,தூய்மைப்படுத்த வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புறவியல் துறை கருத்தரங்கம்

தஞ்சாவூர், பிப்.22:

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், புதனன்று நாட்டுப்புறவியல் துறையின் சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் முது முனைவர் வ.அய். சுப்பிரமணியம் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவரது உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சீமான் இளையராஜா அனைவரையும் வரவேற்றார். நாட்டுப்புறவியல் துறையின் தலைவர் பேராசிரியர் இரா.காமராசு கருத்தரங்கின் நோக்கம் குறித்து நோக்கவுரை நிகழ்த்தினார்.

இக்கருத்தரங்கில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் முனைவர் செல்ல.பாலு, “பாமர மக்களின் நாட்டுப்புற உணர்வுகள்” எனும் தலைப்பிலும், முனைவர் மு. ஏழுமலை, “தெருக்கூத்துக் கலையும் கள ஆய்வு அனுபவங்களும்” எனும் தலைப்பிலும், முனைவர் பே. சக்திவேல், “கள ஆய்வு அனுபவங்களும் சிக்கல்களும்” எனும் தலைப்பிலும் உரையாற்றினர். முனைவர் மாலதி நன்றி கூறினார்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மாசி திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்!

தூத்துக்குடி, பிப்.22:

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மாசி திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.



அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் மாசித் திருவிழா இன்று அதிகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி கோயில் அதிகாலை 1 மணிக்கு நடை திறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 2 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், தொடர்ந்து கொடிப்பட்டமானது .


வெள்ளிப்பல்லக்கில் 9 சந்திகள் வலம் வந்து கோயிலில் அதிகாலை 5.05 மணிக்கு செப்புக்கொடிமரத்தில் காப்புகட்டிய கற்பகவீரக்குமார் பட்டர் கொடியினை ஏற்றினார். தொடர்ந்து கொடிமரத்துக்கு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரமாகி காலை 6.35 மணிக்கு மகா தீபாராதனை நடந்தது.

நிகழ்ச்சியில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ மத் தம்பிரான் சுவாமிகள், திருக்கோயில் இணை ஆணையர் ராமு, உதவி ஆணையர் மெய்வேல், கண்காணிப்பாளர் விவேக், ஏரல் சேர்மன் கோயில் பரம்பரை அக்தார் கருத்தப்பாண்டியன், இந்து முன்னணி மாநில துணைத்தலைவர் ஜெயக்குமார் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# வியாசர்பாடியில் 800 ஆண்டு பழமையான இரவீஸ்வரர் கோயிலில் இன்று கும்பாபிஷேகம்

சென்னை, பிப்.22:

வியாசர்பாடியில் சுமார் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த மரகதாம்பாள் உடனுறை இரவீஸ்வரர் கோயில் உள்ளது. சோழர் காலத்துக் கட்டிடக்கலைக் கும் ஆன்மிகச் சிறப்புக்கும் இக்கோயில் ஒரு சான்றாக விளங்கி வருகிறது பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, இந்து சமய அறநிலைய துறை சார்பில் நவீன ‘ஜாக்கி’ தொழில்நுட்பத்தைப்பயன்படுத்தி, ஒட்டுமொத்தக் கோயிலையும் தரைமட்டத்துக்கு உயர்த்திப் பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.




அதேநேரத்தில் கோயில் புனரமைப்புப் பணிகளும், புதிய கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வந்தன. இந்நிலையில், இப்பணிகள் அனைத்தும் நிறைவுற்ற நிலையில், நாளை (பிப்.22) மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. அந்த வகையில், கும்பாபிஷேக விழா கடந்த 16-ம் தேதி கணபதி பிரார்த்தனை, தேவதா அனுக்ஞை, யஜமான சங்கல்பத்துடன் தொடங்கியது.

தொடர்ந்து, கோ பூஜை, மகா கணபதி ஹோமம், தன பூஜை, நவகிரக ஹோமம், அங்குரார்ப்பணம், ரஷா பந்தனம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், ஆச்சார்ய வர்ணம், கும்பாலங்காரம், கலாகர்ஷணம், கலச புறப்பாடு மற்றும் முதல் கால பூஜை நடந்தது. அதனைத் தொடர்ந்து, நேற்று காலை விஷேச சந்தி, இரண்டாம் கால பூஜை, மூன்றாம் கால பூஜை நடைபெற்றது.

இதையடுத்து, (21-ம் தேதி) நான்காம் கால பூஜை, பூர்ணா ஹுதி, ஐந்தாம் கால பூஜை நடைபெற்றது. இந்நிலையில், விழாவின் முக்கிய நிகழ்வான மகா கும்பாபிஷேகம் பிப். 22-ம் தேதி (இன்று) நடைபெறுகிறது.

இன்று காலை 5 மணிக்கு ஆறாம் கால பூஜை, அவப்ருத யாகம், பரிவார யாக சாலை பூர்ணாஹுதி, ப்ரதான யாகசாலை, மஹா பூர்ணாஹுதி கலச புறப்பாடு நடைபெறுகிறது.

இதையடுத்து, இன்று காலை 8.30 மணிக்கு ராஜகோபுரம் அனைத்து விமானங்களுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. பின்னர், காலை 9 மணிக்கு மூலவர் சுவாமி அம்பாள் மகா கும் பாபிஷேகம் நடைபெறுகிறது.

தொடர்ந்து, மாலை 7 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும், அதனை தொடர்ந்து 9 மணிக்கு பஞ்சமூர்த்தி திருவீதி உலாவும் நடைபெறுகிறது.

கோயில் கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை, கோயில் செயல் அலுவலர் மா.ஆச்சி சிவப்பிரகாசம், மேலாளர் சு.தனசேகர் உள்ளிட்ட கோயில் அலுவலர்கள் முன்னின்று மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலையில் கோடைக்கால தரிசன ஏற்பாடுகள்

திருமலை, பிப்.22:

திருமலையில் கோடைக்கால தரிசன ஏற்பாடுகள் குறித்து தேவஸ்தான கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கய்ய சவுத்ரி கூறியதாவது:

கோடைக்கால தரிசன ஏற்பாடுகளை சிறப்பாக செய்திட வேண்டும். இதில் சாமானிய பக்தர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். கடந்த கோடையில் தினமும் 82,000 பக்தர்கள் வரை சுவாமி தரிசனம் செய்தனர்.

கடந்த ஜனவரியில் தினமும் சராசரியாக 74 ஆயிரம் பக்தர்கள் சுவாமியை தரிசித்துள்ளனர். இதை கருத்தில் கொண்டு சாமானிய பக்தர்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் தரிசன ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## பிப்.23 இல் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு மாவட்ட தேர்தல் அலுவலர் தகவல்

சென்னை, பிப்.22:

பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 19.12.2025 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதற்கிடையே, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீட்டிற்குப் பின்பு வாக்களார் பெயர் சேர்த்தல், திருத்தம் மற்றும் நீக்கம் உள்ளிட்ட பணிகளிலும், மேலும் எஸ்ஐஆர் திருத்தப் பணிகளில் முரண்பாடுகள் கண்டறியப்பட்ட இனங்களிலும் தகுதியான அனைத்து வாக்காளர்களும் இறுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்வதற்கு உரிய அவகாசம் வழங்கிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதனை பின்பற்றிட கூடுதல் அவகாசம் தேவைப்படுவதால், இந்திய தேர்தல் ஆணையம் எஸ்ஐஆர் திருத்தப் பணிகளுக்கு பிறகான இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாளை 6 நாட்கள் நீட்டித்து உத்தரவிட்டுள்ளது. இதன் நிமித்தமாக பெரம்பலூர் மாவட்டத்தில் பிப்.17 அன்று வெளியிடப்பட வேண்டிய இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.23 (திங்கட்கிழமை) அன்று வெளியிடப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் மிருணாளினி தெரிவித்துள்ளார்.

## முறைகேடாக நெல் மூட்டைகள் ஏற்றி வந்த 2 லாரிகள் பறிமுதல்

தஞ்சாவூர், பிப்.22:

தஞ்சாவூர் அருகே, முறைகேடாக நெல் மூட்டைகள் ஏற்றிச் சென்ற 2 லாரிகளை அலுவலர்கள் வியாழக்கிழமை பறிமுதல் செய்தனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழ் சம்பா கொள்முதல் பருவத்தில், விவசாயிகளுக்காக 609 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் விவசாயி அல்லாத நபர்களின் நெல் விற்பனை செய்வதைத் தடுப்பதற்காக, அலுவலர்கள் கொண்ட ஆய்வுக் குழுக்களை மாவட்ட ஆட்சியர் பா. பிரியங்கா பங்கஜம் சில வாரங்களுக்கு முன்பு அமைத்தார். இந்நிலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் துணை மேலாளர் டி. இளங்கோவன் தலைமையிலான குழுவினர் தஞ்சாவூர் அருகே புலவர்நத்தம் பகுதியில் வியாழக்கிழமை ஆய்வு செய்தார். அப்போது, திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வட்டத்துக்கு, தகுந்த ஆவணங்கள் இல்லாமல் 450 நெல் மூட்டைகள் ஏற்றிச் செல்லப்பட்ட லாரியை மூட்டைகளுடன் பறிமுதல் செய்து, அம்மன்பேட்டை நவீன அரிசி ஆலைக்கு அனுப்பி வைத்தனர். இதேபோல், மாரியம்மன் கோவில் அருகே புளியந்தோப்பு பகுதியில் வியாழனன்று முறையான ஆவணங்கள் இல்லாமல் 200 நெல் மூட்டைகள் ஏற்றி வந்த லாரியையும் பறிமுதல் செய்து, அம்மன்பேட்டை நவீன அரிசி ஆலைக்கு அனுப்பி, நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வியாபாரிகளிடமிருந்து முறைகேடாக நெல் மூட்டைகள் வருவது கண்டுபிடிக்கப்பட்டால், சட்ட ரீதியாக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# குறைந்த வேகத்தில் செயல்படும் கூகுள் குரோம்... மின்னல் வேகத்திற்கு செயல்பட வேண்டுமா!

இன்று இணையத்தைத் பயன்படுத்துபவர்களில் பெரும்பான்மையானவர்கள் கூகுள் குரோம் பிரவுசரைத் தான் நம்பியிருக்கிறார்கள். அலுவலகப் பணி முதல் பொழுதுபோக்கு வரை அனைத்திற்கும் இதுவே பிரதானமான வாசலாக உள்ளது. இருப்பினும், நாட்கள் செல்லச் செல்ல இந்த பிரவுசர் வேகம் குறைவதையும், அடிக்கடி செயல் இழந்து நிற்பதையும் நாம் கவனித்திருப்போம்.

குறிப்பாகக் குறைந்த RAM வசதி கொண்ட கணினி அல்லது லேப்டாப்களில் இது பெரிய தலைவலியாக மாறும். ஆனால் கூகுள் நிறுவனமே இதற்குத் தீர்வு காணும் வகையில் சில சோதனைக் கருவிகளை நமக்காக மறைத்து வைத்துள்ளது என்பது பலருக்கும் தெரியாது. உங்கள் பிரவுசரின் செயல்திறனைப் பல மடங்கு அதிகரிக்கக்கூடிய அந்த ரகசியப் பக்கத்தைப் பற்றியும், அதில் நாம் மாற்ற வேண்டிய முக்கிய செட்டிங்ஸ் பற்றியும் இந்தப் பதிவில் பார்க்கலாம்.

கூகுள் குரோம் பிரவுசரில் ‘FLAGS’ எனப்படும் ஒரு பகுதி உள்ளது. இது மேம்பாட்டாளர்கள் மற்றும் ஆர்வமுள்ள பயனர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு சோதனைக் களமாகும். இதை அணுகுவதற்கு உங்கள் பிரவுசரின் ADDRESS BAR சென்று CHROME://FLAGS என்று தட்டச்சு செய்து உள்ளே நுழைய வேண்டும். அங்கே தோன்றும் தேடல் பெட்டியில் நமக்குத் தேவையான வசதிகளைத் தேடி, அவற்றைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

1. கோப்புகளைப் மின்னல் வேகத்தில் பதிவிறக்க:

பெரிய அளவிலான கோப்புகளை



இணையத்திலிருந்து டவுன்லோட் செய்யும்போது அதிக நேரம் எடுப்பது வழக்கம். இதற்குக் காரணம் குரோம் இயல்பாக ஒரு கோப்பை ஒரே வரிசையாகப் பதிவிறக்கம் செய்வதே ஆகும். இதை மாற்ற #ENABLE-PARALLEL-DOWNLOADING என்ற வசதியைத் தேடி ஆன் செய்ய வேண்டும். இது ஒரு பெரிய கோப்பைப் பல சிறு துண்டுகளாகப் பிரித்து, ஒரே நேரத்தில் இணையான வழிகளில் பதிவிறக்கம் செய்ய அனுமதிக்கும். இதனால் டவுன்லோட் வேகம் பல மடங்கு அதிகரிக்கும்.

2. சீரான தடையில்லா பயன்பாடு:

இணையதளங்களில் உள்ள உயர்தரப் படங்கள் மற்றும் வீடியோக்களைக் கையாளும்போது பிரவுசர் திணறுவதைத் தவிர்க்க #ENABLE-GPU-RASTERIZATION என்ற செட்டிங் உதவும். பொதுவாக இணையப் பக்கங்களை ஏற்றும் சுமை கணினியின் CPU மீது இருக்கும். இந்த மாற்றத்தைச் செய்வதன் மூலம், அந்தப் பொறுப்பு கிராபிக்ஸ் கார்டுக்கு (GPU) மாற்றப்படும். இதனால் இணையப் பக்கங்களை மேலும் கீழும் நகர்த்தும்போது எவ்விதத் தடங்கலும் இன்றி மிக மென்மையாக இருக்கும்.

3. ஹேங் ஆவதைத் தவிர்க்க:

குறைந்த ஸ்டோரேஜ் வசதி கொண்ட கணினிகளில் பிரவுசர் அடிக்கடி பிரீஸ் ஆகி நிற்பதைத் தவிர்க்க #ENABLE-ZERO-COPY என்ற வசதி பயன்படுகிறது. இது திரையில் தகவல்களைக் காட்டும்போது நினைவகத்தின் பயன்பாட்டை வெகுவாகக் குறைக்கிறது. இதன் மூலம் கணினி ஹேங் ஆவது தவிர்க்கப்பட்டு, சீரான செயல்பாடு உறுதி செய்யப்படும்.

4. பக்கங்களை உடனடியாகத் திறக்க:

நாம் ஒரு இணையப் பக்கத்திலிருந்து முந்தைய பக்கத்திற்குச் செல்லும்போதோ அல்லது அடுத்த பக்கத்திற்கு நகரும்போதோ, அந்தப் பக்கம் மீண்டும் முதலிலிருந்து லோடு ஆவதை கவனித்திருப்போம். இது நேரத்தை வீணடிக்கும் செயலாகும். #BACK-FORWARD-CACHE என்ற வசதியைச் செயல்படுத்துவதன் மூலம், ஏற்கனவே பார்த்த பக்கங்கள் நினைவகத்தில் சேமிக்கப்பட்டு, நொடிப்பொழுதில் திரையில் தோன்றும்.

5. இணைய வேகத்தை அதிகரிக்க: இணைய வேகம் குறைவாக இருக்கும் இடங்களில் #ENABLE-QUIC என்ற நெறிமுறை பெரிதும் கைகொடுக்கும். இது இணைய தளங்களுடனான இணைப்பை ஏற்படுத்தும் நேரத்தைக் குறைத்து, பக்கங்களை வேகமாக ஏற்ற உதவுகிறது. இது கூகுளின் ஒரு நவீனத் தொழில்நுட்பமாகும்.

மேலே குறிப்பிட்டுள்ள மாற்றங்களைச் செய்த பிறகு, மாற்றங்கள் அமலுக்கு வர ‘RELAUNCH’ என்ற பட்டனை அழுத்தி பிரவுசரை மீண்டும் தொடங்க வேண்டும். இவை அனைத்தும் சோதனை அடிப்படையிலான வசதிகள் என்பதால், சில நேரங்களில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம். அப்படி ஏதேனும் சிக்கல் தோன்றினால், மீண்டும் அதே பக்கத்திற்குச் சென்று மாற்றங்களை பழைய நிலைக்குக் கொண்டுவர முடியும்.

இந்த எளிய தொழில்நுட்ப உத்திகளைக் கையாள்வதன் மூலம், உங்கள் பழைய பிரவுசரைப் புதியது போல வேகமாகவும், திறமையாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

# "பிரிய முடியாத உறவுகள்"

நகரம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து கொண்டிருந்தது.

நேற்று வரை வானம் தெரிந்த தெருவில், இன்று கான்கிரீட் கட்டிடங்கள் உயரஉயரமாய் முளைத்திருந்தன.

அக்கட்டிடங்களின் நடுவில் ஒரு பழைய ஓட்டு வீடு. சிதலமாகிப் போன சுவர்கள், சாய்ந்த கூரை, கதவில் துருப்பிடித்த பூட்டு.



"இதை மட்டும் இங்கிருந்து அக்ற்றி விட்டால் இந்த இடம் மெட்ரோபச்லிடன் சிட்டி போலாயிடும்... ஆனா இடிக்க விட மாட்டேங்கறாளே அந்தக் கிழவி..." என்று கட்டுமான நிறுவனத்தின் ஊழியர்கள் புலம்பினர்.

மூதாட்டி தினமும் வாசலில் நாற்காலி போட்டு அமர்ந்திருப்பாள். கையில் ஒரு குச்சி. கண்ணில் பயம் இல்லை. பிடிவாதம் மட்டும் நிறைய.
மாலை நேரம், கருப்புக் கார் ஒன்று அந்த ஓட்டு வீட்டின் முன் வந்து நின்றது. காரிலிருந்து இறங்கியவர் பெரிய தொழிலதிபர்.

அவர் சூழ்ச்சி இல்லாத சிரிப்புடன் வந்து, "அம்மா... இந்த இடத்துக்கு நல்ல விலை தர்றேன்... அதை வைத்து நீங்க நிம்மதியா வாழலாம்!" என்று தொடங்கினார்.
மூதாட்டி எதுவும் பேசவில்லை.

பெரியவரின் குரல் கடினமானது. "எனக்கு உன் கூடவெல்லாம் பேரம் பேச நேரமில்லை... நாளைக்குள் ஒத்துக்கலன்னா... சட்டம், போலீஸ், எல்லாம் வரும்."

மூதாட்டி மெதுவாக எழுந்தாள்.

அவரை வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள்.முதல் அறை. ஒரு பழைய மர அலமாரி."இதெல்லாம் கால் பந்து வீரரான என் கணவன் வாங்கிய கோப்பைகள்... இப்ப அவர் இல்லை."

அடுத்த அறை. சுவரில் தொங்கிக் கொண்டிருந்த புகைப்படத்தைக் காட்டினாள். அதில் ஒரு பத்து வயதுச் சிறுமி சிரித்துக் கொண்டிருந்தாள்.
"இந்த சிரிப்பு என் மகளுடையது.... பத்து வயசுல போயிட்டா."
மூன்றாவது மூலையில் மண்வாசனை வரும் ஒரு மரப் பெட்டி. "இதுல என் கணவர் மற்றும் மகளோட சாம்பலை அவங்களோட ஞாபகார்த்தமா வெச்சிருக்கேன்"

கடைசியில், உடைந்த கண்ணாடி, உதிர்ந்த கடிகாரம், மங்கிய தீபம், என எல்லாவற்றையும் காட்டி ஒவ்வோர் ஃப்ளாஷ்பேக் கதை சொன்னாள்.
"இதெல்லாம் என் உறவுகள். இதுகளைப் பொக்கிஷம் மாதிரிப் பாதுகாக்கிறேன்... எப்படி இதுகளை மாதிரி விற்க முடியும்?... விட்டுட்டுப் போய் வாழ முடியும்?"

பெரியவர் பேச முடியாமல் நின்றார். பணம்...முதல் முறையாகத் தோற்றது. வெளியே வந்தார். கார் கதவு மூடப்பட்டது. ஆனால் மனசு மட்டும் அங்கேயே தங்கியது.
அடுத்த நாள், அந்த இடத்தைச் சுற்றி கட்டிடம் எழுந்தது.
ஆனால் அந்த ஓட்டு வீடு அப்படியே இருந்தது.



**-முகில் தினகரன்**
கோயம்புத்தூர்.

# குழந்தையின் மனது !

செங்கல்பட்டு ஸ்டேஷனுக்குள் நுழைந்து டிக்கெட் வாங்கி படியேறினேன்.என் வலது கையைப் பிடித்தபடி ஏறிய என் பேத்தி , " தாத்தா ! இங்க பென்குயின் இருக்கு. காட்டறேன் வா ! " என்றாள்.

" அப்படியா, குழந்தே ! " என்ற என் காதில்என் மகள் , " அப்பா ! பார்த்தால் வாழ்க்கையே உங்களுக்குவெறுத்துப் போகும் " என்று கிசு கிசுத்தாள்.

கடைசி படியில் கால் வைத்து இறங்கி வலது பக்கமாக திரும்பியவுடன் சட் டென என்னிடமிருந்து தன் கையை உதறிக் கொண்ட பேத்தி , " தாத்தா ! பார்த்தியாபெங்குயின் !" இருகரம் தட்டி குதூகலுத்துடன் சிரித்தாள்.
மூன்றடி உயரத்தில் ஒரு பென்குயின் பொம்மை குப்பைத் தொட்டியாக நின்று கொண்டிருந்தது.
பேத்தியின் முகம் இன்னும் குதூக லுத்துடன் காணப்பட்டது ! " தாத்தா ! எப்படியிருக்கு பென்குயின் ? "
"ம். ஜோராயிருக்குடா.."
உடனே பேத்தி யின் முகம் சந்தோஷத்தில் விரிந்தது.
" நல்ல தாத்தா " எனச் சொல்லி என் கையில் முத்தமிட்டது.
குழந்தைக்கு மெய் எது, பொய் எது என்று தெரியாது. பார்ப்பதை மனத் தில் பதிய விட்டு அதன்படி ரியாக்ட் செய்யும். அதற்கு நாம் ஒப்புதல்அளிக் கும் பட்சத்தில் அதன் மனம் இரட்டிப்பு மகிழ்ச்சி அடையும்.
மாறாக நான் நெகடிவ்வாக அதன் கேள்விக்கு பதில் சொல்லியிருந்தேனானால் அதன் மனசு ஒடிஞ்சு போயிருக்கும். என்னிடம்பேசாது. வீடு வரை முகத்தைத் தூக்கி வச்சிட்டு வரும்.
இப்படித்தான் எனக்குத் தெரிந்த நண்பர்ஒருவரின் மகன். யாரிடமோ பணம் கடன் வாங்கிவிட்டு கடன் கொடுத்தவனைச் சந்திப்பதை தவிர்த்து வந்தான்.
ஒருநாள் கடன் கொடுத்தவன் கடன் வாங்கியவன் வீட்டுக்கு வர இருப்ப தாக தகவல் கிடைத்தது.
உடனே பதற் றமானவன் சமையல் கட்டில் வேலை யாக இருந்த தன் மனைவியிடம் , " ரம்யா, கொடுத்த கடனை




திருப்பிக் கேட்க பாவிப் பயல் இன்னும் அஞ்சு நிமிஷத்தில வரப் போறானாம். நான் படுக்கை ரூம்ல லாக் பண்ணி உள்ள இருந்துக்கிறேன். அவன் கேட்டால் நான் வெளியூர் போயிருக்கேன் வர நாலஞ்சி நாளாகும்னு சொல்லிஎப்ப டியாவது அவனை அனுப்பிவிடு !" என்றுவிட்டு சட்டென ஹாலை ஒட்டி இருந்த பெட்ரூமில் நுழைந்து லாக் செய்து கொண்டான்.
அடுத்த சில நிமிடங்களில் கடன் கொடுத்தவன் புயலெனநுழைந்தான். சத்தம் கேட்டு பட படப்புடன் கிச்சனிலி ருந்து வெளிப்பட்டாள் ரம்யா.
" உன் புருஷன் எங்கேம்மா ! கூப்பிடு அவனை. ரூபா 25000 வாங்கி ஆறுமா சம்ஆச்சு. வட்டியும் தரல்ல. இன்னிக்கு பணம் வாங்காம நகர மாட்டேன் " நாற் காலியில் வாகாக அமர்ந்துகொண் டான்.
" சார்..கொஞ்சம் பொறுத்துக்குங்க. அவர் பணம் புரட்ட வெளியூர் போயிரு க்கார். ஒரு வாரத்துக்குள் பணம் உங்கள் கைக்கு கிடைத்துவிடும்.."
" அப்படியா !" என்று அவன் எழுந்து கொண்ட நேரம் , ஹாலின்மூலையில் ஒரு இருக்கையில் அமர்ந்திருந்த ரம் யாவின் மகன் " ஐயோ..அம்மா ! ஒன க்கு ஒண்ணும் தெரியல்ல. அப்பா ரூமுக்குள்ளதான் இருக்காரு. வெளி யூரல்லாம்போகல்ல ..." உண்மையைப் போட்டு உடைத்தான். அதன் பிறகு ஒரு களேபரமே ஏற்பட்டது.
நடந்தது நாடகம் என்பதை குழந்தை அறிய நியாயமில்லை. தான் பார்த்ததை சரியாகச் சொல்லிவிட்டது.
குழந்தையாக இருக்கும்பொழுது அதன் மனத்தில் கள்ளம், கபடம் எதுவுமில்லை.வளர்ந்து பெரியவன் ஆகும்பொழுது மனம் வளர்ச்சி அடைகிறது. துன்பம், கவலை, மகிச்சி இவற்றை தரம் பிரித்து அதன்படி நடந்துகொள்கிறான். மனிதன் மகிழ்ச்சியாகவே இருந்துவிட்டால் வாழ்வில் சுவை ஏது ? துன்பம் இருந் தால்தான் இன்பத்தின் அருமை தெரியும் ! நிழலின் அருமை வெய்யி லால் தெரிவது போல். சில சமயம் எல்லாம் தலைக்குமேல் போகும்பொழுது மனிதனுக்கு விரக்தி ஏற்படுகிறது.
' பிள்ளையாய் இருந்துவிட்டால் இல்லை ஒரு துன்பமடா ' கண்ணதாசனின் வைர வரிகளில் எத்தனை எதார்த்தம் ! நடப்பதை எழுதி வைத்துவிட்டு ஒரு தீர்க்கதரிசியாய் சென்றிருக்கிறார்.
" அப்பா ! எப்பவும் கல கலப்பாய் இருப்பீர்கள். இன்னிக்கு மௌனமாக இருக்கீற்கள் ! " டிரெயின் ஓடிக்கொ ண்டிருக்க மகள் கேட்டாள்.
என் பக்கத்தில் ஜன்னலோரம் உட் கார்ந்திருந்த பேத்தி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.
மகளின் கேள்விக்கு பதில் ஒன்றும் கூறாமல் நானும் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்தேன்.
இரயில் ஒரே சீராக ஓடிக்கொண்டிருந்தது.



**- வி.கே.லக்ஷ்மிநாராயணன்**
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# காலம் மறந்த பொக்கிஷங்கள் !!

.A.S.GOVINDA RAJAN

## பாண்டி ஆட்டம்....!

குழந்தைப் பருவம் என்பது ஓடி ஆடி விளையாட வேண்டிய பருவம் ஆகும். தற்போது இருக்கும் குழந்தைகளுக்கு விளையாட்டுகள் என்னவென்று தெரியாமல் கூட வீட்டிற்குள் அடைந்து இருக்கின்றன.

ஆனால் கிராமப்புறங்களில் விளையாடும் பழைய விளையாட்டுக்களை குழந்தைகள் மறந்து விட்டனர். குழந்தைகள் சுறுசுறுப்பாகவும், ஆர்வமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க விளையாட்டு என்பது அவசியமாக இருக்கிறது.

குழந்தைகளுக்கு புத்துணர்ச்சி அளித்து சோம்பலைத் தவிர்த்து விளையாடும் பண்டைய விளையாட்டுகளில் ஒன்று தான் பாண்டி ஆட்டம் ஆகும்.
எத்தனை பேர் விளையாடலாம்?
இருவர் அல்லது



அதற்கு மேற்பட்டோர் விளையாடலாம்.

**விளையாட தேவையானது :**

சிப்பி அல்லது ஓடு.
எப்படி விளையாடுவது?
பாண்டி ஆட்டம் என்பது சிறுவர், சிறுமியர் விளையாடும் ஒரு விளையாட்டு ஆகும். மண்தரையாக இருந்தால் இந்த விளையாட்டு விளையாடுவதற்கு நன்றாக இருக்கும். பத்து கட்டங்களைப் போட்டுக்கொள்ள வேண்டும். பிறகு சிப்பி ஒன்றை விளையாடும் நபர் கையில் வைத்துக்கொள்ள வேண்டும்.
முதலில் சிப்பியை ஒன்றாவது கட்டத்தில் போட்டு விட்டு அவற்றை எட்டு அல்லது பத்து கட்டங்களுக்கும் நொண்டி அடித்து செல்ல வேண்டும். பிறகு மறுபடியும் மீண்டும் எட்டாவது கட்டத்தில் இருந்து நொண்டி அடித்தவாறு இரண்டாவது கட்டத்தில் நின்றுக் கொண்டு ஒன்றாவது கட்டத்தில் இருக்கும் சிப்பியை எடுக்க வேண்டும்.

பின்பு இதே மாதிரி இரண்டு, மூன்று நான்கு என ஒவ்வொரு கட்டமாக சிப்பியை போட்டு இதை போன்று விளையாட வேண்டும். இவ்வாறு விளையாடி முடித்த பிறகு சிப்பியை எட்டாம் கட்டத்தை தாண்டி போட வேண்டும். நொண்டி அடித்தவாறு ஒவ்வொரு கட்டமாக சென்று, காலால் எற்றித்தள்ளி சிப்பியை மிதிக்க வேண்டும்.
இந்த விளையாட்டை விளையாடுவதற்கு எட்டு அல்லது
எட்டு கட்டங்கள் முடிந்த பிறகு ஆட்டம் கொஞ்சம் கடினமாக இருக்கும். சிப்பியை தலை மற்றும் கழுத்துப் பகுதியில் வைத்து கண்களை மூடிக்கொண்டு ரைட்டா, ரைட்டா என்று கேட்டவாரே கோடுகளை மிதிக்காமல் செல்ல வேண்டும். கடைசியில் தலைக்கு மேல் கையை கொண்டு சிப்பியை வீசும் போது 'வெயிலா, மழையா (அல்லது) யானையா, பூனையா" என்று பாடிக் கொண்டு சிப்பியை வீச வேண்டும்.

இதை எல்லாம் விளையாடி முடித்தால் எட்டு கட்டங்களில் ஒரு கட்டம் அவர்களுக்கு சொந்தமாகும். விளையாடும் போது அதில் அவர்கள் காலை ஊன்றிக்கொள்ளலாம். மற்றவர்கள் அதை தாண்டி தான் செல்ல வேண்டும்.

**விதிமுறைகள் :**

சிப்பி கட்டம் தவறி விழக்கூடாது.

**பயன்கள் :**

இழப்பில் ஈடுகட்டும் ஆற்றலைத் தரும்.
தன்னம்பிக்கையைத் தரும்.
உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

# ஜாதகத்திற்கு பூஜை நடைபெறும் கோவில்

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகில் உள்ள பெருங்குளத்தில் வழுதீஸ்வரர் கோவில் உள்ளது வளர்பிறை பிரதோஷத்தன்று பள்ளியறை பூஜையில் ஜாதக நகலை வைத்து வழிபட்டால் வேலை திருமணம் குழந்தை பேரு போன்ற வேண்டுதல்கள் நிறைவேறும் இப்பகுதியை ஆட்சி செய்த மன்னர் திருவழுதி பாண்டியன் 12 ஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வாரின் முன்னோர் இவர் என்பார்கள் இவரால் கட்டப்பட்டது இந்த பழுத்தீஸ்வரர் கோவில் அம்பிகையின் பெயர் கோமதி அம்பிகை



அம்பிகை சன்னதியின் அர்த்த மண்டபத்தில் ஒரு மகரிஷியின் சிலை உள்ளது பட்டாபிஷேகத்தின் போது குல குருவிடம் செங்கோல் பெற்று மன்னர்கள் அரசாட்சியை ஏற்பது வழக்கம் அந்த வகையில் மன்னர்களுக்கு செங்கோல் வழங்கிய ஆதீனம் இங்கு உள்ளது கணபதி சண்முகர் தக்ஷிணாமூர்த்தி சப்த கன்னியர்கள் நடராஜர் சண்டிகேஸ்வரர் சன்னதிகள் உள்ளன இங்குள்ள விஷ்ணு துர்க்கையை வழிபட்டால் வெற்றி கிடைக்கும் ஊருக்கு அருகில் பெரியகுளம் இருப்பதால் இதற்கு பெருங்குளம் என பெயர் பெற்றது பெருங்குளம் ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தூத்துக்குடியில் இருந்து 31 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது .



பெருங்குளம், இன்று ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகேயுள்ள அழகிய கிராமம், ஆனால் அன்று பாண்டிய நாட்டிலிருந்த பதினாறு நாடுகளில் திருவழுதி வளநாடு என சிறப்புற்றிருந்தது.

இவ்வூரிலுள்ள சிவாலயத்தின் இறைவர் இவ்வூரின் பெயரால் அழைக்கப்படுகிறார், மாறன் சடையன் காலத்திய கல்வெட்டுகளில் "திருவழுதீஸ்வரத்து ஆழ்வார்" என்றும், பின் இராஜராஜன் காலத்தே "திருவழுதீஸ்வரமுடையார்" என்றும், குலசேகர பாண்டியன் காலத்தே "திருவழுதீஸ்வரத்து தேவர் " என்றும் அழைக்கப்படுகிறார் ! எனினும் இன்றும் திருவழுதீஸ்வரமுடையார் என்றே அழைக்கப்படுவது தொன்னிகழ்வு இன்றும் தொடர்வதைக் காணலாம். தனித்தனியே சுவாமி சன்னதியும், அம்பிகை தனி ஆலயத்திலுமாக அமைந்துள்ளது இக்கோவில். சுவாமி சன்னதியின் கருவறை பெரிதாகவும், த்விதள விமானம் என்னும் ஈரடுக்கு விமானமும், கருவறையைச் சுற்றி அந்தராளப் பிரகாரம் என்னும் பாண்டியர் கட்டுமானத்திற்கே உரிய சிறப்பு அமைப்பும் இவ்வாலயத்தில் உள்ளது.

கல்வெட்டு சிறப்பு

இவ்வாலயத்தின் கல்வெட்டுகளில் சடையன்மாறனின் பொ.யு 816ம் ஆண்டு கல்வெட்டு கோவிலின் பழைமையை பறைசாற்றுகிறது .

இவ்வாலயத்தின் படியெடுக்கப்பட்ட 33 கல்வெட்டுகளில் 16 கல்வெட்டுகள் விளக்கெற்றுவது குறித்தும், 13 நில தானம் பெறப்பட்டது குறித்தும், ஒரு கல்வெட்டு இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு உணவளிப்பது குறித்தும், ஒன்று விவசாயி ஒருவர் கொடுத்த இசைக்கருவி குறித்தும், இரண்டாம் இராஜராஜன் காலத்திய ஒரு கல்வெட்டு இவ்வாலயத்தில் சித்திரை மாத சதயத்தில் திருவிழா நடத்த அரங்கன் சந்திரசேகரன் என்பவர் கொடுத்த காசுகள் குறித்துமுள்ளது, சடையன் மாறனின் 24ம் (பொ.யு.829) ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று மிகவும் சிதைந்த நிலையிலுள்ளது

கல்வெட்டுகளின் பட்டியல்

ஆட்சியாளர்களின் வரிசைப்படி

1. சடையன் மாறன் 5
2. மாறன் சடையன் 1
3. சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் 2
4. முதலாம் இராஜராஜன் 4
5. இரண்டாம் இராஜராஜன் 3
6. ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் 1
7. முதலாம் குலோத்துங்கன் 3
8. ஜடாவர்மன் ஸ்ரீவல்லபன் 1
9. ஜடாவர்மன் குலசேகரன் 3
10. சுந்தரபாண்டியன் 4
11. மாறவர்மன் குலசேகரன் 1
12. விக்கிரம பாண்டியன் 1
13. கோநேரின்மை கொண்டான் 2
14. அரசர் பெயர் குறிப்பிடாத இரண்டு கல்வெட்டுகள்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி.

தினம் ஒரு தலைவர்கள்

# அஜய் குமார் கோஷ் வரலாறு

அஜய் குமார் கோஷ் 20 பிப்ரவரி 1909 13 ஜனவரி 1962[1]) ஓர் இந்திய விடுதலை இயக்க வீராராவார். இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் முக்கிய தலைவரான இவர் 1954 முதல் 1962 வரை அக்கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார்.

ஆரம்ப கால வாழ்க்கை

கோஷ், இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள வர்தமான் மாவட்டத்தின் மிகிஜம் என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் தனது தந்தை மருத்துவர் சசீந்திரநாத் கோஷுடன் கான்பூருக்குச் சென்றார்.

அரசியல் வாழ்க்கை

1926 இல் அலகாபாத் பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கு முன் கோஷ் பகத்சிங்கையும் பதுகேஷ்வர் தத்தையும் சந்தித்தார். இந்துசுதான் சோசலிசக் குடியரசு அமைப்பின் உறுப்பினராக இருந்தார். 1929 இல் இலாகூர் சதி வழக்கு விசாரணைக்குப் பிறகு இவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் ஆதாரங்கள் இல்லாததால் விடுவிக்கப்பட்டார்.



1931 இல் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் சீனிவாஸ் சர்தேசாயுடன் தொடர்பு கொண்டார். விடுதலையான பிறகு இந்தியப் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தார். 1934 இல், இவர் கட்சியின் மத்திய குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டா. மேலும், 1936 இல் அதன் அரசியல் பணியகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1938ஆம் ஆண்டில், கோஷ் கட்சியின் அடையாள பத்திரிக்கையான நேஷனல் பிரண்ட்டின் ஆசிரியர் குழுவில் உறுப்பினரானார். 1951 முதல் 1962 இல் தான் இறக்கும் வரை கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார்.

இவர் 1962 ல் இந்திய சீனப் போரின் போது கட்சிக்கு தலைமை தாங்கினார். சீன மக்கள் குடியரசுக்கு பதிலாக இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரித்தார். இந்தியப் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) பிளவுபடுவதற்கு முன்பு இவர் மையப் பிரிவின் முக்கிய நபராக இருந்தார்.

# ‘சிவ சம்போ’

## திரைவிமர்சனம்




கதாநாயகனுக்கு நாயகி மீது காதல் ஏற்படுகிறது. ஆனால், கதாநாயகியோ கடந்த கால சச்சரவான சில சம்பவங்களால் தனது காதலை அவனிடம் சொல்லத் தயங்குகிறாள். சில நாட்களில் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொள்கிறார்கள்.

இது கடந்தகால கதையாக இருக்க, நிகழ்காலத்தில் நாயகன் தன் மனைவி இறந்துவிட்டதாக கருதி அதற்கு காரணமானவர்களை பழி வாங்கப்பட்டதாக திரைக்கதை பரபரக்கிறது.

கதாநாயகிக்கு நேர்ந்த கசப்பான அனுபவம் என்ன? அவள் இறப்புக்கு காரணம் என்ன? என்பது படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

ஹீரோ தில் நட்ராஜ் கதையில் போலீஸ் ஆஃபீஸர் என்றாலும் அதற்கேற்றபடி மிடுக்கான தோற்றத்தை ஓரளவுக்கு கொடுக்கிறார். காதல் மனைவியை சீரழித்தவர்களை பழி வாங்க களமிறங்கும்போது கோபத்தின் உச்சத்தை காட்டுகிறார். இன்னும் கொஞ்சம் இயல்பாக நடித்திருக்கலாம்.

கிராமத்து லட்சணம் கொண்ட ஹீரோயின் ஷிவானி காதலும் காதல் சார்ந்த காட்சிகளில் நடித்திருப்பது பரவசமாக இருக்கிறது.

இப்படத்தை இயக்கியிருக்கிற பகவதி பாலா அப்பாவி பெண்களைக் குறிவைத்து, விதவிதமான தோற்றங்களில் சென்று, அவர்களை திருமணம் செய்து அடிமையாக்கி, தவறான செயல்களுக்கு பயன்படுத்தும் கொடூர வில்லனாக தெரிகிறார். மோசடிப் பேர்வழிகளுக்கு உதவுகிறவராக காமெடி நடிகர் செந்தில் காட்டும் வில்லத்தனம் பரவாயில்லை.

**இயக்கம்**

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஒரே நபர் பலரை திருமணம் செய்கிற மோசடி விவகாரத்தை விவகாரத்தை கிரைம் திரில்லர் படமாக கொடுத்திருக்கிறார் இயக்குநர் பகவதி பாலா. படத்தில் குறைகள் காணப்டுகிறது. திரைக்கதையில் கூடுதல் கவனம் செலுத்தி இருக்கலாம்.

**இசை**

பாடல் வரிகளுக்கு இசை மெருகூட்டியிருக்கும் ஏ.சி ஜான்பீட்டரும், பின்னணி இசையை காட்சிகளுக்குப் போதுமானதாக கலந்திருக்கிறார் தேவா.

**ஒளிப்பதிவு**

ஒளிப்பதிவில் கவனம் செலுத்தி இருக்கலாம்.

ரேட்டிங்–2/5



பாரதி கண்ணம்மா சீரியல் மூலம் சின்னத்திரையில் அறிமுகமாகி பின் பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியலில் முல்லை கதாபாத்திரத்தில் நடித்து பிரபலமானவர் நடிகை காவ்யா அறிவுமணி. பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியலில் இவருக்கு கிடைத்த வரவேற்பு காரணமாக வெள்ளித்திரையில் நடிக்கும் வாய்ப்பை பெற்றார்.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை காவ்யா, தற்போது மகாராணி போல் வேடமிட்டு போட்டோஷூட் நடத்தியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

# பரோட்டா-பீப் கறி திருவிழா.. ‘தி கேரளா ஸ்டோரி 2’வை வைத்து செய்யும் மலையாளிகள்




சுதிப்தோ சென் இயக்கத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு வெளியான படம் 'தி கேரளா ஸ்டோரி'.

கேரளாவில் 32,000 இந்துப் பெண்கள் முஸ்லிம் மதத்துக்கு மத மாற்றம் செய்யப்பட்டு, பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டதாக இந்த படம் சித்தரித்தது.

வெளியான சமயத்தில் நாடு முழுவதும் இப்படம் பெரும் பதற்றத்தை இப்படம் ஏற்படுத்தியது.

தொடர்ந்து மத்திய அரசு வழங்கும் 2023ம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகளில் 2 தேசிய விருதுகள் இப்படத்துக்கு வழங்கப்பட்டதும் விமர்சனத்துக்கு உள்ளானது.

இந்நிலையில் 'தி கேரளா ஸ்டோரி' படத்தின் 2 ஆம் பாகம் உருவாகி உள்ளது. காமக்யா நாராயண் சிங் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படம் வரும் பிப்ரவரி 27-ஆம் தேதி வெளியாக உள்ளது.முதல் பாகத்தினைப் போலவே டிரெய்லரில் சர்ச்சை வசனங்கள் மற்றும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இந்து பெண்களை இஸ்லாமிய மதத்துக்கு மாற்றுவதும், இந்துப் பெண்ணிற்கு வலுக்கட்டாயமாக மாட்டிறைச்சி ஊட்டும் காட்சியும் இடம்பெற்றுள்ளது.

கேரளாவின் உணவு கலாச்சாரத்தில் 'பீப்-பரோட்டா' என்பது அனைத்து மதத்தினரிடையேயும் பிரபலமானது. அங்கு யாரும் யாருக்கும் கட்டாயப்படுத்தி உணவளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி சமூக ஊடகங்களில் கேரள மக்கள் இந்தப் படத்தின் காட்சியை விமர்சித்து வருகின்றனர்.

கேரள சுற்றுலாத் துறை "No Beef With Anyone" (யாருடனும் எங்களுக்குப் பகை இல்லை) என்ற வாசகத்துடன் ஒரு போஸ்டரைப் பகிர்ந்துள்ளது.

சிபிஐ(எம்) கட்சியின் இளைஞர் அமைப்பான DYFI மற்றும் மாணவர் அமைப்பான SFI ஆகியவை மாநிலம் முழுவதும் 'பீப் திருவிழா' நடத்தித் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தன. திருவனந்தபுரம் உள்ளிட்ட இடங்களில் பீப் கறியும் பரோட்டாவும் பொதுமக்களுக்குப் பரிமாறப்பட்டன.

கேரளாவின் மதச்சார்பற்ற பிம்பத்தைச் சிதைக்கவும், மத வெறுப்பைத் தூண்டவும் இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். முதல்வர் பினராயி விஜயன் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "கேரளா மத நல்லிணக்கம் மற்றும் சட்ட ஒழுங்கிற்கு முன்மாதிரியான மாநிலம். இத்தகைய பொய்யான பரப்புரைகளை மக்கள் ஒட்டுமொத்தமாக நிராகரிக்க வேண்டும்" என்று தெரிவித்தார். காங்கிரஸ் தலைவர் கே.சி.வேணுகோபால், "பொய்க் கதைகளை உருவாக்கி கேரளாவை அவமானப்படுத்தும் முயற்சி இது" என்று கூறியுள்ளார். மேலும், படத்தின் முதல் பாகத்திற்கு தேசிய விருது வழங்கி பாஜக இத்தகைய படங்களை ஊக்குவிப்பதாகக் குற்றம் சாட்டினார். கேரள மாநில பாஜக தலைவர் ராஜீவ் சந்திரசேகர், இது கருத்து சுதந்திரம் என்றும், முதல்வர் பினராயி விஜயன் இரட்டை வேடம் போடுவதாக விமர்சித்தார்.

கேரளாவின் கலாச்சார ஒருமைப்பாடு மற்றும் மதச்சார்பற்ற பாரம்பரியத்தின் மீது இந்தப் படம் தாக்குதல் நடத்துவதாக பெரும்பான்மையானோர் கருதுகின்றனர்.

இதற்கிடையே இந்த படத்துக்கு வாங்கப்பட்ட தணிக்கை சான்றிதழை ரத்து செய்ய கோரி கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

# ‘டிராகன் – 2’ பட அப்டேட் கொடுத்த பிரதீப் ரங்கநாதன்!




டிராகன் படம் வெளியாகி ஓராண்டு நிறைவடைந்துள்ளது.

2 டிராகன் படம் கொண்ட புகைப்படத்தை பிரதீப் ரங்கநாதன் பகிர்ந்துள்ளார்.

இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து மற்றும் பிரதீப் ரங்கநாதன் கூட்டணியில் வெளியான டிராகன் திரைப்படம் மாபெரும் வெற்றியை பெற்றது. ரூ.100 கோடி வசூலை கடந்து இப்படம் சாதனை படைத்தது.

இந்நிலையில், டிராகன் படம் வெளியாகி ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், 'டிராகன்– 2' பட அப்டேட்டை பிரதீப் ரங்கநாதன் கொடுத்துள்ளார். 2 டிராகன் படம் கொண்ட புகைப்படத்தை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்து விரைவில் என்று பிரதீப் ரங்கநாதன் பதிவிட்டுள்ளார்.

அதே போல், டிராகன் பட இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து தனது எக்ஸ் பதிவில், "டிராகன் வெளியாகி ஓராண்டு நிறைவடைந்து உள்ளது. Self made star பிரதீப் ரங்கநாதனுடன் பணியாற்றியது சிறப்பாக இருந்தது. மீண்டும் ஒருமுறை இந்த காம்போ ஒன்றிணையவுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.



தமிழ் சினிமா ரசிகர்கள் கொண்டாடும் முன்னணி நாயகிகளில் ஒருவர் தான் நடிகை தமன்னா.

சினிமாவில் என்ட்ரி கொடுத்து 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் முன்னணி நாயகி அந்தஸ்திலேயே வெற்றிகரமாக வலம் வருகிறார்.

ஹோம்லி, கிளாமர் எந்த லுக் கொடுத்தாலும் அசத்தும் நடிகை தமன்னா சமீபத்தில் பிரம்மாண்டமாக நகை கடையை திறந்தார். அதன்பின் தமன்னா சிவராத்திரி கொண்டாட்டத்தில் இணைந்த புகைப்படங்கள் வெளியாகி வைரலானது.

தற்போது நடிகை தமன்னா சிம்பிளான லுக்கில் போஸ் கொடுத்த புகைப்படங்கள் தான் வெளியாகியுள்ளது.

# ஜிம்மில் உடற்பயிற்சி செய்யும் புகைப்படங்களை பகிர்ந்த விஷால்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விஷால், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் இருக்கிறார்.

நடிகர் சங்கத்துக்கு கட்டிடம் கட்டப்பட்ட பின்னரே நான் திருமணம் செய்துகொள்வேன் என்று அறிவித்தார். தற்போது நடிகர் சங்க கட்டிடம் கட்டும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது.

நடிகர் விஷாலும், நடிகை சாய் தன்ஷிகாவும் தற்போது காதலித்து வருகின்றனர். விரைவில் இருவரும் திருமணம் செய்துகொள்ளவுள்ளனர்.

அண்மைய காலமாக விஷால் ஜிம்மில் தொடர்ச்சியாக உடற்பயிற்சி மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில், ஜிம்மில் உடற்பயிற்சி செய்யும் புகைப்படங்களை விஷால் தனது இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

# நடிகை கேப்ரியல்லாவின் சொத்து மதிப்பு.. அடேங்கப்பா இவ்வளவு கோடியா



பிக் பாஸ் 4ல் போட்டியாளராக கலந்துகொண்ட நடிகை கேப்ரியல்லா 102 நாட்கள் வீட்டில் இருந்தார். இறுதியில் ரூ. 5 லட்சம் பணப்பெட்டியை எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்து வெளியேறினார். பணப்பெட்டி ரூ. 5 லட்சம், பிக் பாஸ் வீட்டில் இருந்ததற்காக ரூ. 15 லட்சம் சம்பளம் என மொத்தமாக ரூ. 20 லட்சத்துடன் வெளியே வந்தார்.

இதன்பின் ஈரமான ரோஜாவே 2 சீரியலில் கதாநாயகியாக நடிக்க தொடங்கிய கேப்ரியல்லாவுக்கு ஒரு நாளைக்கு ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை சம்பளம் தரப்பட்டதாக சொல்லப்படுகிறது. ஈரமான ரோஜாவே 2 சீரியலின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து தற்போது சன் டிவியில் ஒளிபரப்பாகி வரும் மருமகள் சீரியலில் கதாநாயகியாக நடித்து வருகிறார். இந்த சீரியலில் நடிக்க இவர் ஒரு நாளைக்கு ரூ. 20,000 முதல் ரூ. 30,000 வரை சம்பளம் வாங்கி வருகிறாராம்.

### சொத்து மதிப்பு

இதுமட்டுமின்றி இன்ஸ்டாகிராம் போஸ்ட், பிராண்ட் புரொமோஷன் ஆகியவற்றின் மூலமாகவும் சம்பாதித்து வருகிறாராம். இதன்மூலம் மாதம் ரூ. 5 லட்சம் முதல் ரூ. 7 லட்சம் வரை நடிகை கேப்ரியல்லா வருவாய் ஈட்டி வருகிறார் என தகவல் கூறப்படுகிறது. இந்த நிலையில், கேப்ரியல்லாவின் மொத்த சொத்து மதிப்பு ரூ. 3 கோடி முதல் ரூ. 5 கோடி வரை இருக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால், இது எந்த அளவிற்கு உண்மையான தகவல் என்று தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# லவ் ஷேர் சப்ஸ்கிரைப் திரைவிமர்சனம்




தன்னுடன் படிக்கும் கல்லூரி தோழியான வடமாநில பெண் சிம்ரன் அத்வானியை ஆதவ் கிருஷ்ணா காதலிக்கிறார். இருவரும் திருமணம் செய்துக்கொள்ள முடிவு செய்கின்றனர். சிம்ரனின் பெற்றோர் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். காசியில் இருக்கும் தனது அம்மாவிடம் ஆதவை அறிமுகம் செய்ய அங்கு அழைத்துச் செல்கிறார்.

ஆனால், செல்லும் வழியிலேயே சிம்ரன் காணாமல்போய் விடுகிறார். இது வீட்டிற்கு தெரியவர சிம்ரனின் தந்தை ஆதவை சந்தேகப்படுகிறார். மிரட்டுகிறார். இறுதியில், ஹீரோயினுக்கு என்ன ஆனது? காதலர்கள் இணைந்தார்களா ? என்பது படத்தின் மீதிக்கதை.

### நடிகர்கள்

ஹீரோவின் கதாப்பாத்திரம் பெரிதாக ஈர்க்கவில்லை. ஹீரோயினை காதல் செய்கிறார். போலீசிடம் அடி வாங்குகிறார். ஹீரோயிசம் இல்லை. அழகாக வந்து செல்லும் ஹீரோயினின் கதாப்பாத்திரம் முற்பகுதியில் காட்சிகள் இருந்தாலும் பிற்பகுதியில் பெரிதாக வேலை இல்லை. ஹீரோயின் அம்மாக வரும் வினோதினி சில சீன்கள் ஓரளவு ரசிக்க முடிகிறது.

### இயக்கம்

காதல்- கடத்தல்- அடிதடி- முடிவு என்கிற அடிப்படையில் படத்தை எடுக்க முயற்சித்திருக்கிறார் இயக்குனர் மகாலட்சுமி முருகன். படத்தின் முதல் பாதி நல்ல காதல் கதை உள்ள படத்திற்கு வந்து விட்டோம் என்ற உணர்வை தருகிறது. ஒரு நல்ல காதல் கதையை கையில் எடுத்து கொண்டு, முடிக்க தெரியாமல் முடித்திருக்கிறார். திரைக்கதையில் கூடுதல்

### ஒளிப்பதிவு

ஒளிப்பதிவாளர் என்.எஸ்.சதீஷ்குமார் காசியை வண்ணமயமாக காண்பித்திருக்கிறார்.

### இசை

படத்தின் பாடல்கள் எதுவும் ரசிக்கும்படி இல்லை.

ரேட்டிங்-2/5

# அறிவான்- திரைவிமர்சனம்




நேர்மையான போலீஸ் இன்ஸ்பெக்டரான ஆனந்த் நாக், சர்ச்சை காரணமாக புதிய காவல் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்படுகிறார். பொறுப்பேற்ற சில நாட்களிலேயே அப்பகுதியில் ஒரு சந்தேக மரணம், அதனைத் தொடர்ந்து கழுத்து அறுபட்ட நிலையில் ஒரு கொலை  இரண்டு சம்பவங்களிலும் ஒரே கார் தொடர்பு இருப்பது விசாரணையை தீவிரப்படுத்துகிறது.

இந்த வழியில் ஒரு பாலியல் தொழிலாளி முக்கிய இணைப்பாக மாறுகிறார். ஆனால், காவல் நிலையத்திலேயே அவர் கொலை செய்யப்படுவதால் வழக்கு மேலும் சிக்கலாகிறது. குற்றவியல் நிருபரான ஜனனியின் உதவியுடன், தொடர் கொலைகளின் பின்னணியையும் கொலையாளியையும் ஆனந்த் நாக் கண்டுபிடித்தாரா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை.

### நடிகர்கள்

போலீஸ் வேடத்தில் ஆனந்த் நாக் தோற்றத்தில் பொருந்தினாலும், நடிப்பில் கம்பீரம் முழுமையாக வெளிப்படவில்லை. விசாரணையின் தீவிரத்தை விட இடைக்கிடை நகைச்சுவைத் தொனி மேலோங்குவது, கதையின் எடையை சற்றே குறைக்கிறது. நாயகி ஜனனி நிருபர் கதாபாத்திரம் முக்கியமாக அமையும் போல தோன்றினாலும், திரைக்கதையில் தொடர்ந்து வலுவாக பயன்படுத்தப்படவில்லை. குறைந்த பரப்பில் அவர் அளவான நடிப்பை வழங்குகிறார்.

பாய்ஸ் ராஜன், பிர்லா போஸ், கௌரி சங்கர், குருமூர்த்தி உள்ளிட்டவர்கள் தங்களுக்கு கிடைத்த இடத்தில் இயல்பாக தோன்றினாலும், கதையின் ஓட்டத்தில் பெரும் தாக்கம் ஏற்படுத்தவில்லை.

### இயக்கம்

தொடர் கொலை  விசாரணை என்ற அடிப்படையில் படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர். "எப்படி? எதற்காக? யார்?" என்ற மூன்று கேள்விகளை மையமாக வைத்து திரைக்கதை அமைத்துள்ள இயக்குநர் எஸ். அருண் பிரசாதின் முயற்சி கவனிக்கத்தக்கது. ஆரம்ப கட்டத்தில் பரபரப்பை உருவாக்கும் காட்சிகள் எதிர்பார்ப்பை ஏற்படுத்துகின்றன.

கொலையாளியின் அடையாளம் வெளிப்படும் பின்னர், சமூக பின்னணியுடன் நகரும் காட்சிகள் மற்றும் கிளைமாக்ஸுக்கு முந்தைய பகுதிகள் சுவாரஸ்யத்தை உயர்த்துகின்றன. அந்த கட்டத்தில் படம் எதிர்பார்த்த விறுவிறுப்பை தருகிறது. மொத்தத்தில், நல்ல கருவுடன் தொடங்கும் 'அறிவான்', நடிப்பு மற்றும் திரைக்கதை சீர்மையில் கூடுதல் கவனம் பெற்றிருந்தால் மேலும் தாக்கம் ஏற்படுத்தியிருக்கும். இறுதிக்கட்ட சஸ்பென்ஸ் மற்றும் பின்னணி கருத்து படத்திற்கு பலம் சேர்க்கின்றன.

### ஒளிப்பதிவு

ஒளிப்பதிவாளர் யஷ்வந்த் பாலாஜியின் காட்சியமைப்புகள் தரமாக இருந்தாலும், நினைவில் நிற்கும் தனித்துவம் குறைவு.

### இசை

கார்த்திக்.ஈ.ஆர்.ஏ இசை கதைக்கு ஏற்ற அளவில் அமைந்துள்ளது.

# டிராகன் படம் வெளியாகி ஓராண்டு நிறைவு



'டிராகன்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக களமிறங்கிய கயாடு லோஹர், இளம் ரசிகர்களின் விருப்பத்துக்குரிய நடிகையாக மாறிப் போயுள்ளார்.

அதர்வா ஜோடியாக 'இதயம் முரளி, ஜி.வி.பிரகாஷ் உடன் 'இம்மார்டல்' படங்களில் நடிக்கும் கயாடு லோஹர், மலையாளம் மற்றும் தெலுங்கிலும் புதிய படங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில், டிராகன் படம் வெளியாகி ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், படப்பிடிப்பின்போது எடுத்த BTS புகைப்படங்களை நடிகை கயாடு லோஹர் வெளியிட்டுள்ளார்.

டிராகன் படம் வெளியாகி 1 ஆண்டு ஆகிறது. இங்கு தான் என் பயணம் தொடங்கியது. உங்கள் இதயத்தில் எனக்கு ஒரு இடத்தைக் கொடுத்ததற்கும், என்னை மிகவும் அன்பாக வரவேற்றதற்கும் நன்றி. பல்லவி எப்போதும் சிறப்பு வாய்ந்தவள்" என்று பதிவிட்டுள்ளார்.

# அரசன் படத்தில் இருந்து விலகலா? வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த விஜய் சேதுபதி



சிம்பு இப்படத்தில் இளமை மற்றும் முதுமை என 2 தோற்றத்தில் நடிப்பதாக கூறப்படுகிறது.

இரண்டாம் கட்ட படப்பிடிப்பு சென்னையில் விரைவில் நடைபெற இருக்கிறது.


நடிகர் சிலம்பரசன் 'தக் லைப்' திரைப்படத்தை தொடர்ந்து அடுத்ததாக இயக்குநர் வெற்றிமாறன் இயக்கும் 'அரசன்' படத்தில் நடித்து வருகிறார். இப்படம் ஒரு வடசென்னையில் நடக்கும் கேங்ஸ்டர் திரைப்படமாக உருவாகி வருகிறது.

இயக்குநர் வெற்றி மாறன் 'வடசென்னை' படத்துடன் தொடர்புடைய அதே காலகட்டத்துடன் தொடர்புடைய மற்றொரு கதையைப் படமாக்கி வருகிறார். இந்த படத்தில், விஜய் சேதுபதி, சமுத்திரக்கனி, கிஷோர், ஆண்ட்ரியா, இயக்குநர் நெல்சன் உள்ளிட்டோர் நடிக்கின்றனர். அனிருத் இசையமைக்க உள்ள இப்படம் கலைப்புலி எஸ்.தாணு தயாரிப்பில் உருவாகுகிறது. சிம்பு இப்படத்தில் இளமை மற்றும் முதுமை என 2 தோற்றத்தில் நடிப்பதாக கூறப்படுகிறது. இதனிடையே இப்படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு சென்னையில் விரைவில் நடைபெற இருக்கிறது.

இந்த நிலையில், 'அரசன்' படத்தில் இருந்து தான் விலகுவதாக வெளியான தகவலுக்கு விஜய் சேதுபதி மறுப்பு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற விஜய் சேதுபதியிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு,

அப்படி ஒண்ணும் கிடையாது. எனக்கே தெரியாது இப்படியான செய்திகள். வதந்திகள் மிக வேகமாக பரவுகின்றன. யாரு பரப்புறதுன்னு தெரியல. இதையெல்லாம் நம்பாதீர்கள் என்றார்.

# மை டியர் டாலி- திரைவிமர்சனம்




பாசில் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம்.

தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார் நாயகன் வி.ஜே. பப்பு. அதே அலுவலகத்தில் பணிபுரியும் நாயகி அனுபமா மீது ஒருதலையாக வி.ஜே.பப்பு காதலிக்கிறார். ஒரு கட்டத்தில் அனுபமா வேறு நிறுவனத்திற்கு மாற்றம் ஆகிவிடுகிறார். காதலை வெளிப்படுத்த முடியாமல் தவித்த பப்புவின் வாழ்க்கை அப்படியே நின்று போகிறது.

இந்நிலையில் திருமணத்திற்காக பெண் பார்க்க பெற்றோருடன் செல்லும் வி.ஜே. பப்பு, மணமகளாக அனுபமா நிற்பதை கண்டு அதிர்ச்சி அடைகிறார். பப்புவை பார்த்தவுடன் அனுபமா திருமணத்திற்கு மறுப்பு தெரிவிக்கிறார். ஒரு கட்டத்தில் அனுபமா திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்து, 6 மாதம் சேர்ந்து வாழலாம், ஒத்துவரவில்லை என்றால் பிரிந்துவிடலாம் என்று முடிவுக்கு வருகிறார்கள்.

இறுதியில் பப்புவும், அனுபமாவும் சேர்ந்து வாழ்ந்தார்களா? திருமண வாழ்க்கை என்ன ஆனது? 6 மாதம் என்ன நடந்தது? என்பதே படத்தின் மீதிக்கதை.

### நடிகர்கள்

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் வி.ஜே.பப்பு, முதல் படத்திலேயே ஒரு கனமான கதாபாத்திரத்தை தைரியமாக ஏற்று நடித்து இருக்கிறார். விரும்பிய பெண்ணுக்காக தன்னை முழுவதும் அர்ப்பணித்து, உள்ளுக்குள் உருகும் காட்சிகளில் கவனிக்க வைத்து இருக்கிறார்.

நாயகியாக நடித்திருக்கும் அனுபமா மாறுபட்ட மனநிலையுடன் இருக்கும் பெண்ணாக சிறப்பாக நடித்து இருக்கிறார். குறிப்பாக இரண்டாம் பாதியில் 'பொம்மையாக' மாறும் அவரது மென்மையான வெளிப்பாடு, கதைக்கு புதிய உயிர் ஊட்டுகிறது. மற்ற நடிகர்கள் சிறப்பான பங்களிப்பை அளித்து இருக்கிறார்கள்.

### இயக்கம்

காதல் கதையை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் அரவிந்த்ராஜ். காதல் என்பது வெறும் 'ஐ லவ் யூ' அல்ல... பொறுமை, புரிதல், தியாகம் என்பதையும் அழுத்தமாக சொல்லி இருக்கிறார். திரைக்கதையில் சுவாரசியம் கூட்டியிருந்தால் கூடுதலாக ரசித்து இருக்கலாம்.

### ஒளிப்பதிவு

பாலாஜி சேகர் ஒளிப்பதிவை ஓரளவிற்கு ரசிக்க முடிகிறது.

### இசை

பாசில் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம்.






## டூரிங் டாக்கீஸ்..

ஊருக்கு எல்லையிலே
காடு வயல் கரையினிலே..
வா.. என்று அழைத்ததந்த
டூரிங் டாக்கிஸ்.

சினிமா கொட்டகை
சிந்தனைக்குப் பெட்டகம்
நடனம் நாடகம் கூத்து என்று
கலையோங்கு கிராமங்களில்
தமிழ் வளர்த்தத் அரங்கம
அது

பனைமரங்கள் தூணாக
ஓலைகளே கூறையாக
கீத்துக் கொட்டகைக்குள்
ஒரு புது உலகம் கண்டோம்.

மணலைக் குவித்து வைத்து..
மகராசன் போல் அமர்வோம்..
சேர் டிக்கெட்டு சிம்மாசனம்
நமக்கு. காதல் கதை பேசும்..
பருவத்தின் சாரலிலே..
அவளோ அந்தப்பக்கம்..
ஆடவனோ இந்தப் பக்கம்.

இடைவேளை வந்துவிட்டால்
விளக்கெரியும் நிலை புரியும்.
முருக்கு,கடலைமிட்டாய்
பன்னு பருக்கியென பலவகை
நொறுக்குத் தீனி.. வகையாய்
வாங்கித்தின்ற வசந்த காலம்

அது. டீக்கடையில் ஈ போல
மொய்த்தப் பொழுது அது.
எம்.ஜி.ஆர். நாமாவோம்
சிவாஜி போல் அழுதோம்.
குடும்பப் படம் பார்த்து
கண்கலங்கி விடைதருவோம்.

நடந்தே நாம் செல்வோம்.
சைக்கிலில் சிலசமயம்..
கரண்ட் இல்லையெனில்
கடவுளைத் திட்டுவோம்.

விசில் பறக்கும்.. சமுதாய
எழுட்சியோ சற்றே
பெருக்கெடுக்கும் இசையில்
மெய் மறக்கும்.. சண்டைவர
முண்டா உயர்த்தும்.

பாடல்கள் மனப்பாடம்.
வசனங்கள் வேதவாக்கு
கவலைகள் பறந்து போக..
கால் டவுசர் கிழிந்து போக..
ஆவலாய் அமர்ந்த இடம்
இன்று இல்லை..

அத்தனையும் கட்டிடமாய்..
குடியிருப்பாய்..
ஆட்டி வைக்கும்
மதுக்கடையாய்..
மாறி போச்சு இங்கே.. நாம்
புரண்டு எழுந்த டூரிங் டாக்கீசு
எங்கே?

**வே.கல்யாண்குமார்**

## சிறுமலர் செடி வளர்ப்போம்.!

செடி நடுவோம்.. விதை
நடுவோம்.. சிறு மணல்
பரப்பினிலே..!
கொடி வளர்ப்போம்.. குலம்
நினைப்போம்..
குழந்தைகள் பூமியிலே.!

படிப்படியாய்.. பாரினிலே..
இயற்கையைப்
காத்திடுவோம்..
செடி வளர்த்தே.. கொடி
வளர்த்தே.. சிந்தனையை
வளர்ப்போம்.!
(செடி நடுவோம்..)

ஆயிரம் விதைகளை
விதைத்து.. அதில்
அரும்பிடும் துளிர்களை
நினைத்து.. வாழிய
உலகென்று வாழ்த்திடும்
காலையில்.. வரிசையாய்
செடிகளை வளர்ப்போம்.!

மானுடராய் பிறந்த பின்னே..
மரம் செடி.. கொடிகள்
வைப்போம்.. காணுகிற
பூமியினை அன்பினில்..
அலங்கரிப்போம்.!
(செடி நடுவோம்..)

**வே.கல்யாண்குமார்.**

வேண்டும் வேண்டும்
வாழ்விலே வசந்தம்
வேண்டும் வர வேண்டும் வர
வேண்டும் நான் பாட, நீ பாட,
வசந்தம் வர வேண்டும்
பாட வேண்டும்
தினம் பாட வேண்டும்
உடன் பாட ஒரு துணை
வேண்டும் வேண்டிய
துணையே வந்திட வேண்டும்
வந்ததொரு துணையே
வாழ்க்கை துணை
என்றாகிட வேண்டும்
இசையை இயக்க
இயக்கும் இசையாக
நாம் வாழ்ந்திட வேண்டும்



பிறர் காண
கண்டு மகிழ
மனமுவந்து
வாழ்த்த
வாழ்ந்திட
வேண்டும்

**ஓம் குமார்**

P N

நானும் கடல் குதிரைதான்
உன் காதலை
சுமந்து திரிவதால்!

அசைந்தாடும் துளசி காற்றில்
காதலோடு
உன் வாசம் வீசுகிறது!

ஒருமுறை தானடி விழுந்தேன்
ஏனடி தினம் வலிக்கிறது?
காதல் தோல்வி!

நீ இல்லா இரவு நீளும்
இரவில் நிம்மதியில்லா
உறக்கம் நீயில்லாததால் வந்த
நடுக்கமோ ? உன்னை
பார்த்து காதல் மயக்கம்
தானடி வரவேண்டும்
ஏனடி கிறக்கத்தை
தருவதற்கு பதிலாக–பரிசாக
கலக்கத்தை வரமாக
தந்தாய்! உன்னில்
நனைய விரும்பியவனை
உப்பு கடலில் ஏனடி
குளிக்க வைத்தாய்?
இப்பிரபஞ்சத்தின்
பொக்கிஷம் உன் உறவு என்
வாழ்வில் நீ பரிசளித்ததோ
துறவு !முறிவை காட்டிலும்
முக்தி அடைய செய்யும்
பக்தி பெரிதா ?
முணு , முணுக்க வைக்கும்
காதலின் சக்தி பெரிதா ?
எது வந்தாலும் கடந்து
செல்ல உதவும் புத்தி
பெரிதா? சூது , வாது
செய்யும் நரி மனதை ஒத்த
யுக்தி பெரிதா ?
எது பெரிது என
எனக்குள் நானே ஒரு
பைத்தியக்காரனை போல்
கேள்வி கேட்டு
கொள்வதற்கு பதிலாக நீ
இல்லா இரவில் மட்டுமல்ல
நீ இல்லா உலகில்
அவதரிப்பதே பாவம் !
பாவக்கணக்கை என் மேல்
எழுதுவதற்கு பதிலாக
ஒழுங்கு மரியாதையாக
என்னை காதலித்து விடு
கண்களால் கட்டி போடு
கனவு உலகத்தில்
மிதக்கவை
மொத்தத்தில் நீ வாழும்
இராட்சச நரகத்தில் என்னை
இரட்சகனாக மாற்றி விடு !

**நௌஷாத் கான் .லி**

## கேடக்குளோடிசம்

கேடக்குளோடிசம்
ஒன்று வேண்டுமென்றேன்
திரு ,திருவென முழித்து
அப்படின்னா
என்னவென்றாள் ?
அணில் ,சிம்பன்ஸிக்கு
தெரிவது கூட உனக்கு
தெரியலையா என்றேன்
தெரியலைடா என்றாள் .
ஹார்மோன்களை திறக்க
வைக்கும் காதல் பாடங்களை
உலக முழுதும் பிரபலமடைய
வைத்த ரோமானிய
வித்தைகளை செயல்முறை
தேர்வுயில்லாமல்
உன்னிடம் எப்படி
எடுத்துரைப்பேன் .
ஆஸ்குலம் ஒன்று போதும்
பேஸியம் ரெண்டு போதும்
சேவோலியம் போதும்
போதுமென்று கத்தி ,கதறும்
வரை வேண்டுமென்றேன்
டே கள்ளா நீ
என்னென்னவோ பேசுற,
உளறுற உனக்கு என் மேல
காதலே இல்லடா என்று
வேண்டாவெறுப்பாய்
கன்னத்தில் முத்தமொன்று
கொடுத்து இதுமாதிரி
என்னைக்காவது முத்தம்
கொடுத்திருக்கிறாயா?
என்றாள் எப்படி
சொல்வேன்? இதுவரை
கேட்டதெல்லாம்
முத்தமென்று ?!!

## கற்பனையும் -காதலும்

SUBTITLES
கேடக்குளோடிசம்
–முத்தத்தின் அறிவியல்
பெயர் ஆஸ்குலம்
–கன்னத்தில் முத்தமிடுவது
பேஸியம் –உதட்டில்
ஒருமுறை ஒத்தி எடுப்பது
சேவோலியம் –நாக்குவரை
நீண்டு எச்சில் கலந்து
கொடுக்கும் நீண்ட முத்தம்
உதட்டு முத்தம்
மனிதர்களுக்கு மட்டுமல்ல
அணில் ,சிம்பன்ஸிக்கும்
சொந்தமானது .உதட்டு
முத்தத்தை இந்த இரு
உயிரினங்களும் தங்கள்
ஜோடிகளுக்குள் கொடுத்து
கொள்ளும்

**நௌஷாத் கான் .லி**

## இதயம் ஒரு தீர்க்கதரிசி

இதயம் பல நேரங்களில் எதிர்காலத்தை உணர்த்தும் !

அது தர்க்கத்தை விட உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம்
அளிப்பதால் வரப்போகும் மாற்றங்களை முன்கூட்டியே
நமக்கு எச்சரிக்கையாகவோ அல்லது நம்பிக்கையாகவோ
வெளிப்படுத்தும்!

இதயம் சொல்வதைக் கேட்டு முடிவு எடுப்பது நல்லது !
உள்ளுணர்வு மூளை கணக்கு போடுவதற்கு முன்பே இதயம்
ஒரு சூழலில் சாதக பாதகங்களை உணர்த்தி விடும்!

சில நேரங்களில் கண்கள் காண்பதை விட இதயம் உண்மையை
ஆழமாக தரிசிக்கும்! குழப்பமடையும்போது அமைதியான
இதயம் சரியான திசையைக் காட்டும்!

திசைகாட்டியாக மாறும்! மூளை கணக்கிடும் முன்பே அது
முடிவை சொல்லிவிடுகிறது ! கண்கள் காண்பதற்கு முன்னே
அது கனவை விதைத்து விடுகிறது!

ஆயிரம் தர்க்கங்கள் தோற்கும் இடத்தில் அமைதியாக
ஒரு துடிப்பு நடப்பதை முன்கூட்டியே நயம்பட சொல்லும்!

வார்த்தைகள் இல்லாத மவுனத்தில் இதயம் வரப்போகும்
மாற்றங்களை மிக துல்லியமாக உணர்த்தும்!

அறிவு இன்று நடப்பதை கவனிக்கும் ஆனால் இதயம் நாளை
நேர போவதை இப்போதே துடிக்கும்!

வெளிப்படையான ஆதாரங்கள் இல்லாத போது ஒரு செயலின்
விளைவை முன்கூட்டியே எச்சரிக்கும்!

ஆற்றல் இதயத்திற்கு உண்டு காரணமில்லாத படபடப்பு வராது
ஏதோ ஒரு சிக்கலை இதயம் நமக்கு உணர்த்தி விடும் !

இதயம் சொல்வதை மனசாட்சி அல்லது உள் மனதின் குரல்
என்கிறோம்!

அன்பு, பயம், துரோகம் அல்லது மகிழ்ச்சி என எதுவாக
இருந்தாலும் அதன் முதல் தாக்கம் இதயத்தில்தான்
எதிரொலிக்கும்!

நடக்கப் போகும் மாற்றங்களை ஒருவித படபடப்பு மூலமே
அல்லது அமைதி மூலமே இதயம் முன்கூட்டியே காட்டிவிடும்!



இது மூளையை சார்ந்து இருக்காமல்
தன்னிச்சையாகவே செயல்படும் திறன் கொண்டது !


மூளை ஆயிரம் கணக்குகளை போடலாம் ஆனால்
இதயம் ஒரே ஒரு உண்மையைத்தான் பேசும்!

**பெ.திருமுகம்** மணமேல்குடி

## பழைய டைரி கவிதை

கவிதை என்பது வெறும்
வார்த்தைகளாலானதா ??
கவர்ச்சி கனவுகளாலானதா??
ஒன்றும் அறியாத
என்னிடம் கேள்விகளை தவிர
பதிலேதுமிருக்காது என
நீங்கள் நகையாடலாம்
உங்கள் சிரிப்புக்கு பின்னால்
அர்த்தமற்ற அர்த்தமாய்
நானாகி போவதை
உங்கள் குருட்டு கண்கள்
உணர்ந்திருக்காது ..
நான் ஏன் எழுதுகிறேன் ??
நீங்கள் பிச்சையிடும் விருப்ப
குறியீடுகளுக்காகவா ??
நீங்கள் பதிவிடப் போகும்
கருத்துக்களுக்காகவா ??
அல்லது பொழுதே போகாமல்
வீண் சண்டை வெட்டி வம்பு
வளர்பதற்க்காகவா ??
ஊரெல்லாம் எழுத்தாளன்
என்று மார்தட்டி
கொள்வதற்க்காகவா???
நீங்கள் நினைக்கும்
எதுவாகவும் நானில்லை ..
பணம் துரத்தும் கடன்
வாழ்க்கையில் நேரம்
தின்னும் இயந்திர
நரகவாழ்க்கையில்
தொலைந்து போன இன்னும்
தொலையாமல் சுரக்கும்
எச்சில் உமிழ்நீரிலும்
மிச்சமிருக்கும் சொச்ச
காதல்கதையை
வெற்றுக்காகிதத்தில் தீர்த்து
கொள்ளும் வெட்டிப்பய
நான்.... இதுவரை சொல்லாத
காதல் கதைகள்
இதயமூலையில் இம்சை
செய்வதை இயங்கும் மூளை
வதையை வாதையாய்
வெளியேற்ற துடிக்கிறது ...
ஜவ்வு மிட்டாய் பாதி கடித்து
தந்ததன் விளைவு
சவ்வாய் வளர்ந்து நிற்கிறது
உன் நினைவுகள் ..
உன் விரல் சூப்பி நிலாச்சோறு
சாப்பிட்டதை தினம் அந்த
வானம் மறக்காமல் சொல்லும்
செய்தி அறிவாயா ??
ஆரஞ்சு மிட்டாய் சிவக்கும்
போதெல்லாம் மணக்கும் உன்
இதழின் யோசனை
மழைக்கு பிடிக்கும்
குடை போல
பைத்தியக்காரத்தனமானது
கண்கள் இருந்து உன்னை
காணாமலிருப்பது
மழை விட்ட பிறகு பெய்யும்
மரக்கிளை மழை போல
தூறிக்கொண்ட இருக்கிறது
விட்டுப்போன காதலின்
நினைவுகள் வினோ , புவனா,
சுஜி ,சாஜி, பிரியா,ரிபா,
கிரிஜா, உமா , நிஷா ,
ராஜி , ஜோ என இன்னும்
சொல்வதற்கு
தேவதை கதைகள் ஏராளமாய்
மிச்சமிருக்கின்றன ..
கிறுக்கல்கள்–
(பழைய டைரியிலிருந்து )

**நௌஷாத் கான் .லி**




## தந்தை

இனிக்கும் நல்லார்
சந்ததி போற்றும் வல்லார்
(52)

அறிவினைக் கூட்டும் ஆசான்
ஆற்றலைத் தீட்டும் நண்பன்
நெறிகளைக் கற்று வித்தே
நெஞ்சினில் நிறையும் தோழன்
முறித்திடும் உறவா தந்தை?
முழுமையை அறிவார் யாரோ?
குறித்திடும் சான்றாய் வாழ்ந்து
குன்றினின் புகழாய் நிற்பார்
(53)

வலிகளைத் தனக்குள் வைத்து
வரங்களை நமக்குத் தந்து
சலித்திடும் வகையில் பேசாச்
சத்திய சீலன் தந்தை
பொலிவுடன் இருப்பார் என்றும்
போற்றுவோம் அவரை
நன்றாய் ஒலித்திடும்
புகழால் நாளும்
ஓதுவோம் தியாகம்
தன்னை!


தந்தையே தலைவர் ஆவார்
தன்னையே உருக்கித்
தேய்வார் உந்துதல்
விசையாய் மாறி
உண்மையில் ஊட்டம்
ஈவார் சொந்தமாய்
உழைப்பை
ஊற்றிச்சொர்க்கமாய்
குடும்பம்
ஆக்கிச்சந்தமாய்




**கவிஞர் மு.வா.பாலாஜி**
ஒசூர்

# நூல் விமர்சனம்

ஓலமிடும் ஆற்று மணல் !
நூல் ஆசிரியர்கள் : மூத்த எழுத்தாளர் ப. திருமலை, கே.கே.என். ராஜன் !
நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி.
வெளியீடு :
புதிய தரிசனம், 10/1, அப்துல் ரசாக் 2ஆவது தெரு, சைதாப்பேட்டை, சென்னை 600 015. பக்கம் : 192, விலை : ரூ. 160.




‘ஓலமிடும் ஆற்று மணல்’ நூலின் தலைப்பே சிந்திக்க வைத்தது. மூத்த எழுத்தாளர் ப. திருமலை அவர்களும் திரு. கே.கே.என். ராஜன் அவர்களும் இணைந்து எழுதியுள்ள நூல். ஆற்றுமணல் கொள்கைக்கு எதிரான போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு நூலை காணிக்கை ஆக்கி இருப்பது சிறப்பு. பொதுவுடைமைக்கட்சியின் மூத்த தலைவர் நேர்மையான அரசியல்வாதி தோழர் நல்லகண்ணு அவர்களின் அணிந்துரை பொருத்தம்.

மணல் கொள்ளையடிக்கும் கொள்ளையர்கள் மணல் உற்பத்தி செய்ய முடியாது என்பதை உணர வேண்டும். இயற்கையாக உருவாவதே மணல் நூலின் தொடக்கத்திலேயே மணல் உருவாகும் விதம் பற்றி எழுதி உள்ளனர்.

“இயற்கையின் அற்புத நிகழ்வுகளில் மணல் உருவாதலும் ஒன்று. மணல் உருவாவது என்பது எளிதான விஷயம் அல்ல. மணல் உருவாக ஆயிரம் ஆண்டுகள் கூட ஆகலாம். பருவகால வேறுபாட்டின் காரணமாக பாறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. குளிர்காலத்தில் பாறைகள் இறுக்கமடைகின்றன. வெயில் காலங்களில் பாறைகள் விரிவடைந்து நொறுங்குகின்றன. இவ்வாறு நொறுங்கும் பாறைகள் மழைக்காலங்களில் மழைநீரின் வேகத்தில் உருட்டப்படுகின்றன. இத்தகைய செயல்களால் மோதி மோதி உடைந்து சிறுசிறு துகள்களாக மணலாக மாற்றம் அடைகின்றன. உடையாத பகுதிகள் கூழாங்கற்களாக உருமாறுகின்றன. உடையாத பகுதிகள் கூழாங்கற்களாக உரு பெறுகின்றன. அதிக அளவில் உடைந்து மிகச்சிறிய துகள்களாக மாறுகின்ற போது அவைகள் எவ்வித கனமும் இன்றி இருப்பதால் நீரில் மிதந்து அடித்துச் செல்லப்படுகின்றன”.

மணல் என்று சாதாரணமாக நினைக்கும் நாம் அந்த மணல் உருவாகும் விதம் அறிந்து வியந்து விட்டேன். இப்படிப்பட்ட இயற்கை வளத்தை கொள்ளையடிப்பது முறையா? வருங்கால சமுதாயத்திற்கு வைத்துச் செல்ல வேண்டிய மணலை கடத்தி விற்பது முறையா? என்ற கேள்வி கேட்கும் நூல் இது.

மணல் கொள்ளையின் காரணமாக ஆறுகள் மரணத்தை நோக்கிச் செல்கின்றன என்று குறிப்பிட்டுள்ளது உண்மை தான். வரலாற்று சிறப்புமிக்க சங்கப்பாடலில் இடம் பெற்ற வைகை அன்று எப்படி ஓடியது இன்றைக்கு வைகை ஆறு எப்படி உள்ளது என்பதைப் பார்த்தாலே புரியும். கள்ளழகர் ஆற்றில் இறங்குவதற்க்குக்க கூட லாரியில் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றும் நிலைமை ஏன் வந்தது. மணல் கொள்ளை தான் மூல காரணம் என்பதை நூல் உணர்த்தியது.

மணல் பற்றிய பல தகவல்கள் உள்ளன. “மணல் உற்பத்திப் பொருள் அல்ல. தண்ணீர் போல் மணலும் இயற்கை அளித்த அருட்கொடை. அனைத்துப் பகுதியிலும் மணல் கிடைக்கும் என்று சொல்ல முடியாது”. இப்படி மணல் பற்றியே பேசிடும் நூல் இது. இயற்கை தந்த மணலை பணத்தாசை காரணமாக பலர் கொள்ளையடித்து பக்கத்து மாநிலங்களுக்குக் கடத்தி பகல் கொள்ளை அடித்து வருகின்றனர். முற்றிலும் இக்கொள்ளை தடுக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையை விதைத்தது.

நீதியரசர் மகாதேவன் அவர்கள் மணல் குவாரிகளை மூடிட வேண்டும் என்று அருமையான தீர்ப்பு வழங்கினார்கள். இறக்குமதி செய்யப்பட்ட மணல்களைப் பயன்படுத்தலாம் என்றும் சொன்னார்கள். ஆனால் அந்த நல்ல தீர்ப்பிற்கும் தடை வாங்கி மணல் குவாரிகள் மூடாமல் தொடர்ந்து மணல் கொள்ளை நடந்து வருவது வேதனை. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பலர், குரல் கொடுத்தபோதும் மணல் கொள்ளையர்கள் திருந்துவதாக இல்லை. அரசாங்கமே மது விற்பது போலவே, அரசாங்கமே மணலும் விற்பனை செய்து வருவது தமிழகத்தில் தான். குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒட்டுமொத்தமாக எல்லா மணல் குவாரிகளையும் மூடினால் தான் நாட்டின் வளத்தை, ஆறுகளின் நலத்தைக் காத்திட முடியும்.

மணல் கொள்ளைக்கு அடுக்குமாடி வீடுகளும் காரணமாகின்றன. அரசுக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் மணல் பயன்படுத்தப்படுகின்றது. மணல் அள்ளுவதால் ஏரி, குளங்கள் காணாமல் போகின்றன. மதுரையில் உள்ள உயர்நீதிமன்றமே உலகனேரி என்ற ஏரியின் மீது கட்டப்பட்டுள்ளது.

இதுபோன்று ஏராளமான ஏரிகளையும், குளங்களையும் அரசுக் கட்டிடங்களே ஆக்கிரமித்து உள்ளன. போனது போகட்டும், இனியாவது விழிப்புணர்வுடன் இருப்போம். ஏரிகளையும், குளங்களையும் ஆறுகளையும் காப்போம். குறிப்பாக மணல் கொள்ளை எங்கும் நடக்காமல் தடுப்போம். இப்படி பல எண்ணங்களை விதைத்தது இந்த நூல்.இந்நூலிற்கு அணிந்துரை வழங்கி உள்ள தோழர் நல்லகண்ணு அவர்கள் தொடர்ந்த வழக்கு விபரமும் நூலில் உள்ளது.

குவாரிகளை மூடிட நீதிமன்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட போதும், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் எழுதிய பாடல் வரிகள் தான் நினைவிற்கு வந்தன. திட்டம் போட்டு திருடுற கூட்டம்திருடிக் கொண்டே இருக்குது - அதை சட்டம் போட்டு தடுக்குற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது திருடராய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது.மணல் திருடர்களுக்கு இந்த நூலை வழங்கி படிக்க வைக்க வேண்டும். இதில் உள்ள விபரங்களைப் பார்த்து அவர்கள் மனம் திருந்த வாய்ப்பு உண்டு.

“மணல் திருட்டு மணல் கடத்தல் மணற்கொள்ளை ஆகியவற்றில் ஈடுபடுவோர் மீது அபராதம் விதிப்பதுடன் சிறைதண்டனை வழங்கும் வகையில் சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும் அல்லது இருக்கும் சட்டங்களைக் கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்”.

மணல் கொள்ளை என்பது வருங்கால சந்ததிகளை வளம் இழந்து வறட்சியில் வாடிட வைக்கும் செயல் என்பதை உணர்ந்து, மணல் கொள்ளையால் பல நீர்நிலைகளை இழந்து விட்டோம். விவசாயம் பொய்த்து விட்டது. இனியாவது விழிப்புணர்வுடன் இருந்து மணல் வளம் காப்போம். மணல் கொள்ளை ஒழிப்போம். மணல் என்பது வருங்கால வைப்பு நிதி என்பதை உணர்த்திடும் நூல். நூலாசிரியர் இருவருக்கும் பாராட்டுக்கள்.




என் இதயப் பேனாவே
ஏனோ பல வருடங்கள்
எளுதாமல் விட்டேனே
எங்கு சென்றாய் என்
பேனாவே..

தூங்கிச் சென்ற எண்ணக்
குமுறல்களை மீண்டும்
எளுப்பச் சென்றாயோ..
இல்லை மனசுக்குள் என்றோ
மளுங்கிப் போய் விட்ட
எண்ணக் கதவுகளை..
மீண்டும் திறக்கச்
சென்றாயோ..

காலச் சக்கரத்தின்
கனமான வேலைகளால்
களையுற்றுப் போனாயோ...
உன் கவிதைகளால்
உலகிற்கு மிளிர்ச்சியும்
உண்டென்று மகிழ்ச்சியாய்
நவின்ற நீ.. என் இதயத்தை
விட்டு விலகி உறங்கத்தான்
சென்றாயோ..



ஓ.. என்
இதயப்
பேனாவே
எழும்பிவிடு
அவசரமாய்..
எழுச்சிக்காய்
எழுதவென்று
எழுந்து நில்.. இப்போதே..!!

**பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## நிலத்துக்கணியென்ப!

அறுசீர் மண்டிலம்.

குளத்துக்(கு) அழகு
தாமரையே
கூட்டத்திற்(கு) அழகு
மானிடரே
நிலத்துக்(கு) அழகு
நெல்கரும்பே
நேர்மங்கைக்(கு) அழகு
நாணமன்றோ!
களத்திற்(கு) அழகு
நெற்கட்டே
கண்ணுக்(கு) அழகு
கண்ணோட்டம்
புலமைக்(கு) அழகு
யாப்பன்றோ
பூவுக்(கு) அழகு
மணமன்றோ!

இயற்கைக்(கு) அழகு
தாவரமே
இனிமைக்(கு) அழகு
இன்சுவையே
செயற்கைக்(கு) அழகு
முகப்பொலிவே
சீர்மைக்(கு) அழகு
வெளித்தோற்றம்!
நயன்மைக்(கு) அழகு
நற்பார்வை
நாளுக்(கு) அழகு
நற்கோளே
வியப்புக்(கு) அழகு
இவ்வுலகே
வீறுக்(கு) அழகு
வீரமன்றோ!

## அன்பின் ஏமாற்றம்

அன்பை பிறர்மீது வைத்து
"ஏமாற்றம்" அடைந்தாயா !
"பரவில்லை"

நீ அன்பைக்காட்டி பிறரை
"ஏமாற்றி விடாதே"
உன் குணம் உன்னோடு !
அவரவர் குணம்
அவர்களோடு!

இங்கே நமக்கு "ஏமாளி"
"கோமாளி" என்ற
"பெயர்தான்" இருந்திட்டு
போகட்டும் !

ஆனால் "ஏமாற்றுக்காரன்"
"பித்தலாட்டக்காரன்"
"திருடன்" என்ற பெயர்
வாங்காமல் !



"ஏமாளி" என்ற
"பெயர்"
வாங்குவது
ஒன்றும்
கேவலமில்லை!

"அன்பே சிவம்"

**G.A.கோவிந்தராஜ் (எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்

## சமூகநீதி காப்போம்!

அறுசீர் மண்டிலம்.

சமூக நீதி காப்போம்
சந்தன வாசம் காப்போம்
கமழ்ந்திடும் சட்டம் யாப்போம்
கனிந்திடும் திட்டம்
சேர்ப்போம் அமைந்திடும்
கொள்கை காப்போம்
ஆன்றநல் செயல்கள்
சேர்ப்போம் குமைந்திடும்
கொள்கை அழிப்போம்
குன்றென வாழ்வைப்
படைப்போம்!

வறுமையைப் போக்கி
வாழ்வோம் வளத்தினை
ஆக்கிச் சூழ்வோம்
சிறுமையை நீக்கிக்
கொல்வோம் சீர்மையைத்
தேக்கி வெல்வோம்
அறத்தினை மேலாய்
மதிப்போம் அன்பினை
உள்ளில் துதிப்போம்



திறமையைக்
காட்டி
நிற்போம்
திறம்பட
செயல்கள்
கற்போம்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

1. பாட்டி வீட்டில் பிறந்ததால்
அடிக்கடி பாட்டி வீட்டிற்கு
சென்றோம் இப்போது
ஆஸ்பத்திரியில் பிறப்பதால்
அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு
செல்கிறோம்

2. மனம் விட்டு பேசி
தீராத பிரச்சனைகள்
பணம் விட்டு பேசி தீர்த்து
வைக்கப்படுகின்றன
இக்காலத்தில்

3. விரதம் இருந்தால்
வேண்டிய வரம்
கிடைக்குமாம் என்றால்
பட்டினி கிடப்பவர்கள்
எல்லோரும் லட்சாதிபதி ஆகி
இருக்கணுமே

4. வருவாய்க்கு ஏற்ப உன்
தேவையை குறைத்துக்
கொண்டால் நீ புத்திசாலி
தேவைக்கு ஏற்ப வருவாயை
அதிகரித்துக் கொண்டால்
நீ திறமைசாலி



5. பேங்கிற்கு
சென்று கடன்
வாங்கியவர்
களை
விட எழுத
பேனா கடன்
வாங்கியவர்கள்
தான் அதிகம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## தமிழே.. அமிழ்து..!

எழுதி எழுதி.. எழுதி எழுதி..
எழுதிப் பழகுவேன்.!
அமுத தமிழை தினமும்
எழுதி வணங்கி மகிழுவேன்.!


தொழுது தொழுது தூயத்
தமிழை தொடர்ந்து
எழுதுவேன்!
துயரம் யாவும் மாற்றும்
தமிழைப் பணிந்து
மகிழுவேன்.!

உழுது உழுது எனது
நிலத்தில் தமிழை
ஊன்றுவேன்.. உலகம்
முழுதும் தமிழின் விதையை
விதைத்து வணங்குவேன்.!

விழுது விழுது ஆலமரத்து
விழுது ஆகுவேன்.. பொழுது
மலர புதிய தமிழில் கவிதை
வழங்குவேன்!

அமிழ்து அமிழ்து தமிழே
அமிழ்து.. அள்ளிப்
பருகுவேன்! பழுது நீக்கும்
அமுதக் கவிகள் படைத்து
மகிழுவேன்.!

**வே.கல்யாண்குமார்.**



## ஒரு கடற்காகத்தின் கவிதை

அழகான மாலைநேரம்
காதலை சொல்ல
சரியான தருணம்
மழை ஈரம் குளித்த வீட்டு
சுவரின் வியர்ப்பு
நீ குளித்து முடித்து
தேவதையாய் வருவதை
நீ வரும் முன்பே
உன் மைசூர் சாண்டல்
வாசனை காற்றில் தூதாய்
வருகிறது வண்ணத்து
பூச்சிகளின் வர்ணங்களை
பூசிக் கொள்ள விரும்புகிறேன்
காதல் வந்ததால் என்னவோ??
வெடித்து சிதறிய
இலவம் பஞ்சு வானில்
பறக்கும்–காதலை
வெளிப்படுத்த விரும்பும்
கடற்காகம் நான் எங்கு
பறப்பேன் ???என்
காதலை உன்னிடம்
எப்படி சொல்ல ??
தினம் தினம்
சிந்திக்கிறேன்...
உன்னை தவிர –இப்
பிரபஞ்சம் முழுதும்
சொல்லிவிட்டேனடி
சுனாமியில் கடத்தி
செல்லப்பட்ட என் காதலை ??
ஒரு தூரிகை கொடு
என் காதலை காடாய், கடலாய்
,பறவையாய் , விலங்காய்
வரைந்து காட்டுகிறேன் !!
காதல் வண்ணத்துப்பூச்சி
தான் –அது சொல்லாத
பொல்லாத காதல் யானையை
எப்படி தூக்கி சுமந்து
பறக்கிறது ??
அழகிருந்து என்ன ?
அறிவிருந்து என்ன ?
படிப்பிருந்து என்ன ?
பதவியிருந்து என்ன ?
மனதில் ஊறும் காதலை
உன்னிடம் எப்படி சொல்ல ??
எந்த தைரியத்தில்
என் கடந்த காலத்தை
உன்னிடம் சொன்னேன்
தெரியவில்லை??
எல்லாம் தெரிந்தும் ,என்
சொல்லாத காதலை
அறிந்தும் ஏன் மௌனம்
காக்கிறாய் ??அன்றொரு நாள்
உன் எச்சில் பட்ட புனிதம்
ஐஸ்க்ரீம் உண்டு
என் காதலை உனக்கு
தெரியப்படுத்தினேன்
ஊர் செல்லும் கடைசி நாள்
பின்னால் அணைத்து
சொன்னாயே இதுவரை
ஒளித்து வைத்திருந்த –அந்த
கவிதைத்துவமான காதலை!!!
I LOVE YOU –டி



I LOVE YOU –டா என்ற
வார்த்தைகள் எதற்கு ??
டெல்மா தீவில்
கடற்காகமாய் காதலோடு
பறப்போம் வா !!

**நௌஷாத் கான் .லி**
கும்பகோணம்



## சிகரெட்டு

மனிதர்கள் அக்னி சாட்சியாக
எல்லாத்தெய்வங்களுக்கும்
சாம்பிராணி தூபம்
போடுகிறார்கள் வாயு
பகவானேஉனக்கு மட்டும்
புகையிலைத்தூபம்
போடுவது ஏன்?

ஆலயங்களில் நீ
இருந்திருந்தால் இவர்களுக்கு
அடையாளம் தெரிந்திருக்கும்
உன்னை யார் நீக்கமற
நிறைந்திருக்கச்சொன்னது?

இங்கே மரணதேவியோடு
மனிதர்களுக்குத் தீராத
கற்பனைக் காதல்
அவளுக்கு முத்தமிடுவதாய்ச்
சிகரெட்டுக்கு முத்தமிடுவதால்
கோவைப் பழ உதடுகளும்
நாவற்பழமாய் மாறும்
அதிசயம் நிகழ்கிறது!

ஆசைகள் புகை
புகையாய்த்தூது
சென்று அவளிடம்
அலை மோதின
இதயத்தை அவளிடம்
பறிகொடுத்தவர்களிடம்
புற்று நோயாய்க்
குடிகொண்டாள்!
அறுவை சிகிச்சை
செய்தாலும் பிரிக்க
முடியாத காதல்
விஸ்வரூபம் கொண்டு
உடல் முழுவதும் பரவியது!

நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமாய்
எத்தனையோ
முத்தமிட்டவர்களுக்கு
மரணதேவி முற்றுப்புள்ளியாய்
முத்தமிட்டதில் மௌன
சிலையானவர்களை
மயானத்தில் மணந்து
கொண்டாள்!

அன்று கணவனுக்காக
உடன்கட்டை ஏறிய
பெண்களின் அன்பினில்
என்ன ஆச்சரியம்!
இக்கால ஆடவரைப்
பாருங்கள் தனக்கும் கொள்ளி
வைத்துக்கொண்டு
அருகில் இருப்பவர்களுக்கும்
கொள்ளி வைக்க
முயல்கிறார்கள்!

யான் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்
என்பது இதுதானோ?
புகையிலையைக்



கொண்டாடிக்கொண்டே
புகையிலை எதிர்ப்புதினம்
கடைப்பிடிப்பது
எதற்காகத்தோழர்களே!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

## ஹக்கூ

1. தலைக்கணம்
கொண்டவர்க்கெல்லாம்
சரியான மருத்துவர்– சலூன்
கடைக்காரரே .

2. வறுமையிலும்
சேகரிக்கிறான் கூரை
ஓட்டையின் வழியே – மழை
நீரை

3. பொறியாளருக்கான
தேர்வில் போட்டியின்றி
தேர்வாகிறது –
குருவியின்கூடுகள்

4. விலைச்சரிவிலும் வீழ்ச்சி
கண்டது விற்பனையில்–
புத்தகங்கள் .

5. உன்னால் இனி எனக்கும்
குடிகாரன் பட்டமே உன்
பார்வை"கள்"
பருகியதால்.

6. லட்சங்களில்
வாங்கிய கார்களின்
மதிப்பை எச்சங்கள்
இடும் காகங்கள்
அறிவதில்லை.

7. தொலைதூர சொந்தங்கள்
யாவும் செலவில்லாமல் வந்து
போகின்றனர் "வாட்ஸ்அப்
ஸ்டேட்ஸ்" ல் மட்டும்.

8. இருவேறு
மனங்களில்,ஒட்டாமல் பிறந்த
குழந்தைக்கு – காதல்
என்றுபெயர்.

9. செவ்வாயில் இடம்
பிடிப்பதில் இனி
இஸ்ரோவுக்கும் இரண்டாம்
இடமே,முந்திக் கொண்டதே
முகக்கவசம் – இவள்
செவ்"வாயில்"



10. வண்டி வண்டியாய்
கொடுத்த வாக்குறுதிகள்
யாவும் மழைக்காலத்து
தார் சாலையாய் வாயை
பிளக்கிறது.

11. சின்ன விஷயத்தை
ஊதியே பெருசாக்குறான்
இப்படிக்கு – பலூன்காரன்

**மை எழுத்து கனகராஜ்**
கோயம்புத்தூர்

## ஒரு அப்பாவின் புலம்பல் கடிதம்

சின்ன வயசிலிருந்தே
பெரிய பெரிய ஆசைகள்
நீரில்லா குளத்தில் தான்
தாமரையாய் மலர
துடித்ததென்ன ??
பௌணர்மி நிலா
வெளிச்சத்தில்
கயிற்று கட்டிலில் உட்கார்ந்து
நிலாச்சோறு குழந்தைக்கு
ஊட்டி மகிழ்ச்சியாய் நான்
கண்ட ஜோடி கனவல்ல நிஜம்
அந்த நிஜமெல்லாம்
என் கனவு வாழ்க்கையில்
நிஜமாக வேண்டுமென
வேண்டினேன் காலம்
கடந்தது வயதும் வந்தது
காதல் திருமணம்
கனவாய் மட்டும் போனது
சொல்ல படாத காதல்
அத்தியாயங்கள் எல்லாம்
சோகம் தரும் கருப்பு
பக்களாய்–என் வாழ்நாள்
அத்தியாயத்தில் மாறிபோனது
செல்லாத காசு சொல்லாத
காதல் –இருந்தும்ஏனடா
இதயத்தில் வலி ??
காலம் கடந்து போகவே
காயத்தின் ரணங்கள் எல்லாம்
வெளியே தெரியாமல்
விதி பார்த்து கொண்டது
பெரிய உடன்பாடு
இல்லையென்றாலும்
பெற்றோர் கடமை
பிள்ளைக்கு திருமணம்
செய்து வைப்பதாம்
அப்பா (இறந்த) இல்லாத
பிள்ளையின் திருமணங்கள்
எல்லாம் எப்படி நடக்குமென்று
சில சொந்தங்கள்
விரோதம் காட்டி பழி தீர்த்து
நடத்தி காட்டியது இதுவரை
காதல் இல்லையென்றாலும்
கட்டியவளை காதல் செய்
என்ற முன்னோர் வாக்கை
வேதமென எண்ணினேன்
காலம் தந்த வாழ்க்கையை
குழந்தை ஆசையால்
கை விட எண்ணலை
சொல்லாத சோகங்களை
எல்லாம் சோர்ந்து போன
நெஞ்சத்தில் புதைத்து விட்டு
வராத காதலையெல்லாம்
வா–வா என வர வைத்து
என்னவளை ஏமாற்றாமல்
விதி தந்த வாழ்க்கையில்
நானும் பயணித்தேன்
என் பிறவி ஆசை என்
அடையாளத்தின் பிரதி –இப்
பிரபஞ்சத்தில் வர போகிறது–
என்ற பேராசையில் –எனக்கு
பிறக்கப்போகும் தேவதைக்கு
செல்லரித்து போகாத –என்
இரும்பு பெட்டியில்
இதயபூர்வமாய்அவன் /
அவளுக்கு பிடித்ததை
யெல்லாம் வாங்கி வைத்தேன்
பத்து மாசம் எப்ப முடியும்–என்
பத்திர மாசத்து தங்கத்தை
எப்போது இந்த கைகளில்
ஏந்தி கொஞ்சுவேன் என்று
எத்தனை கனாக்கள்
என் கனாக்களெல்லாம்
கானலாய் போக
வேண்டுமென அந்த
கண்ணில்லாத கல்மனசு
கொண்ட கடவுள் சபித்தானோ



தெரியவில்லை??
என் ஏஞ்சல் ஆறே மாதத்தில்
அவள் வயிற்றில் இருக்க
முடியாமல் சவமாய்–
கடவுளாகி வந்து விட்டாள்
தேவதையை கொஞ்சி
விளையாடலாம்
தேடி வந்து வதைத்து சென்ற
வாடி போன மலரை
மண்ணுக்கும்–கரையானுக்கும்
உணவாய் கொடுத்தேன்
அழுது –அழுது கண்கள்
சிவந்ததடா வாழ்க்கை
இத்தோடு முடிந்தால்
நல்லதடா ஏண்டா அழுவுற ?
இதோட வாழ்க்கை முடியுறது
இல்லை நீ இல்லாம
வீடு வாசல் இருந்து என்ன
பயன் ?? வாஞ்சையோடு
அழுது கொண்டே
என் அன்னையும் சொன்னாள்
மிடில் கிளாஸ் எல்லாம்
குழந்தை ஆசையோடு
மருத்துவமனை படி ஏறினால்
பிடுங்கும் வரை லாபம் என
எண்ணுமோ மருத்துவக்
கடவுள் ?!! மாதத்திற்கு
எத்தனை முறை
மருத்துவக்கோயில் படி
துணைவியை அழைத்து
சென்றிப்பேன் என் ஏ .டி
.எம். கார்டுகள் எல்லாம் வாய்
இருந்தால் அழுதிருக்கும்
வியர்வை தந்த பரிசை விட
வாழ்க்கை தந்த செலவு தான்
அதிகம் எத்தனை கஷ்டம்
இந்த வாழும் வாழ்க்கை
தந்தால் என்ன செய்வது??
சுற்றும் வரை பூமி
அடிக்கும் வரை காற்று
சுட்டெரிக்கும் வரை சூரியன்
நீ போராடும் வரை தான்
மனிதன் என உணர்ந்தேன்
என் நகலை என்
அடையாளத்தை எனக்கு
பிறகு என்னை போல்
ஒருவனை இவ்வுலகிற்கு
தந்து விட்டே செல்வேன்
சொந்த வீடு –புத்தகம்–
குழந்தை இந்த மூன்றையும்
படைத்து விட்டு
செல்பவனே மனிதனாம்
யாரோ சில தத்துவஞானி
சொல்லியிருக்கிறார் என
தந்தை சொல்லி
கேள்வி பட்டிருக்கிறேன்
இன்னொரு முறை
குழந்தை வரத்தை
தந்திருக்கும் கடவுளே
ஆண்–பெண்
பேதமில்லை எனக்குள் முதல்
தடவை பறித்து கொண்டது
போல்
இம்முறையும் என்
செல்வத்தை பறித்து
கொள்ளாதே ??!! நீ கடவுள்
என்பது உண்மையானால்
உன் மனதில் ஈவு –இரக்கம்
இருப்பது உண்மையென்றால்
என்னை வாழ விட்டு விடு
நான் என்ன பாவம்
செய்தேன்? என்னையே ஏன்
எப்போதும் வதைக்கிறாய் ?
வாழ்க்கையில் சோகம்
இருக்கலாம் எனக்கு
மட்டும் ஏன் சோகத்தில்
வாழ்க்கையை படைத்து
விட்டாய் ?? ஒரு
ஈ–எறும்புக்கு கூட துரோகம்
செய்யாமல் கர்வத்தோடு
வாழ்கிறேன் என்ற திமிருக்கு
கொடுத்த பரிசா?கடவுளே
உன்னிடம் போட்டி போட
உனக்கு சரி நிகர் நானில்லை
என்னை விட்டு விடு
செய்யாத தப்புக்கும்
மண்டியிட்டு மன்னிப்பு
கேட்கிறேன் முன்
ஜென்மத்தில் ஏதேனும்
பிழை செய்திருந்தால் கூட
இரக்க பட்டு என்னை விட்டு
விடு நாளை பிறக்க போகும்
மகனே /மகளே உனக்காக
காத்திருக்கிறேன் ஜென்ம–
ஜென்மமாய் எனக்குள்
ஒளித்து வைத்திருக்கும்
ஒட்டு மொத்த அன்பையும்–
பாசத்தையும் ஒரு சேர
தர போகிறேன் ... இந்த
பாவப்பட்ட அப்பாவை
இந்த முறையாவது
ஏமாற்றாமல் உன் திருமுகம்
காட்டி உன் பிஞ்சு கால்களால்
எட்டி உதைக்க வருவாயா ???
உன் மழலை பேச்சு
கேட்கத்தான் ஹெட்
போன் இல்லாத செவிகள்
காத்திருக்கின்றன உன் விரல்
தொடும் ஸ்பரிசத்தில் தான்
இந்த உடலில் உயிர்
இருக்கிறது ... எனக்கான
உலகமே நீயடா !!
நீ கருப்பா ?சிவப்பா ?
நீ ஆணா? பெண்ணா ?
தெரியாது –ஆனால்
நீ என் பிரதி நீ என் அசல்
நீ என் வாழ்க்கை நீ என்
உயிர் கோடி –கோடியாய்
தேக்கி வைத்திருக்கும்
ஊமை மனதின் காதலை
எல்லாம் உனக்கு மட்டும்
தான் தருவேன் ....
முகம் காணா முதல்வனே
எப்போது என்னை காண
வருவாய் !! நீ வருவாய் என்ற
நம்பிக்கையில் தான்துடித்து
கொண்டிருக்கிறது–என்
பாவப்பட்ட இதயம்
சத்தியமாக சொல்கிறேன்
நீ வளர்ந்தால் கூட
அடிக்க மாட்டேன்
அன்பு மட்டும் தான்



செய்வேன் –இந்த
அடிமை அப்பாவை
பார்க்க
வாடா என் செல்லமே !!

பேரன்புடன்
உன் அப்பா

**நௌஷாத் கான் .லி**



## உலகத் தமிழன் வரலாறு.! உ.வே.சா.

ஐயனே.. நீ.. தமிழ்த் தாத்தா.!
ஐயனே நீ.. தமிழ் ஊற்று.!

ஐயனே.. நீ தேடி அலைந்தது
ஓலைச்சுவடி.. நீ.. தமிழுக்குக்
கிடைத்த காலச்சுவடி.!

நீ.. கண்டு பிடித்தது
காப்பியங்கள்.. பதித்துத்
தந்தது.. இலக்கியங்கள்!

சங்க காலம் பொற்காலம்..
உங்க காலம் நற்காலம்..
தமிழ்த் தாத்தா தந்தது நம்
எதிர் காலம்.!
உன் பெயரை சொல்ல
நாவினிக்கும்.. ஐயனே உன்
கால்கள் தமிழைத் தேடி
நடக்கும்!

எழுதுகோல் உனது
கையில் இருக்கும்..
பொழுது தான் முதல்
நாடகம் பிறக்கும்...

உரை நடை உன் தலைப்
பாகை யாயிருக்கும்..
உன் இதயத்தில் தான் தமிழ்த்
தேனாயிருக்கும்!

என் தாத்தா.. நம் தாத்தா..
அனைவருக்கும் மேல் அவர்
தாத்தா..! ஏன்?
அவர் தமிழ்த் தாத்தா!

தா..தா.. என்றே.. தமிழ்
எழுத்தே.. அழைத்தத் தாத்தா!
ஓலைச்சுவடிகளுக்கு அச்சு
வடிவம் தந்த தமிழ்த் தாத்தா!

உன் பெயரைக் கூறாது ..



உன் தொண்டை
நினையாது.. நம்
பொழுதுப் புலராது!
நீ..எம் தமிழின்
வரலாறு!

**வே.கல்யாண்குமார்.**

## ஆசை ஆசையாக அழைத்தார்கள்.

கையில்
சிவப்பு வண்ணம்
நீல வண்ணமென
பல வண்ணங்களோடு.
ஒப்பனை முடிந்து
கம்பீரமாக நடந்தேன்.

எல்லோரும் திரும்பி
திரும்பி பார்த்து
சிரித்துச் சிரித்து
மகிழ்ந்தார்கள்
ஏனெனத் தெரியவில்லை
நானும் வியந்துப்
பார்த்தேன்
அவர்களோடு. அவ்வளவு
மகிழ்ச்சியாக இருந்தது.

வீட்டுக்கு வந்ததும்



"இது என்னப்பா
கோமாளி
வேசம்"
என்றாள்
அம்மா.

**@துங்கன்**
(கோயம்புத்தூர்)

## சீட் !

முன்பெல்லாம்
குரங்கு பெடல் ஓட்டி...

சைக்கிள் பாரில் அமர்ந்து பயிற்சி
செய்த பின்னரே...
சீட்டில் அமர முடிந்தது !

இப்பொதெல்லாம் 2.0 கிட்ஸ்
விஜய் மாதிரி...
ரைட்டா சீட் தான் குறி
வெக்குறாங்க....

சைக்கிளைதான் சொன்னேன் !

**எம்.பி.தினேஷ்.** கோவை

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel




WANTED
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED
Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000
Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000
Call/wapp: 9438610756




AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
A Brand of NexGen Logistics Pvt Ltd
International Courier Service
ஆண் / பெண் வேலைக்கு தேவை
கல்வி தகுதி : 10th Std முதல்
Ganapathy, Thudiyalur.
88866 56211

WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp 94386 10756




WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com







தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

முனீஸ்வரர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget <> We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY
For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998



# பல்சுவை களஞ்சியம்




# மீம்ஸ்







# சுதந்திர போராட்டம் பற்றிய அரிய தகவல்

1.மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்து மும்பை வந்தடைந்த நாள் ?
09-01-1915

2.விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கிய நாள்?
12.03.1930

3.சட்ட மறுப்பு இயக்கத்தின் தொடக்கமாக காந்தியடிகள் மேற்கொண்ட போராட்டம் எது?
உப்பு சத்தியாக்கிரகம்
(அ) தண்டி யாத்திரை

4.மாகத்மா காந்தி தனது போராட்டங்களில் சத்தியாகிரகம் என்ற தத்துவத்தை முறையாக அறிமுகப்படுத்திய நாடும் நாளும் எது? தென் ஆப்ரிக்கா, 11-09-1906

5.இந்திய அரசியல் நிர்ணய சபை முதன்முதலில் கூடிய நாள் எது?
09-12-1946

6.டாக்டர் அம்பேத்கர் தலைமையிலான இந்திய அரசியல் சாசன வரைவுக்குழு உருவாக்கிய அரசியல் சாசனத்தை தனது அழகிய கையெழுத்தால் எழுதியவர் யார்?
பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா

7."செய் அல்லது செத்து மடி" என்ற மாகத்மா காந்தியின் முழக்கம் இடம் பெற்ற இயக்கத்தின் பெயர் யாது?
வெள்ளையனே வெளியேறு இயக்கம்.

8.இந்திய தேசிய கோடியின் மைய பகுதியில் அமைந்துள்ள அசோக சக்கரம் எந்த நினைவு சின்னத்தில் இருந்து எடுக்கப்பட்டது?
சாரநாத்தில் உள்ள அசோகத்தூண்.

9.1931 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியால் அமைக்கப்பட்ட கொடிக்குழுவின் தலைவர் யார்?



சர்தார் வல்லபாய் படேல்.

10.வட்டமேசை மாநாடுகள் எந்த அறிக்கை அடிப்படையில் நடைபெற்றது?
சைமன் குழு அறிக்கை

11."ஜெய்ஹிந்த்" என்ற முழக்கத்தை இந்திய விடுதலை வேள்வியில் முதன்முதலில் பயன்படுத்தியவர் யார்?
செண்பகராமன்

12.காந்தியடிகள், 1921 ஆம் ஆண்டு தமிழகத்தில் தனது உடை பழக்கத்தை அரை ஆடை நடைமுறைக்கு மாற்றிக்கொண்ட இடமும், நாளும் எது?
மதுரை, செப்டம்பர் 22

13.நாட்டின் விடுதலைக்கு முன்னர் இரட்டை ஆட்சி முறை எந்த அறிக்கையின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது?
மாண்டேகு செம்ஸ்ஃபோட் அறிக்கை

14.1922ல் மாகத்மா காந்தி, ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெற காரணமாக இருந்த நிகழ்வு எது?
சௌரி சௌரா நிகழ்வு

15.1927 ல் சைமன் குழுவை புறக்கணிப்பதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற இடம் எது?
சென்னை

16.உப்பு சத்தியாக்கிரகம் தமிழகத்தில் தொடங்கிய மற்றும் நிறைவடைந்த இடங்கள் யாவை?
திருச்சி முதல் வேதாரண்யம் வரை

17.பூரண சுதந்திரத்தை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற இடமும் ஆண்டும் எது? லாகூர், 1929

18.1857 முதலாம் இந்திய சுதந்திர போராட்டத்தின் போது கவர்னர் ஜெனரலாக இருந்தவர் யார்?
சார்லஸ் ஜான் கானிங் பிரபு

19.இந்திய அரசியல் நிர்ணய சபையில் அரசியல் சாசனம் நிறைவேறிய நாள் எது? 26 -11 -1949

20.1946 ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்ட நாள் எது?
டிசம்பர் 6

21.டாக்டர் B.R. அம்பேத்கர் தலைமையிலான அரசியல் சாசன வரைவு குழுவில் இடம்பெற்றிருந்த தமிழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களில் இருவர் பெயரை கூறவும்.
அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் & N. கோபாலசுவாமி ஐயங்கார்.

22.இந்திய அரசு சட்டம் 1919ன் வாயிலாக மதராஸ் மாகாண சட்டசபை தொற்றுவிக்கப்பட்டு முதலாவதாக கூடிய நாள் எது?
09.01.1921

23.இந்திய அரசியல் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது அதிலிருந்த மொத்த பிரிவுகள் எத்தனை?
395 பிரிவுகள்

24.சுதந்திர இந்தியாவின் முதலாவது நாடாளுமன்ற பொதுத்தேர்தல் என்று முதல் என்று வரை நடைபெற்றது?
25.10.1951 முதல் 21.02.1952 வரை.

25.இந்திய அரசியல் நிர்ணய சபையால், நாடாளுமன்றத்தின் செயல்பாடுகள் பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?
G.V.மாவ்லங்கார்.

- T.P.குமரன்,
முகவரி: மகர்நோம்புச்சாவடி,
தஞ்சாவூர் - 613001.

# தேசிய பெண் குழந்தைகள் தினம்

பெண் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிக்கவும், பாலின வேறுபாடுகளை அகற்றவும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 24ஆம் நாள் இந்தியாவில் தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.

#இந்திய சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் ஏற்றத்தாழ்வுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2008 ஆம் ஆண்டு பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் தேசிய பெண் குழந்தைகள் தினம் தொடங்கப்பட்டது.

#பெண் குழந்தைகளுக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதையும், அவர்களின் அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்தவும், மதிக்கவும் மக்களை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
#பெண் மாணவர்களுக்கு பிரகதி உதவித்தொகை, பேகம் ஹஸ்ரத் மஹால் தேசிய உதவித்தொகை மற்றும் ஒற்றைப் பெண் குழந்தைகளுக்கான முதுகலை இந்திரா




காந்தி உதவித்தொகை உட்பட பல்வேறு உதவித்தொகைகளை மத்திய அரசு வழங்குகிறது.
#இந்தியாவின் இளம் மக்கள்தொகையில் இன்றியமையாத அங்கமாக இருக்கும் பெண் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் அதிகாரம் அளிப்பதன் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.

#சமூக அநீதிகளுக்கு எதிராக போராடிய மற்றும் பெண் கல்வியை ஊக்குவித்த பெண் சீர்திருத்தவாதிகளான சாவித்ரிபாய் ஃபுலே, பாத்திமா ஷேக் மற்றும் சந்திரபிரபா சைகியானி ஆகியோரை கவரவிக்கும் விதமாகவும் தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.



# விடுகதை

| | |
|---|---|
| ஒரு குற்றத்தை செய்ய முயற்சித்தால் தண்டனை உண்டு, ஆனால் குற்றத்தை செய்தால் தண்டிக்க முடியாது, அக் குற்றம் என்ன? | தற்கொலை |
| எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள், அவள் யார்? | செல்போன் |
| ஓவென்று உயர்ந்த மலை, நடுவே உடன் பிறப்பு இருவர் ! ஒருவரை மற்றவர் பார்ப்பதுமில்லை; பேசுவதும் இல்லை. அவர்கள் யார்? | கண், மூக்கு. |



# ஜோக்ஸ்



தத்துவம்
ஏழு பரம்பரைக்கு உட்கார்ந்து சாப்பிடுற அளவுக்கு சொத்து இருந்தாலும் பாஸ்ட் புட்க்கு போனா நின்னு தான் சாப்பிடணும்.
------------------------
------------------------
------------------

தோழிகள் இருவர் பேசிக் கொள்கிறார்கள்
ராதா: நேத்து உன் லவ்வரை பார்க்க கூஷநநஉh-க்கு போறதா சொன்னியே! என்ன ஆச்சு?

கீதா: அட! அத ஏண்டி கேக்குறா? வாத்தியாரை லவ் பண்ணது தப்பா போச்சு!

ராதா: ஏன்! என்ன ஆச்சு?

கீதா: கொஞ்ச நேரம் லேட்டா போனேன். அதுக்காக படகு மேல ஏறி நிற்க சொல்லிட்டாருடி!

ராதா: ஹா! ஹா! ஹா!
------------------------
------------------------

முத்தம்
கணவன்: டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா 500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?

மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?

கணவன்: ???
------------------------
------------------------

தொலைக்காட்சி விளம்பரம்
வரும் சனிக்கிழமை இரவு பத்து மணிக்கு... உங்கள் அபிமான தொலைக்காட்சியில்... அற்புதமான ஹாலிவுட் திரைப்படம்... தமிழில்

சிலந்தி அண்ணாச்சி (Spiderman)

உங்களின் விடுமுறை நாளை குதூகலமாக கொண்டாட ஞாயிற்றுகிழமை மதியம் 2 மணிக்கு

சூப்பர்ஹிட் ஹாலிவுட் திரைப்படம்

"அம்மாச்சி திரும்ப வந்தாச்சு" (Mummy Returns)

முற்றிலும் தமிழில்... காணத்தவறாதீர்கள்!!!



# ஜோதிடம் அறிவோம்



## உலகிலேயே 2 நிமிடங்கள் மட்டும் மூடப்படும் கோயில்



கேரளத்தில் உள்ள புகழ்பெற்ற கிருஷ்ணர் கோயில்களில் திருவார்ப்பு கிருஷ்ணர் கோயிலும் ஒன்றாகும். இந்த கோயில் குறைந்தது 1,500 ஆண்டுகள் பழமையானது. கோட்டயம் நகரத்திலிருந்து 6-8 கி.மீ தொலைவில் மீனாட்சி ஆற்றின் கரையில் திருவார்ப்புவில்அமைந்துள்ளது . (வார்ப்பு என்பது மணி உலோக பாத்திரங்களைத் தயாரிக்கக் கொல்லர்களால் பயன்படுத்தப்படும் வார்ப்பு ஆகும்) இங்குள்ள கிருஷ்ணர், பக்தர்களின் அனைத்துக் கறைகளையும், குறைகளையும் நீக்கும் கடவுள்.

பசி கிருஷ்ணர்

கம்சனைக் கொன்ற பிறகு, கிருஷ்ணருக்குப் பசியும், கோபமும் அதிகரித்ததாகக் கூறப்படுகிறது. கிருஷ்ணர் அதே ஸ்வரூபத்தில் காட்சியளிக்கும் இடம் இப்போதும் கேரளத்தின் கோட்டயம் மாவட்டத்தில் உள்ள திருவார்ப்பு ஸ்ரீகிருஷ்ணர் கோயிலில் உள்ளது. இங்குள்ள இந்த கிருஷ்ணர் எப்போதும் பசியுடன் இருப்பதாக ஐதீகம். எந்த நேரத்திலும் பசி எடுக்கும் என்பதால் தான், மற்ற கோயில்களைப் போலல்லாமல், இந்தக் கோயில் முழு பகலும் இரவும், வருடத்தின் 365 நாள்களும் திறந்திருக்கிறது. இரவு 11.58 மணி முதல் 12.00 வரை அதாவது இரண்டு நிமிடங்கள் மட்டுமே இக்கோயிலின் நடை அடைக்கப்படும்.

இந்த கிருஷ்ணருக்கு நான்கு கைகள் உள்ளன, வலது கையில் உணவு உள்ளது, பின்புற கைகளில் சங்கு மற்றும் சக்கரம் உள்ளன. இந்த கிருஷ்ணரின் தோற்றம் குறித்துப் பல கதைகள் உள்ளன. அவை அனைத்தும் நான்கு கைகளைக் கொண்ட கிருஷ்ணரின் சிலையை ஒரு உருளியில் (மணி உலோகத்தால் செய்யப்பட்ட தட்டையான பாத்திரம்) மீட்டெடுத்தது பற்றிப் பேசுகின்றன.

இந்தக் கோயில் மகாபாரதத்துடன் தொடர்புடையது. பாண்டவர்கள் காட்டில் வாழ்ந்தபோது, கிருஷ்ணர் அவர்களுக்கு நான்கு கைகளைக் கொண்ட தனது சிலையை வழங்கினார், இதனால் அவர்கள் தினமும் அதை வணங்க முடியும். பாண்டவர்கள் காட்டில் தங்கள் வனவாசத்தை முடித்துவிட்டுத் திரும்பிச் செல்ல விரும்பியபோது, அந்தப் பகுதி மக்கள் அந்த சிலையைக் கேட்டார்கள். இது சேர்த்தலை மக்களால் வழிபடப்பட்டது. ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால், அவர்களால் அந்த சிலையை வைத்து வழிபாட்டைத் தொடர முடியவில்லை. எனவே அவர்கள் அந்த சிலையைக் கடலில் வீசிவிட்டனர்.

நீண்ட நாள்களுக்குப் பிறகு துறவியான பில்வமங்கள சுவாமி (ஆதிசங்கரரின் சீடர் பத்மபதர் என்றும் அழைக்கப்படுகிறார்) சிலை வீசப்பட்ட இடத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தார். அவர் பயணித்த படகு ஒரே இடத்தில் நகர முடியாமல் திடீரென்று தண்ணீர் வற்றியது, கிருஷ்ணரின் சிலை தோன்றியது. துறவி அந்த சிலையை எடுத்துக்கொண்டு மேற்குப் பக்கம் பயணித்தார். ஆனால் படகு மேற்கு நோக்கிச் செல்லாமல், குன்னம், பள்ளிக்கார வழியாக கிழக்குப் பக்கம் சென்று, தற்போது கோயில் அமைந்துள்ள இடத்தை அடைகிறது. அந்த கோயிலில் எந்த சிலைகளும் இல்லாமல் இருப்பதைக் கண்டார் துறவி. பின்னர் அவர் அந்த சிலையை அந்த கோயிலில் வைத்து வழிபாட்டிற்குத் தகுதியானதாக மாற்றினார்.

பண்டையக் காலங்களில், கடவுளுக்கு மாங்காய் ஊறுகாய், தேங்காய் தண்ணீர் (இளநீர்) மட்டுமே காணிக்கையாக அளிக்கப்பட்டது. கிருஷ்ணர் சிலை இப்போது கோயில் இருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது. இன்றும், ஆராட்டு (கேரளத்தில் நடைமுறையில் உள்ள ஒரு சடங்கு) நடைபெறும்போது கிருஷ்ணர் சிலை மடத்திற்கு (சாமியார் மடம்) கொண்டு செல்லப்பட்டு மாங்காய் ஊறுகாய் மற்றும் தேங்காய் தண்ணீர் (இளநீர்) வழங்கப்படுகிறது. இக்கோயிலில் சிவன், பகவதி, கணபதி, சுப்பிரமணியர், யட்சி சன்னதிகளும் உள்ளன.

திருவார்ப்பு ஸ்ரீகிருஷ்ணர் கோயிலின் சிறப்பு

இந்த கோயிலில் உள்ள கிருஷ்ணரை வணங்கி, பிரசாதம் சாப்பிடுவர்கள் நவக்கிரக தோஷம், கிரகண தோஷம், சந்தான தோஷம், சர்ப்ப தோஷம், விவாக (திருமண) தோஷம், பிரம்மஹத்தி தோஷம் ஆகியவற்றிலிருந்து விடுபடுவார்கள். நவக்கிரகங்கள், அஷ்டதிக் பாலகர்கள் மற்றும் முப்பத்து மூன்று தேவர்கள் கிருஷ்ணருடன் வலுவான உறவில் இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

கோட்டயம் ரயில் நிலையம் கோயிலிலிருந்து 8.2 கி.மீ தொலைவில் உள்ளது. இறைவன் தனது நான்கு கைகளுடன் மேற்கு நோக்கி இருக்கிறார். அதிகாலை 2 மணியளவில் கோயில் திறக்கப்படுகிறது.

## சஷ்டி



அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் ஆறாவது திதி சஷ்டி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் சஷ்டியை சுக்கில பூரணையை (பௌர்ணமி) அடுத்துவரும் சஷ்டியை கிருஷ்ண அழைக்கின்றனர். சஷ்டி என்றும், சஷ்டி என்றும்

சஷ்டி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

மெலிந்த தேகத்தை உடையவர்கள்.

புகழ் உடையவர்கள்.

முன்கோபம் கொண்டவர்கள்.

பிரபலமானவர்களின் நட்புகளை உடையவர்கள்.

## சப்தமி



அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் ஏழாவது திதி சப்தமி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் சப்தமியை சுக்கில பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் சப்தமியை கிருஷ்ண அழைக்கின்றனர். சப்தமி என்றும், பட்ச சப்தமி என்றும்

சப்தமி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள்

உடல் வலிமை உடையவர்கள்.

செல்வ வளம் உடையவர்கள்.

பெரியோர்களிடம் மதிப்பு கொண்டவர்கள்.

இரக்க குணம் உடையவர்கள்.

மற்றவர்களுக்கு நன்மை செய்யும் குணம் கொண்டவர்கள்.

எதிலும் கண்டிப்பு குணம் உடையவர்கள்.

## அஷ்டமி



அமாவாசை நாளையும், பூரணை (பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் எட்டாவது திதி அஷ்டமி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் அஷ்டமியை சுக்கில பட்ச அஷ்டமி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் அஷ்டமியை கிருஷ்ண பட்ச அஷ்டமி என்றும் அழைக்கின்றனர்.

அஷ்டமி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

வாக்குவன்மை உடையவர்கள்.

புத்திர பாக்கியம் உடையவர்கள்.

செல்வ வளமும், செல்வாக்கும் கொண்டவர்கள்.

மனைவிக்கு கட்டுப்படக்கூடியவர்கள்.

ஆசைகள் அதிகம் உடையவர்கள்.

## நவமி



அமாவாசை நாளையும், பூரணை (பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் ஒன்பதாவது திதி நவமி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் நவமியை சுக்கில பட்ச நவமி என்றும், பூரணையை (பௌர்ணமி) அடுத்துவரும் நவமியை கிருஷ்ண பட்ச நவமி என்றும் அழைக்கின்றனர்.

நவமி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

மற்றவர்கள் போற்றும் படி வாழக்கூடியவர்கள்.

திடமான உடலமைப்பை உடையவர்கள்.

மனதில் தைரியம் கொண்டவர்கள்.

எதிர்ப்புகளுக்கு அச்சம் கொள்ளாதவர்கள்.

கலைகளில் ஆர்வம் கொண்டவர்கள்.

தனது விருப்பம் போல் வாழக்கூடியவர்கள்.

## தசமி



அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் பத்தாவது திதி தசமி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் தசமியை சுக்கில பூரணையை(பொர்ணமி) அடுத்துவரும் தசமியை கிருஷ்ண அழைக்கின்றனர். பட்ச தசமி என்றும், பட்ச தசமி என்றும் தசமி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :வியாபாரத்தில் ஆர்வம் கொண்டவர்கள்.

அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபாடு உடையவர்கள்.

அறிவாற்றல் உடையவர்கள்.

ஆசாரம் உடையவர்கள்.

குறைகளை விரும்பாதவர்கள்.

பெரியவர்களிடத்தில் அன்பு கொண்டவர்கள்.

நண்பர்களின் மீது பிரியம் உடையவர்கள்.

உதவும் மனப்பான்மை கொண்டவர்கள்.

குடும்ப உறுப்பினர்களின் மீது அன்பு கொண்டவர்கள்.

தர்ம காரியங்கள் செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள்.

# தோஷங்களும் நீங்க திருவானைக்கா ஜம்புகேஸ்வரர்

பாடல் பெற்ற காவிரி வடகரைத் தலங்கள் வரிசையில் 60-வது தலமாக இருக்கும் திருவானைக்காவல், பஞ்சபூதத் தலங்களில் அப்பு (நீர்) தலம். தமிழ்நாட்டில் உள்ள பெரிய சிவாலயங்களில் திருவானைகாவல் தலமும் ஒன்று. ஆறு ஆதாரத் தலங்களில் இத்தலம் சுவாதிஷ்டானத் தலம். தேவாரம் பாடிய மூவராலும் பதிகம் பாடப்பெற்ற சிறப்புடைய தலங்களில் ஒன்று. இத்தல இறைவனையும், இறைவியையும் வழிபட்டு வர சகல தோஷங்கள் நீங்கும். திருமணத் நடை விலகும், குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

இறைவன் பெயர்: ஜம்புகேஸ்வரர்

இறைவி பெயர்: அகிலாண்டேஸ்வரி

இத்தலத்துக்கு திருநாவுக்கரசர் பதிகம் மூன்றும், திருஞானசம்பந்தர் பதிகம் மூன்றும், சுந்தரர் பதிகம் ஒன்றும் என மொத்தம் 7 பதிகங்கள் உள்ளன.

எப்படிப் போவது?

திருவானைக்கா, திருச்சி நகரின் ஒரு பகுதியாகும். நகரின் பல பகுதிகளில் இருந்தும் திருவானைக்காவல் வர பேருந்து வசதிகள் இருக்கின்றன.

ஆலய முகவரி

அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோவில்

திருவானைக்காவல்

திருவானைக்காவல் அஞ்சல்

திருச்சி வட்டம்

திருச்சி மாவட்டம் 620 005.

இவ்வாலயம் தினமும் காலை 7 மணி முதல் பகல் 1 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

தல வரலாறு

புராண காலத்தில் வெண் நாவல் மரங்கள் நிறைந்த காடாக இத்தலம் இருந்தது. அங்கே ஒரு வெண் நாவல் மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. சிவகணங்களில் இருவர், தாங்கள் பெற்ற சாபம் காரணமாக இக்காட்டில் ஒரு யானையாகவும், சிலந்தியாகவும் பிறந்தனர். சிவலிங்கம், கூரையில்லாமல் வெய்யில் மழையில் கிடந்தது. சிலந்தி, சிவலிங்கத்தின் மேல் வலை பின்னி வெய்யில், மழை மற்றும் மரத்தின் சருகுகள் லிங்கத்தின் மேல் விழாமல் காத்தது. யானை காவிரியில் இருந்து தன் துதிக்கை மூலம் நீரும், மற்றும் பூவும் கொண்டுவந்து வழிபட்டது.

யானை, சிலந்தி பின்னிய வலையை அசிங்கமாகக் கருதி அதை அழித்துவிட்டுச் செல்லும். சிலந்தி மறுபடியும் வலை பின்னி தன் வழிபாட்டைத் தொடரும். தினந்தோறும் இது தொடர, யானையை தண்டிக்க நினைத்த சிலந்தி, யானையின் துதிக்கையில் புக, யானையும் சிலந்தியும் போராட, கடைசியில் இரண்டும் மடிந்தன.

இவற்றின் பக்திக்கு மெச்சிய சிவபெருமான், யானையை சிவகணங்களுக்குத் தலைவனாக ஆக்கினார். சிலந்தி, மறுபிறவியில் கோச்செங்கட் சோழன் என்ற அரசனாகப் பிறந்தது. பூர்வஜென்ம வாசனையால் கோச்செங்கட் சோழன், யானை ஏற முடியாதபடி குறுகலான படிகளைக் கொண்ட கட்டுமலை மீது சிவலிங்கம் ஸ்தாபித்து 70 கோவில்கள் கட்டினான். அவை யாவும் மாடக்கோவில் என்று அழைக்கப்படுகின்றன. கோச்செங்கட் சோழன் கட்டிய முதல் மாடக்கோவில் திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் ஆலயமாகும்.

இந்த தல வரலாற்றை திருநாவுக்கரசர் தனது திருக்குறுக்கை சிவஸ்தலம் பதிகத்தில் (4-ம் திருமுறை - "ஆதியில் பிரமனார் தாம்" என்று தொடங்கும் பதிகம் - (4-வது பாடலில்) தெரிவிக்கிறார்.

சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழல் பந்தர் செய்து

உலந்து அவண் இறந்த போதே கோச்செங்கணானும் ஆகக்

கலந்த நீர்க் காவிரீ சூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்

குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே

இப்பாடலின் பொழிப்புரை

திருவானைக்காவிலுள்ள பெருமானுக்கு அழகிய நிழலைத்தரும் பந்தலை அமைத்த சிலந்தி இறந்தபின் மறுபிறப்பில் சுவாமியுடன் கலந்து பயின்ற நீரை உடைய காவிரியாற் சூழப்பட்ட



சோழ நாட்டில் அந்நாட்டு மன்னர் மரபிலே கோச்செங்கண்ணான் என்ற பெயருடைய அரசனாகுமாறு பிறப்பித்து விட்டார் குறுக்கை வீரட்டனார்.

கோயில் சிறப்பு

காவேரி ஆற்றுக்கும் கொள்ளிடத்துக்கும் இடைப்பட்ட தீவுப்பகுதியில், திருவரங்கத்துக்கு அருகே அமைந்துள்ளது. திருவானைக்கா, பஞ்சபூத ஸ்தலங்களில் அப்பு ஸ்தலம். மூலஸ்தான லிங்கம் இருக்குமிடம் தரைமட்டத்துக்குக் கீழே இருப்பதால், எப்போதும் தண்ணீர் கசிவு இருந்துகொண்டே இருக்கும். திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் அலயம் ஒரு மிகப்பெரிய கோவில். சுமார் 18 ஏக்கர் நிலப்பரப்பில், நீண்ட உயரமான மதில்களும், நான்கு திசைகளிலும் கோபுரங்களும், ஐந்து பிராகாரங்களும் உடையது.

கிழக்கு திசையிலுள்ள கோபுரம் 13 நிலைகளை உடையதாகும். ஆனால், இக்கொபுர வழி உபயோகத்தில் இல்லை. மேற்கிலுள்ள 7 நிலை கோபுர வாயிலே பிரதான நுழைவாயிலாக உள்ளது. இக்கோபுர வாயில் வழியே உள்ளே சென்று 2-வது கோபுர வாயிலையும் கடந்து நேரே உள் சென்றால் இறைவன் சன்னதியை அடையலாம். அம்மன் அகிலாண்டேஸ்வரியின் சன்னதி, நான்காம் பிராகாரத்தில் உள்ளது. தனி சன்னதியில் கிழக்கு நோக்கியவாறு அகிலாண்டேஸ்வரி காட்சி தருகிறாள். மூலவர் ஜம்புகேஸ்வரர், ஐந்தாம் உள்பிராகாரத்தில் அப்புலிங்கமாக மேற்கு நோக்கி காட்சி தருகிறார். இறைவன் சந்நிதியிலுள்ள 9 துளை சாளரம் வழியே இறைவனை தரிசித்தால், ஒன்பது தீர்த்தங்களில் நீராடிய பலன் கிடைக்கும். இந்த துவாரங்கள் வழியே இறைவனை தரிசிப்பதுதான் முறையாகக் கருதப்படுகிறது.

திருவானைக்கா, அன்னை அகிலாண்டேஸ்வரியின் ஆட்சித்தலம். அகிலாண்டேஸ்வரி அம்மையின் காதுகளில் இருக்கும் காதணிகள் பெரிதாக பக்தர்களின் பார்வைக்கு மிக நன்றாக பளிச்சென்று தெரியும். இந்தக் காதணிகளை தாடகங்கள் என்று அழைப்பார்கள். அம்பாள் முன்னொரு காலத்தில் மிக உக்கிரமான உருவத்துடன் கொடூரமாக இருந்ததாகவும், பக்தர்கள் வழிபாடு செய்ய மிகவும் அச்சமுற்றதாகவும் இருக்க, ஸ்ரீஆதிசங்கரர் ஸ்ரீசக்ர ரூபமான இக்காதணிகளைப் பிரதிஷ்டை செய்து அம்பாளின் உக்கிரத்தைத் தணித்தார் என்று தல வரலாறு கூறுகிறது. அன்னையின் உக்கிரத்தை தணிப்பதற்காக முன்புறம் விநாயகரையும், பின்புறம் முருகனையும் ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்துள்ளனர்.

உஷத் காலத்தில் கோபூஜையும், உச்சிக் காலத்தில் சுவாமிக்கு தினமும் அன்னாபிஷேகமும் நடைபெறுகிறது. உச்சிக்கால பூஜையின்போது, சிவாச்சாரியார் அன்னை அகிலாண்டேஸ்வரிபோல பெண் வேடமிட்டு கிரீடம் அணிந்துகொண்டு, மேள வாத்தியங்களோடு யானை முன்னே செல்ல, சுவாமி சந்நிதிக்கு வந்து சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்வது இத்தலத்தின் தனிச் சிறப்பாகும். மேலும், இத்தலத்தின் நான்காவது திருச்சுற்று மதிலை இறைவனே நேரில் ஒரு சித்தரைப்போல் வந்து மதில் சுவர் எழுப்பிய பணியாளர்களுக்கு திருநீறை கூலியாகக் கொடுத்ததாக தல வரலாறு கூறுகிறது. பணியாளர்களின் உழைப்புக்கேற்ப திருநீறு தங்கமாக மாறியதாகவும் தல வரலாறு கூறுகிறது. இதனால் இம்மதிலை திருநீற்றான் மதில் என்று அழைக்கிறார்கள்.

மேலும், இவ்வாலயத்தில் உள்ள ஆதி ஜம்புகேஸ்வரர் சந்நிதியும், குபேரலிங்கம் சந்நிதியும் பார்த்து தரிசிக்க வேண்டியவை. இத்தலத்திலுள்ள இறைவனை தரிசிப்பதற்காகவே ரங்கநாதர் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருப்பதாக கஜாரண்ய ஷேத்திர மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. வருடத்தில் ஒருநாள் ஸ்ரீரங்கத்தில் இருந்து ரங்கநாதர் புறப்பட்டு இத்தலம் வந்து தங்கியிருந்து, அன்றிரவு விசேஷ அலங்காரத்துடன் ஸ்ரீரங்கம் திரும்பும் உற்சவம் நடைபெறுகிறது. திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் ஆலயம் வாழ்நாளில் தரிசிக்க வேண்டிய ஆலயங்களில் ஒன்றாகும்.

## மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு தையல் இயந்திரங்கள்



சென்னை இன்ஃபைனைட் சேவா அமைப்பு சார்பில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு தையல் இயந்திரங்களை கவர்னர் ரவி வழங்கினார்.

## அழகம்மன் கோயில் மாசி திருவிழா கொடியேற்றம்



நாகர்கோவில் வடிவீஸ்வரம் அழகம்மன் கோயில் மாசி திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் துவங்கியது.

# சோடவரம் சித்திரக்கலா நிலையம் எட்டாவது அகில இந்திய ஓவியப் போட்டி



சோடவரம் சித்திரக்கலா நிலையம் எட்டாவது அகில இந்திய ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற, ஷ்யாம் சுந்தர், ரிபையா, கயல், k.அனன்யா, கிருஷ்ணப்ரியா, தக்ஷின்லிங்கம், குகன்கீத், முத்தழகுசேதுபதி, ஹர்ஷிவனா ஸ்ரீ, முத்தழகுமீனாஷி, அவயன் சவுத்ரி, s.அனன்யா, ரஜனிஷ், கிருஷ்னவி, யோகேஸ்வர், தீக்ஷிதா, இனிகாபயாஸ், குந்தனிகா, அதயகங்கா, ஆகிய மாணவர்கள் தங்கப்பதக்கம் பெற்றனர். சூளைமேட்டில் உள்ள தர்ஷினி கலைக்கூடத்தில் பயின்ற மாணவர் ஷாம் சுந்தர் அவர்களுக்கு நிறுவனர் தர்மலிங்கம் அவர்கள் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

## முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள "ததும்பும் தமிழ்ப் பெருமிதம்" நூல் வெளியீட்டு நிகழ்வு



முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள "ததும்பும் தமிழ்ப் பெருமிதம்" நூல் வெளியீட்டு நிகழ்வில் சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள் தங்கம்தென்னரசு, சாமிநாதன்,துணை சபாநாயகர் பிச்சாண்டி, கொறடா ராமச்சந்திரன்.

## இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி



தமிழ் மற்றும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதியின் 4-ஆம் தொகுதியை, சென்னை விக்டோரியா ஹாலில் நேற்று துணை முதல்வர் உதயநிதி வெளியிட்டார். அமைச்சர்கள் சேகர்பாபு, அன்பில்மகேஷ் பொய்யா மொழி, பாடநூல் கழகத்தலைவர் லியோனி மற்றும் அதிகாரிகள் உடன் உள்ளனர்.

## கந்தசுவாமி கோவில் பிரம்மோற்சவ பெருவிழா



திருப்போரூர் கந்தசுவாமி கோவில் பிரம்மோற்சவ பெருவிழா நேற்று கொடி யேற்றத்துடன் தொடங்கியது. சிறப்பு அலங்காரத்தில் கந்தபெருமான்.

## பிரம்மோற்சவம் கொடியேற்றம்



காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயில் மாசி மாத பிரம்மோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது

## ரவுசு மணி

உன்னை
மதித்தால்
அடுத்தவருக்கு
வாசம் வீசும்
மலராக இரு...
மிதித்தால்
அந்த மலரில்
இருக்கும்
முள்ளாக
இரு....



V. முத்து ராமகிருஷ்ணன்

## மாசித் திருவிழா கொடியேற்றம்



தென்காசியில் பிரசித்தி பெற்ற காசி விஸ்வநாதர் திருக்கோவில் மாசித் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

## மக்கள் சேவகர் விருது



சென்னை மேற்கு மாவட்ட பாஜக பொதுச் செயலாளர் எம்.ஏ.குமரன் கடந்த 9 ஆண்டுகளாக ஏழைகளுக்கு மாதம் தோறும் நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறார். இதையொட்டி அவருக்கு 'மக்கள் சேவகர்' விருதை லயன்ஸ் கிளப் இன்டர்நேஷனல் (374 1ஏ) அமைப்பு வழங்கியது.

## மாற்று கட்சியினர் அதிமுகவில் இணைந்தனர்



கரூர் மாவட்டத்தை சேர்ந்த திமுக,காங்கிரஸ் மற்றும் தமிழக வெற்றிக் கழகம் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர் எம்ஆர் விஜயபாஸ்கர் முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்.

## துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை



முதலமைச்சர் ஸ்டாலின், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு துறை சார்ந்த அலுவலர்களுடன் அமைச்சர் மனோ தங்கராஜ், கலெக்டர் அழகுமீனா நேற்று ஆலோசனை நடத்தினர்.



சிவகாசி தொகுதி திருத்தங்கலில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி அதிமுக பரப்புரையை துவக்கி வைத்தார்.

## நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மேம்பாலத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்



மதுரை கோரி பாளையத்தில் ரூ.213 கோடியில் கட்டப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மேம்பாலத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

## வைகோவிடம் கட்சி நிர்வாகிகள் தேர்தல் நிதி



நெல்லையில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோவிடம் கட்சி நிர்வாகிகள் தேர்தல் நிதி வழங்கினர்.

## உண்டியல் ஏந்தி கட்சிக்கு நிதி



சென்னை என்எஸ்சி போஸ் சாலையில் சிபிஎம் மாநில செயலாளர் சண்முகம், உண்டியல் ஏந்தி கட்சிக்கு நிதி திரட்டினார்.

## அம்மா கோப்பை கிரிக்கெட் போட்டி



கோவையில் 64 அணிகள் பங்கேற்கும் அம்மா கோப்பை கிரிக்கெட் போட்டியை சட்டமன்ற உறுப்பினர்கள் அம்மன் கே அர்ச்சுணன் , ஜெயராம் துவக்கிவைத்தனர்.

## வாசுதேவநல்லூர் தொகுதியில் போட்டியிட விருப்ப மனு



அதிமுகவில் இருந்து தவெகவுக்கு தாவிய, முன்னாள் எம்எல்ஏ மனோகரன், நேற்று தவெக நிர்வாகி ஆனந்திடம், வாசுதேவநல்லூர் தொகுதியில் போட்டியிட விருப்ப மனு அளித்தார்.

## நலத்திட்ட உதவி



சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி, குத்ரத் அலி மக்கான் தெருவில் துணை முதல்வர் உதயநிதி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்



சென்னை பாண்டி பஜாரில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். தமிழச்சி எம்.பி.,ஜெ.கருணாநிதி எம்எல்ஏ உடன் உள்ளனர்.

## அழகுக்கலை பயிற்சி



சென்னை மண்ணடி பவழக்காரத் தெருவில் தயாளு அம்மாள் பயிற்சிப் பள்ளியில் அழகுக்கலை பயிற்சி பெற்ற 360 மாணவர்களுக்கு அழகுக்கலை இருக்கை & உபகரணங்களை அமைச்சர்கள் சேகர்பாபு, கயல்விழி செல்வராஜ், நடிகர் தம்பி ராமையா வழங்கினர்.

## ஆலோசனைக் கூட்டம்



கடலூர் மேற்கு மாவட்டம், விருத்தாசலம் தெற்கு ஒன்றிய அதிமுக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் அருண்மொழித் தேவன் பேசினார்.

## கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை



திருச்சியில் அடுத்த மாதம் பிரதமர் மோடி பங்கேற்கும் என்டிஏ மாநாடு தொடர்பாக மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

## இஷின்ரியு கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி



தாழையூத்தில் 49வது தென்மாவட்ட அளவிலான இஷின்ரியு கராத்தே சாம்பியன்ஷிப் போட்டிகளை நெல்லைதுணை மேயர் கே.ஆர்.ராஜூ துவக்கி வைத்தார்.

## ஆலோசனை கூட்டம்



மார்ச் 1-ம் தேதி மதுரையில் பிரதமர் மோடி பங்கேற்கும் பொதுக்கூட்டம் குறித்து கன்னியாகுமரி ஒருங்கிணைந்த பாஜக மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் முன்னாள் மத்தியமந்திரி பொன் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடந்தது.

## திருவிளக்கு பூஜை



கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் உத்திரன் கால்கண்டன் சாஸ்தா திருக்கோவில் அஷ்டபந்தன கும்பாபிஷேக விழாவில் திருவிளக்கு பூஜை நடந்தது.



அறந்தாங்கி சுப்பிரமணியபுரத்தில் சக்திகேந்திர தெருமுனை பிரச்சார கூட்டம் நடந்தது.

## யாத்ரி கஃபே துவக்க விழா



கோவை விமான நிலையத்தில் பயணிகளுக்காக மலிவுவிலையில் தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கும் 'UDAN யாத்ரி கஃபே' துவக்க விழா, மகளிர் சுய உதவி குழுவின் கோவை கோரா காட்டன் ஆடை விற்பனை அங்காடி, குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி, நூலக வசதி அறிமுக விழா நேற்று நடந்தது. மத்திய அமைச்சர்கள் ராம்நாயக்,மோகோல் முரளிதர், எல்.முருகன் ஆகியோருடன் வானதி சீனிவாசன் எம்எல்ஏ பங்கேற்றனர்.

# சுற்றுலா: தேனியில் நீங்கள் சுற்றிபார்க்க வேண்டிய 5 முக்கிய இடங்கள்!

நம் தமிழநாட்டில் இயற்கையான சுற்றுலா தலங்களின் எண்ணிக்கை ஏராளம். அந்த வரிசையில் இயற்கை மற்றும் விவசாயத்திற்குப் புகழ்பெற்ற இடங்களாக இருப்பது கம்பமும் தேனியும். கோடை விடுமுறையானது நெருங்கிக்கொண்டிருக்கும் சமயத்தில் குறைந்த செலவில் குடும்பத்தோடு சிறப்பான சுற்றுலா அனுபவத்தைப் பெறுவதற்கான சிறந்த தேர்வாக இருக்கும் தேனி கம்பம் பகுதியின் முக்கிய ஐந்து இடங்களின் பட்டியல் இதோ!

1. சுருளி நீர் வீழ்ச்சி

சுருளி அருவி தேனி மாவட்டத்தில் உத்தமபாளையத் திலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவிலும், கம்பம் நகரிலிருந்து 8 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. சுமார் 40 அடி உயரம் உள்ள இந்த அருவியில் நீர்ப் போக்குவரத்து அதிகமாய் இருப்பது வழக்கம்தான். இங்கு பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவர். அதோடு இங்குள்ள 'சுருளியாண்டவர் கோயில்' புகழ்பெற்றது. இளங்கோ அடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தில் இவ்வருவி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்த சுருளி நீர்வீழ்ச்சியானது



கீழ்ச் சுருளி மற்றும் மேல் சுருளி என இரண்டாக கண்டறியப்படுகிறது.

2. சேரன்ஸ் பூங்கா

சேரன்ஸ் பூங்கா தேனியில் சுற்றுலாவிற்காக வருபவர்களுக்கு சிறந்த தேர்வாக இருக்கிறது. மேலும், இது குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிட சிறந்த இடமாகும் ஏனெனில் இங்கு பல பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்திருக்கின்றன. இந்தப் பூங்காவில் குழந்தைகள் விளையாடும் பகுதி, வீடியோ கேம்கள், படகு சவாரி, திறந்தவெளி திரைப்படக்காட்சிப் பகுதி மற்றும் பல பொழுதுபோக்கு சிறப்பம்சங்களும் நிறைந்து காணப்படுகின்றன. அதுமட்டுமின்றி இங்கு 100க்கும் அதிகமான அரிய வகை மீன்கள் வசிக்கும் 'அக்வா கேவ்' என்ற இடமும் உள்ளது.



3. மேகமலை

இயற்கையான பசுமை நிறைந்த சுற்றுச்சூழல் மற்றும் குளிர்ந்த காற்று சொல்லும் மேகமலையின் அழகை. இங்கு பெரிய மரங்கள், பசுமையான நிலப்பரப்பு, அழகான சாய்ந்த நிலப்பரப்பில் உள்ள தேயிலைத்தோட்டங்கள், காபி பயிர்த் தோட்டங்கள், உயரமான மலைகள், ஆழமான பள்ளம், அழகிய ஏரிப்பகுதி என பல இயற்கை அழகுக் கொட்டிக் கிடக்கும் இடம்தான் மேகமலை. கோடை விடுமுறைகளில் குடும்பத்தோடு சுற்றுலா செல்ல சிறந்த இடமாக நீங்கள் இதனை தேர்வு செய்துகொள்ளலாம்.

4. கும்பக்கரை அருவி

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் இருந்து 8 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது கும்பக்கரை அருவி. கொடைக்கானல் வன உயிரின சரணாலயத்தில் அமைந்துள்ள இப்பகுதி தேவதானப்பட்டி வனச் சரகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதோடு வட்டக்கானல், கொடைக்கானல் மற்றும் மேற்குத் தொடர்ச்சிமலைப்பகுதியில் பெய்யும் மழைநீர் இங்கு அருவியாகக் கொட்டுகிறது. வருடந்தோறும் மக்கள் இங்கு கூட்டம்கூட்டமாக வந்து தங்களுடைய கோடை விடுமுறையை அருவியில் நீராடியவாறு கழித்துவிட்டு செல்கின்றனர்.

5. வைகை அணை

தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி அருகே அமைந்துள்ள வைகை அணையானது, இயற்கையான அழகு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த புகழ்பெற்ற சுற்றுலா தலமாகும். வைகை ஆறானது சுமார் 111 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இது மதுரையின் குடிநீர் மற்றும் பாசனத்திற்கான மையப்பகுதியாகவும் செயல்படுகிறது. அணையைச் சுற்றியுள்ள பசுமையான சூழல், ஆற்றின் எல்லையில் உள்ள அழகிய மலைகள் மற்றும் 'லிட்டில் பிருந்தாவன்' என்று அழைக்கப்படும் நன்கு பராமரிக்கப்படும் தோட்டம் இவை அனைத்தும் பார்வையாளர்களை தன்வசம் கட்டி இழுக்கின்றன. அணையின் அமைதியான சூழல் மற்றும் குழந்தைகளுக்கான மகிழ்ச்சிகரமான விளையாட்டுப் பொழுதுபோக்கு பகுதிகள் ஆகியவை பலருக்கும் விருப்பமான சுற்றுலாத் தலமாக இருந்து வருகிறது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ஆர்பிஐ (RBI) யில் 650 காலிப்பணி இடங்கள்

இந்தியாவின் மத்திய வங்கியான ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா (RBI) தனது பல்வேறு அலுவலகங்களில் உதவியாளர் (Assistant) பதவிக்கான 650 காலியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டுள்ளது. தேர்வு இரண்டு கட்ட ஆன்லைன் தேர்வுகள் (Preliminary & Main) மற்றும் மொழித்திறன் தேர்வு (Language Proficiency Test) அடிப்படையில் நடத்தப்படும். முழுமையான அறிவிப்பு விவரங்கள் வங்கியின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.rbi.org.in யில் 2026 பிப்ரவரி மாதம் மூன்றாவது வாரத்தில் வெளியிடப்படும். விண்ணப்பங்கள் ஆன்லைன் முறையில் மட்டுமே ஏற்கப்படும்.

### பிஒபி (BOB) - வங்கியில் 253 காலிப் பணியிடங்கள்

பொதுத்துறை வங்கிகளில் ஒன்றான பாங்க் ஆப் பரோடா (Bank of Baroda) பல்வேறு பிரிவுகளில் காலியாக உள்ள 253 சிறப்பு அதிகாரிகள் (Specialist Officer (SO)) பணியிடங்களை நிரப்புவதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது. வங்கி துறையில் முன்னேற்றமான பணியை நாடுபவர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாகும். கல்வித்தகுதி: (Marketing / Finance) மார்க்கெட்டிங்/ பைனான்ஸ் போன்ற ஏதேனும் ஒரு துறையில் எம்பிஏ (MBA) அல்லது முதுநிலை டிப்ளமோவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட துறையில் பணி அனுபவம் பெற்று இருப்பது அவசியமாகும். இப்பணி அனுபவங்கள் ஒவ்வொரு பதவிக்கேற்ப மாறுபடும். வயது வரம்பு - ஜனவரி 1, 2026 தேதியின்படி குறைந்தபட்சம் 22 வயது முதல் அதிகபட்சம் 32 வயது வரை இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளின்படி எஸ்சி/எஸ்டி/ஓபிசி/ பிடபுள்யுடி பிரிவினருக்கு வயது தளர்வு வழங்கப்படும். தேர்வு முறை - எழுத்துத் தேர்வு ஆன்லைனில் நடைபெறும். பணி அனுபவம் மற்றும் கல்வித் தகுதியின் அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இது பற்றிய முழு விபரம் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். தமிழ்நாட்டில் சென்னையில் மட்டுமே தேர்வு நடைபெறும். விண்ணப்பக் கட்டணம் - பொது, ஓ.பி.சி பிரிவினர்களுக்கு ரூ.850. எஸ்.சி., எஸ்.டி., முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், பெண்கள் ஆகியோர் ரூ.175 கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம். முழுமையான அறிவிக்கையைப் பெற www.bankofbaroda.bank.in என்ற இணையதளத்தைப் பார்வையிடலாம்.

## பிப்ரவரி மாதம் (2026)
# வார ராசிபலன்
### 22.2.2026 முதல் 28.2.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் எடுத்த வேலையை எப்பாடுபட்டாவது செய்து முடிப்பீர்கள். அடுத்தவர் சுமத்திய வீண் குற்றச்சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். திடீர் மன வருத்தம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பண தேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளித்து முன்னேறுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும் குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.

பிள்ளைகளை அவர்களின் போக்கிலேயே விட்டு பிடிப்பது நன்மை தரும்.

### ரிஷபம்

இந்த வாரம் உழைப்பினால் வெற்றி அடைவீர்கள். வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். பயணங்கள் மூலம் அலைச்சல் அதிருப்தி உண்டாகலாம். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பணத் தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாக செயல்படுவது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சனைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகி விடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம். பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும். உறவினர்களிடம் கவனம் தேவை. பெண்களுக்கு மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடும்.

### மிதுனம்

இந்த வாரம் எல்லாவற்றிலும் சாதகமான பலன் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம் பண வரவில் திருப்தி ஆகியவை இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். லாபம் கூடும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல் திறன் அதிகரிக்கும். மேல் அதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கு இடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும்.

திருமணம் தொடர்பான பேச்சுகள் சாதகமாக முடியும்.

### கடகம்

இந்த வாரம் பிரச்சனையை சமாளிக்கும் திறமை அதிகரிக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் ஆர்டர் கிடைப்பதில் தாமதம் போன்றவை ஏற்பட்டாலும், தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம்.

அதிக உழைப்பின் பேரில் வேலைகளை செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்கள், அக்கம் பக்கத்தினரிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது.

பெண்களுக்கு எடுத்த காரியம் தடைபட்டு பின்னர் நல்லபடியாக நடந்து முடியும்..

மனதில் எதைபற்றியாவது சிந்தித்த வண்ணம் இருப்பீர்கள்.

### சிம்மம்

இந்த வாரம் எந்த காரியத்திலும் வேகம் அதிகரிக்கும். தந்தையின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும்.

தான தர்மம் செய்யவும் ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும்.

வியாபார போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. எதிர்பாராத இடமாற்றம் சிலருக்கு உத்தியோக மாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கு இடையே திடீர் மன வருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிப்பதாக இருக்கும்.

உறவினர்களிடம் பக்குவமாக பேசுவது நல்லது. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். .

### கன்னி

இந்த வாரம் வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக் கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை.

உத்தியோகத்தில் சரியாக முடிக்க வேண்டுமே என்ற கவலை உண்டாகும். சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை.

ஆயுதங்களை பயன்படுத்தும்போது கவனம் தேவை. பெண்களுக்கு தேவையற்ற சில காரியங்களை செய்ய வேண்டி இருந்தாலும் அதன் மூலம் நன்மை உண்டாகும்.

மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். விளையாட்டு போட்டிகளில் திறமை வெளிப்படும்.

### துலாம்

இந்த வாரம் மங்கள காரியங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். பண வரத்து சீராக இருக்கும். வேலைப்பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்பட்டு சரியாகும். கவுரவம் பாதிக்கும்படியான சூழ்நிலை வரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது.

புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். இயந்திரங்கள், ஆயுதங்கள், நெருப்பு ஆகியவற்றை கையாளும் தொழிலாளர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் பிரச்சனைகள் அதனால் வாக்குவாம் போன்றவை உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்று ஏற்படலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். பெண்களுக்கு வீண் அலைச்சல், வேலைப் பளு ஆகியவை அதிகரிக்கும்.

### விருச்சிகம்

இந்த வாரம் கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். தடைபட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஆர்டர் வரும். பண வரத்து திருப்தி தரும்.

கடன் பிரச்சனை கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். மேல் அதிகாரிகள் ஒத்துழைப்பும் இருக்கும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவார்கள். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்க காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். பெண்களுக்கு எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும். மாணவர்களுக்கு சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டு படிப்பது நல்லது. வகுப்பில் கவனத்தை சிதற விடாமல் பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்..

### தனுசு

இந்த வாரம் மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சனை வராமல் தடுக்கலாம். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். திடீர் பண தேவை உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது.

எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதப்படலாம். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தருவதாக இருக்கலாம். கணவன், மனைவிக்கு இடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும்.

பிள்ளைகளிடம் அனுசரித்து செல்வதும் அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. பெண்களுக்கு கோபத்தை கட்டுப்படுத்துவது நன்மை தரும். மாணவர்களுக்கு சக மாணவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும்.

### மகரம்

இந்த வாரம் சுணங்கிக் கிடந்த காரியங்கள் மீண்டும் வேகம் பெறும். அடுத்தவர்களது செய்கை உங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தலாம். எனவே நிதானமாக இருப்பது நல்லது. சொந்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம். சின்ன விஷயங்களால் மன நிறைவை அடைவீர்கள். எதிர்பாலினரிடம் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும்.

மருந்து, ரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். எளிதில் மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான கவலைகள் ஏற்படும்.

குடும்ப செலவை சமாளிக்க பண வரத்து இருக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் ஆன்மீக எண்ணங்கள் ஏற்படும். வாழ்க்கை துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும்.

### கும்பம்

இந்த வாரம் வாழ்வில் மாற்றம் வரும். நீண்ட நாட்களாக தடைபட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அதிர்ஷ்டம் உண்டாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தாலும் கொள்கைக்காக பாடுபடுவீர்கள். அதிகம் பேசுவதை தவிர்ப்பது நல்லது. அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப்பற்றி ஆலோசனை செய்வது நல்லது.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். பண வரத்து அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவார்கள். சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளால் நன்மையும் உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேற்றுமை குறைந்து நெருக்கம் அதிகரிக்கும். வாழ்க்கை துணையின் ஆதரவு இருக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். பெண்களுக்கு அதிகம் பேசுவதை தவிர்த்து செயலில் வேகம் காட்டுவது நல்லது.

### மீனம்

இந்த வாரம் அனுபவத்தையும், திறமையையும் கொண்டு காரியங்களை திறம்பட செய்வீர்கள். எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். முதலீடுகளில் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும். வீண் வாக்கு வாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமாக செய்வார்கள்.

தேவையான பண உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிக உழைப்பும் அதற்கேற்ற பலனும் உண்டாகும். எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது நன்மை தரும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். அக்கம் பக்கத்தினரிடமும் உறவினர்கள், நண்பர்களிடம் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். கணவன் மனைவிக்கு இடையே மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு மனதில் தைரியம் உண்டாகும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது.

# இந்திய மாணவர்களுக்கு சாஃப்ட்வேர்கள் இலவசம்..!

**புதுடெல்லி, பிப்.22:**

சர்வதேச அளவில் செயற்கை நுண்ணறிவு எனும் ஏஐ தொழில்நுட்பம், பல்வேறு துறைகளில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இனிவரும் காலங்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கற்றுக் கொண்டால் மட்டுமே, பணியாளர்கள் தங்கள் வேலைவாய்ப்பை உறுதி செய்து கொள்ள முடியும் என முன்னணி தொழில்நுட்ப வல்லுனர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.




இந்நிலையில் ஏஐ உச்சி மாநாடு இந்தியாவில் கடந்த பிப்ரவரி 16ஆம் தேதி தொடங்கி நேற்றுடன் (பிப்ரவரி 20) முடிவடைந்தது. இந்த மாநாட்டில் உலக நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் குறித்து விளக்கப்பட்ட நிலையில், செயற்கை நுண்ணறிவை மேம்படுத்த முதலீடுகள் குறித்த அறிவிப்புகளும் வெளியாகின.

இந்நிலையில் இந்திய மாணவர்களுக்கு டிசைனிங் சாஃப்ட்வேர்களை இலவசமாக வழங்கும் அறிவிப்பை ஏஐ உச்சி மாநாட்டில் ADOBE நிறுவனம் அறிவித்தது

டிசைனிங் துறையில் ADOBE நிறுவனத்தின் அனைத்து சாஃப்ட்வேர்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த சாப்ட்வேர்களை அணுக குறிப்பிட்ட அளவில் கட்டணம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

இந்நிலையில் இந்திய மாணவர்களுக்கு மட்டும் சிறப்பு சலுகையை வழங்கி உள்ளது ADOBE நிறுவனம். அதாவது இனி 20-க்கும் மேற்பட்ட ADOBE சாஃப்ட்வேர்களை இந்திய மாணவர்களால் இலவசமாக பயன்படுத்த முடியும்.

இதுகுறித்து ADOBE நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில், "செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ந்து வரும் இன்றைய காலகட்டத்தில், மாணவர்களுக்கு உதவ ADOBE நிறுவனம் முன்வந்துள்ளது.

இதன்படி InDesign, Photoshop, Illustrator, Acrobat, Firefly AI மற்றும் Premiere Pro உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட ADOBE சாஃப்ட்வேர்களை அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனத்தில் பயிலும் இந்திய மாணவர்கள் இலவசமாக பயன்படுத்தலாம். இந்திய அரசுடன் இணைந்து இதற்கான ஏற்பாடுகள் வெகு விரைவில் மேற்கொள்ளப்படும்.

மேலும், NASSCOM உடன் இணைந்து AI First Learning சான்றிதழ் படிப்புகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்" என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது

டிசைனிங் துறையில் ADOBE சாஃப்ட் வேர்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதால், மாணவர்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் இந்திய மாணவர்கள் தங்களது படைப்பாற்றல் திறனை மேம்படுத்திக் கொள்ள முடியும். அதோடு வேலைவாய்ப்பை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல இது உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ADOBE சாஃப்ட்வேர்களை மாணவர்கள் முன்கூட்டியே கற்றுக்கொள்வதன் மூலம், வேலைவாய்ப்பில் ஒரு புதிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## க்ரைம் கார்னர்

### கோவையில் இளம்பெண் எரித்துக் கொல்லப்பட்ட வழக்கில் தனியார் பள்ளி பேருந்து ஓட்டுநர் கைது

**கோவை, பிப்.22:**

கோவைதுடியலூர் அருகேயுள்ள வட்டமலைப்பாளையம் பகுதியில் தனியாருக்கு சொந்தமான பொறியியல் கல்லூரி உள்ளது. இந்தக் கல்லூரிக்கு பின்புறம் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில், எரிந்த நிலையில் பெண் சடலம் கிடப்பதாக கடந்த 18-ம் தேதி இரவு துடியலூர் போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

காவல் ஆய்வாளர் தவசியப்பன் தலைமையிலான போலீஸார் அங்கு சென்று பார்த்தபோது, இளம் பெண் எரித்துக் கொல்லப்பட்டது தெரியவந்தது. பெண்ணின் உடலை மீட்ட போலீஸார், பிரேதப்பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், வழக்கில் தொடர்புடைய நபர்களைப் பிடிக்க மாநகர காவல் ஆணையர் என்.கண்ணன் உத்தரவின் பேரில் 2 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. முதல்கட்ட விசாரணையில், எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட பெண், துடியலூர் அருகேயுள்ள செங்காளி பாளையம் பகுதியைச் சேர்ந்த அனிதா (32) என்பதும், திருமணமான இவருக்கு 5 வயதில் பெண் குழந்தை உள்ளதும், கருத்து வேறுபாடு காரணமாக கணவரைப் பிரிந்து வசித்து வருவதும் தெரியவந்தது. தொடர் விசாரணையில், துடியலூர் அருகே செங்காளி பாளையம் பகுதியில் வசித்து வரும் தமிழ்செல்வன்(29) என் பவருக்கு இவ்வழக்கில் தொடர்பு இருப்பதைப் போலீஸார் கண்டறிந்தனர். அவரைப் பிடித்து போலீஸார் விசாரித்தபோது, அனிதாவை தாக்கி, பெட்ரோல் ஊற்றி எரித்ததை தமிழ்செல்வன் ஒப்புக் கொண்டார். இதையடுத்து போலீஸார் தமிழ்செல்வனை நேற்று கைது செய்தனர்

### சென்னையில் பைக் திருடி திருவண்ணாமலையில் விற்பனை செய்த 3 பேர் கைது

**சென்னை, பிப்.22:**

கொளத்தூர், அஞ்சுகம் நகர் 3-வது குறுக்கு தெருவில் வசித்து வருபவர் ஜெயபாரதி (34). தனியார் பள்ளி ஒன்றில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார். கடந்த 6-ம் தேதி இரவு, வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இவரது பைக் திருடுபோனது. இது தொடர்பாக ஜெயபாரதி கொளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியைச் சேர்ந்த ஜெகதீஷ் (19) என்பவர் 2 சிறுவர்களுடன் சேர்ந்து ஆசிரியர் ஜெயபாரதியின் பைக்கை திருடியது தெரியவந்தது. இதையடுத்து கடந்த 18-ம் தேதி ஜெகதீஷ் கைது செய்யப்பட்ட நிலையில், அவரது கூட்டாளிகளான 2 சிறுவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 6 பைக்குகள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையில் கைது செய்யப்பட்ட 3 பேரும் சென்னை மட்டும் அல்லாமல் பல்வேறு இடங்களில் பைக்குகளை திருடி அதை திருவண்ணாமலை பகுதியில் விற்பனை செய்து வந்தது தெரிந்தது. இதையடுத்து, ஜெகதீஷ் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், சிறுவர்கள் கூர்நோக்கு இல்லத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### இளம் பெண்ணிடம் போட்டோ ஷூட் எடுப்பதாக நகை திருடிய பிசியோ தெரபிஸ்ட் கைது

**சென்னை, பிப்.22:**

திருவண்ணாமலை மாவட்டம், கருடாழ்வார் நகரில் குடும்பத்துடன் வசிப்பவர் லேப் டெக்னீஷியன் புனிதாஸ்ரீ (22). சினிமாவில் நடிக்கும் ஆசையில் இருந்தார். இவரது வீட்டின் கீழ் தளத்தில் கோயம்புத்தூரைச் சேர்ந்த பிசியோ தெரபிஸ்ட் ஜெகதீஸ் (52) மனைவி, மகளுடன் வாடகைக்கு வசித்து வருகிறார். போட்டோ ஷூட் எடுத்து அந்த போட்டோ மற்றும் வீடியோக்களை காண்பித்து சினிமா அல்லது டிவி தொடர்களில் நடிக்க வாய்ப்பு கேட்கலாம் என புனிதாஸ்ரீயிடம் ஜெகதீஸ் தெரிவித்துள்ளார். இதையடுத்து, ஜெகதீஸ் அவரை சென்னைக்கு காரில் அழைத்துச் சென்றார். அங்கு புனிதாஸ்ரீயை ஆடைகளை வாங்க வைத்து, அந்த ஆடைகளை அவர் அணிந்து பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், அவர் ஏற்கெனவே கைப்பையில் வைத்திருந்த 16 பவுன் தங்க நகைகளை நைசாக திருடிக் கொண்டு ஜெகதீஸ் தப்பினார். திருட்டுக்கு உதவியதாக இருந்த 10-ம் வகுப்பு படித்துவரும் 16 வயது சிறுமி ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

## விளையாட்டு செய்திகள்

### பெண்கள் டி20: ஆஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரை கைப்பற்றியது இந்தியா

**அடிலெய்டு, பிப்.22:**

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் பங்கேற்றது. இதில் தொடக்க ஆட்டத்தில் இந்தியா 21 ரன் வித்தியாசத்திலும், 2-வது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 19 ரன் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது.

இந்த நிலையில் இந்தியா-ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான 3-வது மற்றும் கடைசி டி20 போட்டி அடிலெய்டில் இன்று நடந்தது. இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ஹாமன்பிரீத் கவுர் பேட்டிங்கை தேர்வு செய்தார். அதன்படி இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது.

இந்திய அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 176 ரன்கள் எடுத்தது. இந்திய அணி தரப்பில் மந்தனா அதிகபட்சமாக 82 ரன்களும், ஜெமிமா 59 ரன்களும் எடுத்தனர். ஆஸ்திரேலிய தரப்பில் அனபெல் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதையடுத்து 177 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி பேட்ஸ்மேன்கள் தொடக்கம் முதலே தடுமாடினர். அஷ்லீ அதிகபட்சமாக 57 ரன்கள் எடுத்தார். மற்ற பேட்ஸ்மேன்கள் பெரிய அளவில் ரன் குவிக்கவில்லை. இதனால் ஆஸ்திரேலிய அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 159 ரன்களே எடுக்க முடிந்தது.

இதன் மூலம் 17 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. அத்துடன், 3 போட்டிகள் கொண்ட தொடரை 1-2 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது. இந்திய அணி தரப்பில் ஸ்ரீ சரணி அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

### சூப்பர் 8 சுற்று: இந்தியா - தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதல்

**அகமதாபாத், பிப்.22:**

இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வரும் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் சூப்பர் 8 சுற்று இன்று தொடங்குகிறது. இரவு 7 மணிக்கு கொழும்பில் நடக்கும் முதல் ஆட்டத்தில் நியூசிலாந்து-பாகிஸ்தான் (குரூப் 2) அணிகள் மோதுகின்றன. சூப்பர் 8 சுற்றில் சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய அணி குரூப் 1 பிரிவில் இடம் பெற்றுள்ளது. ஜிம்பாப்வே, வெஸ்ட் இண்டீஸ், தென் ஆப்பிரிக்கா ஆகிய அணிகளும் அந்த பிரிவில் உள்ளன. இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் மார்க்கிராம் தலைமையிலான தென் ஆப்பிரிக்காவை நாளை (22-ந் தேதி) சந்திக்கிறது. அகமதாபாத்தில் இரவு 7 மணிக்கு இந்த போட்டி நடைபெறுகிறது. இந்த தொடரில் தோல்வியை சந்திக்காமல் சூப்பர் 8 சுற்றுக்கு இந்திய அணி தகுதி பெற்றுள்ளது. இந்திய அணி கடந்த டிசம்பர் மாதம் சொந்த மண்ணில் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 20 ஓவர் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. கடைசியாக இதே மைதானத்தில் (அகமதாபாத் ) நடைபெற்ற ஆட்டத்தில் 30 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் மிகுந்த நம்பிக்கையுடன் தென் ஆப்பிரிக்காவை இந்திய அணி எதிர்கொள்ளும்.

## உடுப்பி கடற்படை தளம் குறித்த தகவல்களை பாகிஸ்தானுக்கு அனுப்பிய இளைஞர் கைது

**பெங்களூரு, பிப்.22:**

கேரள மாநிலத்தை சேர்ந்த கொச்சின் ஷிப் யார்டு கப்பல் கட்டும் நிறுவனத்தின் கிளை கர்நாடகாவில் உள்ள உடுப்பி மல்பே கடற்கரையில் செயல்பட்டு வருகிறது. இங்கு நாட்டின் கடற்படைக்கு சொந்தமான கப்பல் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த கப்பல் கட்டும் தளம் குறித்த தகவல்கள், புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப்புக்கு அனுப்பப்படுவதாக கடந்த ஆண்டு நவம்பரில் தகவல் வெளியானது. இதுகுறித்து கொச்சின் ஷிப் யார்டு நிறுவனம் அளித்த புகாரின்பேரில் உடுப்பி போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். அதில் கொச்சின் ஷிப் யார்டு நிறுவனத்தில் ஒப்பந்த பணியாளராக பணியாற்றும் சிலர் உளவாளிகளாக செயல்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவர்களின் செல்போன் எண்கள், சமூக வலைதளங்களை போலீஸார் ஆய்வு செய்தனர்.



அதில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கடந்த நவம்பரில் உத்தர பிரதேசத்தை சேர்ந்த ரோஹித் (23), சான்ட்ரி (26) ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில், "குஜராத்தை சேர்ந்த ஹிரேந்திர குமார் அவர்களுக்கு சிம் கார்டு வாங்கி போலி வாட்ஸ் அப் கணக்குகளை உருவாக்கி கொடுத்தது தெரியவந்தது. இதையடுத்து ஹிரேந்திர குமாரை கைது செய்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணைக்குப் பின் மேற்கு வங்க மாநிலத்தை சேர்ந்த அலிப் இஸ்லாம் (21) என்ற இளைஞரை கேரளாவில் உள்ள இடுக்கியில் நேற்று முன் தினம் கைது செய்தனர்.

அவரை உடுப்பிக்கு அழைத்து வந்து நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

அலிப் இஸ்லாம் மேற்கு வங்க முகவரியில் அடையாள அட்டை வைத்துள்ள போதும், அவர் வங்கதேசத்தை சேர்ந்தவராக இருக்கலாம் என போலீஸார் சந்தேகிக்கின்றனர்.

எனவே அவரை 7 நாட்கள் காவலில் எடுத்து விசாரித்து வருகின்றனர்.

## அறுவை சிகிச்சையில் பெண்ணின் வயிற்றில் தமனி இடுக்கி வைத்து தைத்த அரசு மருத்துவர்கள்

**திருவனந்தபுரம், பிப்.22:**

கேரள மாநிலத்தில் பெண்ணின் வைற்றில் அறுவைச் சிகிச்சையில் பயன்படுத்தப்படும் தமனி இடுக்கியை (கத்தரி போன்ற கருவி) வைத்து தைக்கப்பட்டிருந்தது, சிகிச்சை முடிந்து 5 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் வெள்ளிக்கிழமை அனுமதிக்கப்பட்ட அந்தப் பெண்ணுக்கு மருத்துவர்கள் விரைவில் அறுவைச் சிகிச்சை மூலம் அந்த கருவியை அகற்ற உள்ளனர். கொச்சியைச் சேர்ந்த உஷா ஜோசப் என்ற அந்தப் பெண்ணின் மகன் ஷிபின் இதுகுறித்து செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கருப்பை நார்திசுக் கட்டிகளை அகற்றுவதற்காக வந்தனத்தில் உள்ள ஆலப்புழை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 2021-ஆம் ஆண்டு மே மாதம் அனுமதிக்கப்பட்ட எனது தாய்க்கு மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கட்டிகளை அகற்றினர்.

சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய அவருக்கு, அவ்வப்போது அடிவயற்றில் வலி ஏற்பட்டது. அதுதொடர்பாக, அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட மருத்துவமனை மருத்துவர்களை பல முறை அணுகியபோதும், வலிக்கான காரணத்தை அவர்களால் அடையாளம் காண முடியவில்லை.

எனவே, அண்மையில் வேறொரு மருத்துவரை அணுகியபோது, வலிக்கு சிறுநீரக கல் பாதிப்பு காரணமாக இருக்கலாம். எனவே, எக்ஸ்ரே எடுத்து வருமாறு பரிந்துரைத்தார். அதன்படி, எக்ஸ்ரே எடுத்தபோது, தாயின் வயிற்றில் அறுவைச் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் தமனி இடுக்கி (ஆர்டெரி ஃபோர்செப்ஸ்) இருப்பது தெரியவந்தது.

இதுகுறித்து புகார் அளித்தபோது, உடனடியாக அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு தமனி இடுக்கியை அகற்றிவிடுவதாக ஆலப்புழை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆனால், மீண்டும் அரசு மருத்துவமனைக்குச் செல்ல விரும்பாததால், கொச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையைத் தேர்வு செய்தோம். தமனி இடுக்கியை அகற்ற அவருக்கு விரைவில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளது. அரசு மருத்துவர்களின் இந்த அலட்சியம் குறித்து ஆலப்புழை காவல்நிலையத்தில் புகார் பதிவு செய்யவும் தீர்மானித்துள்ளோம் என்றார்.

விசாரணைக்கு குழு - அமைச்சர்: 'இந்தச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, காரணமான மருத்துவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்று மாநில சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தெரிவித்தார்.

## பிரதமர் மோடியுடன் இலங்கை அதிபர் அனுர குமார திசாநாயக்க சந்திப்பு

**புதுடெல்லி, பிப்.22:**

டெல்லியில் நடைபெறும் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டின் இடையே பிரதமர் நரேந்திர மோடியை, இலங்கை அதிபர் அனுர குமார திசாநாயக்க சந்தித்துப் பேசினார்.



இந்த சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள அனுர குமார திசாநாயக்க, "புதுடெல்லியில் இன்று (பிப்.20) மதியம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தேன். 2026 ஆம் ஆண்டுக்கான ஏஐ தாக்க உச்சி மாநாட்டிற்கு அழைக்கப்பட்டதற்கு நான் அவருக்கு நன்றி தெரிவித்தேன்.

நமது வரலாற்று உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து நாங்கள் விரிவான விவாதங்களை நடத்தினோம். சமீபத்திய டித்வா புயலின்போது இந்தியா அளித்த மிகப் பெரிய ஆதரவுக்கு எனது நன்றியைத் தெரிவித்தேன்" என குறிப்பிட்டுள்ளார்.

அனுர குமார திசாநாயக்க உடனான சந்திப்பு குறித்து தனது சமூக ஊடக பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, "மதிப்புமிக்க அண்டை வீட்டாருடன் நட்பை வலுப்படுத்துதல்! டெல்லியில் அதிபர் அனுர குமார திசாநாயக்கவை சந்தித்தது மகிழ்ச்சியாக இருந்தது. இந்தியா-இலங்கை இடையேயான உறவில் சமீபத்திய முன்னேற்றம் குறித்து நாங்கள் மதிப்பாய்வு செய்தோம். எரிசக்தி, இணைப்பு, உள்கட்டமைப்பு, சுகாதாரம், திறன் மேம்பாடு, கலாச்சாரம், நீலப் பொருளாதாரம் போன்ற துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்தும் நாங்கள் விவாதித்தோம்" என தெரிவித்துள்ளார்.

## வணிகச் செய்திகள்

### பயனர்கள் நீண்ட நாள் எதிர்பார்த்த வசதி: இன்ப அதிர்ச்சி கொடுத்த வாட்ஸ் அப்- என்ன தெரியுமா?

**புதுடெல்லி, பிப்.22:**

தற்போது உலக அளவில் அதிகம் பேர் பயன்படுத்தும் சமூக வலைத்தளமாக இருக்கக்கூடிய வாட்ஸ் அப், பயனர்களை கவர புதுப் புதுப் அப்டேட்களை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் வாட்ஸ் அப் பயனர்கள் நீண்ட நாள் எதிர்பார்த்த ஒரு அப்டேட் வெளியாகியுள்ளது. இதன்படி, வாட்ஸ் அப் குழுக்களில் புதிதாக சேருபவர்கள், தாங்கள் இணைவதற்கு முன்பு பகிரப்பட்ட முந்தைய செய்திகளை பார்க்கும் புதிய வசதியை வாட்ஸ் அப் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அம்சத்தின் மூலம் குழுவில் சேரும் புதிய நபர் கடந்த 24 மணி நேரத்தில் பகிரப்பட்ட 25 முதல் 100 செய்திகள் வரை பார்க்க முடியும்.

புதிய உறுப்பினர்களை சேர்க்கும் போது அட்மின்கள் அல்லது உறுப்பினர்கள் இந்த ஆப்ஷனைத் தேர்ந்தெடுக்கலாம். பகிரப்படும் பழைய மெசேஜ்களும் மற்ற மெசேஜ்களைப் போலவே எண்ட்-டு-எண்ட் என்க்ரிப்ட் செய்யப்பட்ட பாதுகாப்பான அம்சமாகும். செய்திகள் பகிரப்படும் போது ஏற்கனவே குரூப்பில் இருக்கும் அனைவரும் இதைப் பற்றிய அறிவிப்பை பெறுவார்கள். செய்திகள் பகிரப்படும் போது யாருடைய பெயரில் பகிரப்பட்டது மற்றும் நேரம் போன்ற வெளிப்படைத்தன்மை நிறைந்த தகவல்கள் சாதாரண செய்திகளிலிருந்து தனித்து தெரியும். செட்டிங்ஸில் இதற்கான ஆப்ஷன் தனியாக இருக்கும். வாட்ஸ் அப்பின் இந்த புதிய அப்டேட் பயனர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.

# அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தத்தை மத்திய அரசு நிறுத்தி வைக்க காங்கிரஸ் வலியுறுத்தல்

புதுடெல்லி, பிப்.22:

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் பல்வேறு நாடுகளுக்கு விதித்த வரி விதிப்பு சட்டவிரோதமானது என்று அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தத்தை மத்திய அரசு நிறுத்திவைக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ், "வரி விதிப்பு தொடர்பாக அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், அந்நாட்டுடனான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை இந்திய அரசு நிறுத்திவைக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மேலும், (இந்திய-அமெரிக்க) கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ள அம்சங்களைப் பயன்படுத்தி, விவசாயப் பொருட்களை இந்தியாவுக்கு இறக்குமதி செய்வதில் அமரிக்காவுக்கு உள்ள சுதந்திரத்தை ரத்து செய்ய வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "அமெரிக்க உச்ச நீதிமன்றம் அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் வரிக் கொள்கையை நேற்று ரத்து செய்தது. அதன் பிறகு பேசிய அதிபர் ட்ரம்ப், 'பிரதமர் மோடி எனது மிகவும் நல்ல நண்பர். இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டபடி தொடரும். இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருட்கள் மீதான வரிகளை அமெரிக்கா அதிகரிக்கும் என்று கடந்த மே 10, 2025 அன்று அச்சுறுத்தியதன் காரணமாக, அவர் (பிரதமர் மோடி) தனிப்பட்ட முறையில் ஆபரேஷன் சிந்தூரை நிறுத்தினார்.

பிரதமர் மோடி மீதான நட்பு மற்றும் மரியாதை காரணமாகவும், அவரது வேண்டுகோளின் பேரிலும் உடனடியாக அமலுக்கு வரும் வகையில், அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான வர்த்தக ஒப்பந்தத்தை நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளோம்...' என்று தெரிவித்துள்ளார்.

இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதாக அதிபர் ட்ரம்ப் பிப்ரவரி 2, 2026 அன்று அறிவித்தார். மோடியின் வேண்டுகோளுக்காகவே உடனடியாக அமலுக்கு வரும் வகையில் ஒப்பந்தத்தை ஏற்றதாக ட்ரம்ப் கூறியுள்ளார்.

எதற்காக ட்ரம்ப்புக்கு மோடி வேண்டுகோள் விடுக்க வேண்டும்? இந்த விவகாரத்தில் பிரதமர் மோடியை கட்டாயப்படுத்தியது எது? அன்று மதியம் மக்களவையில் என்ன நடந்தது? வெள்ளை மாளிகையில் தனது "நல்ல நண்பரை" தொடர்பு கொண்டு பிரதமர் மோடி ஏன் கவனத்தை சிதறடிக்கச் செய்தார்?

பிரதமர் மோடி தனது பலவீனமான பிம்பத்தைக் காப்பாற்றிக் கொள்ள இவ்வளவு ஆர்வம் காட்டாமல், இன்னும் 18 நாட்கள் காத்திருந்திருந்தால், இந்திய விவசாயிகள் இந்த துன்பத்திலிருந்தும் நெருக்கடியிலிருந்தும் தப்பித்திருக்க முடியும்.

மேலும் இந்தியாவின் இறையாண்மையும் பாதுகாக்கப்பட்டிருக்கும். பிரதமரின் பொறுமையின்மை மற்றும் சரணடைதல் காரணமாக இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் நாட்டுக்கு ஒரு கடினமான சோதனையாக மாறியுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

## ஏஐ வளர்ச்சி மற்றும் முக்கிய தாதுக்களை பெற பாக்ஸ் சிலிக்கா கூட்டணியில் சேர இந்தியா ஒப்பந்தம்

புதுடெல்லி, பிப்.22:

செயற்கை நுண்ணறிவு வளர்ச்சிக்காகவும் முக்கிய தாதுக்களை பகிர்ந்து கொள்ளவும் உருவாக்கப்பட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா கூட்டணியில் இணைய இந்தியா ஒப்பந்தம் செய்தது.

பாக்ஸ் சிலிக்கா என்பது செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி மற்றும் செமிகண்டக்டர்களுக்கான உலகளாவிய விநியோகத்தை பாதுகாப்பதற்காக அமெரிக்காவால் தொடங்கப்பட்ட கூட்டணியாகும். இதில் ஆஸ்திரேலியா, கிரீஸ், இஸ்ரேல், ஜப்பான், கத்தார், தென் கொரியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இங்கிலாந்து ஆகியவை உறுப்பு நாடுகளாக உள்ளன. டெல்லியில் நடைபெறும் ஏஐ உச்சி மாநாட்டில் அமெரிக்கா தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா அமைப்புடன் இந்தியா நேற்று ஒப்பந்தம் செய்தது. இதன் மூலம் அரிய வகை தாதுக்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு விநியோகத்துக்கு சீனாவை சார்ந்திருப்பது குறையும். அடுத்த தலைமுறை தொழில்துறைகளுக்குத் தேவையான முக்கிய ஆதாரங்களைப் பாதுகாப்பான முறையில் பெறுவது, தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ள நிலையில், அமெரிக்கா தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா அமைப்புடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் குறித்து மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது: இந்தியா இப்போது பாக்ஸ் சிலிக்காவின் ஓர் அங்கமாக மாறியுள்ளது. இது இந்தியாவின் மின்னணு மற்றும் செமிகண்டக்டர் தொழில்துறைக்கு மிகவும் பயனளிக்கும். இந்தியாவில் ஏற்கனவே பத்து செமிகண்டக்டர் ஆலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மிக விரைவில், முதல் செமிகண்டக்டர் ஆலை வணிக ரீதியான உற்பத்தியைத் தொடங்கவுள்ளது என அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

## ஏஐ மாநாட்டு பிரமுகர்களுக்கு பிரதமர் சிறப்பு விருந்து

புதுடெல்லி, பிப்.22:

ஏஐ உச்சி மாநாடு டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. இந்த மாநாடு இன்றுடன் முடிவடைகிறது. மாநாட்டில் பிரான்ஸ் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர். இந்த மாநாட்டின் 4-ம் நாளான நேற்று முன்தினம் ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியா குத்தேரஸ், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் மற்றும் கூகுள் நிறுவனத்தின் சுந்தர் கே.பிச்சை, ஓபன்ஏஐ நிறுவனத்தின் சாம் ஆல்ட்மேன் உள்ளிட்ட சிஇஓக்கள் பங்கேற்றனர். இவர்களுக்கு பாரத் மண்டபத்தில் மதியம் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்து அளித்தார்.

ஒவ்வாமை ஏற்படாத வகையில் பால், கோதுமை அல்லது உலர் கொட்டைகள் இல்லாமல் இவை தயாரிக்கப்பட்டிருந்தன. சர்வதேச பிரதிநிதிகளுக்காக மிகுந்த கவனமுடன் மெனு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அதேவேளையில் நம் நாட்டின் வளமான சமையல் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதாக இது இருந்தது. தினை, பருப்பு, தாமரை தண்டு, பாஸ்மதி அரிசி, குங்குமப்பூ போன்ற பொருட்கள் பயன்படுத்தப்பட்டு முற்றிலும் சைவ உணவு பரிமாறப்பட்டது. ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் தரப்பட்ட அதே வேளையில் இந்தியாவின் பிராந்திய சுவைகளை விருந்தினர் அனுபவிக்கும் வகையில் இவை தயாரிக்கப்பட்டிருந்தன. உ.பி. மற்றும் பிஹாரில் பிரபலமான நிமோனா கேபப், காஷ்மீரின் நட்ரு குர்குரி, ஹைதராபாத்தின் ஜாஃப்ரானி சப்ஸ் புலாவ் உள்ளிட்ட உணவுகள் மற்றும் பல வகை சாலட்கள் மற்றும் இனிப்புகள் பரிமாறப்பட்டன.

## 'டெல்லி செங்கோட்டை அருகே பயங்கரவாத தாக்குதல் நடத்த சதி' - உளவுத் துறை எச்சரிக்கை

புதுடெல்லி, பிப்.22:



தலைநகர் டெல்லியில் செங்கோட்டை அருகே பயங்கரவாத தாக்குதல் நடத்தப்படலாம் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. சாந்தினி சௌக் பகுதியில் உள்ள ஒரு கோயிலை பயங்கரவாதிகள் குறிவைக்கலாம் எனவும் உளவுத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கோட்டையைசுற்றியுள்ள இடங்கள் மற்றும் சாந்தினி சௌக்கின் சில பகுதிகள் உட்பட முக்கிய கோயில்கள் பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர்-இ-தொய்பா (LeT) கண்காணிப்பில் இருப்பதாக புலனாய்வு அமைப்புகள் தெரிவிக்கின்றன. சாந்தினி சௌக்கில் உள்ள ஒரு கோயிலை இலக்காகக் கொண்டு, அந்த பயங்கரவாத அமைப்பு வெடிகுண்டு தாக்குதலை திட்டமிட்டுள்ளதாகவும் உளவுத் துறை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு மசூதியில் பிப்ரவரி 6-ம் தேதி நடந்த குண்டுவெடிப்புக்குப் பழிவாங்க லஷ்கர்-இ-தொய்பா முயற்சிப்பதாகவும், இந்தியாவில் ஒரு பெரிய தாக்குதலை நடத்த திட்டமிட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், இந்தியா முழுவதும் உள்ள முக்கிய கோயில்கள் லஷ்கர்-இ-தொய்பாவின் கண்காணிப்பில் உள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் 10 அன்று டெல்லியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க செங்கோட்டைக்கு அருகில் நடந்த ஒரு பயங்கரமான கார் குண்டுவெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டனர். செங்கோட்டை மெட்ரோ நிலையத்தின் கேட் எண் 1-க்கு அருகில் வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்ட ஒரு கார் வெடித்ததில் அருகிலுள்ள பல வாகனங்கள் வெடித்து சிதறின.

## ஏப்ரல் 1 முதல் டோல்கேட்டில் இனி 'கேஷ்' செல்லாது! மீறினால் 1.25 மடங்கு அபராதம்!

புதுடெல்லி, பிப்.22:




நாடு முழுவதும் உள்ள அனைத்து தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகளிலும் வரும் ஏப்ரல் 1 முதல் ரொக்கப் பரிவர்த்தனைகளை முற்றிலுமாக நிறுத்துவது குறித்து சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ஆலோசித்து வருவதாக பத்திரிகை தகவல் பணியகம் (PIB) தெரிவித்துள்ளது. இது நெடுஞ்சாலைகளை முழுக்கவும் மின்னிலக்கமயமாக்கும் திட்டத்தின் முக்கியப் படியாகப் பார்க்கப்படுகிறது. மேலும் வாகன ஓட்டிகளின் நேரத்தையும் எரிபொருளையும் சேமிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதாவது ஏப்ரல் 1 முதல் அனைத்து சுங்கச்சாவடி கட்டணங்களும் FASTag மற்றும் UPI போன்ற டிஜிட்டல் முறைகளின் மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த மாற்றத்தால் சுங்கச்சாவடிகளில் வாகன ஓட்டிகள் அதிகநேரம் நீண்ட வரிசைகள் நிற்பது குறையும் என்றும், எரிபொருள் சேமிக்கப்படும் என்பதுடன் பயண நேரமும் மிச்சமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், சுங்கக் கட்டணம் செலுத்துவதற்காக ஓட்டுநர்கள் பணத்தைஎடுத்துக்கொடுக்கவும் மீதிச் சில்லறைக்காகவும் காத்திருக்கத் தேவையிராது.

ரொக்கப் பணம் செலுத்தும் முறையை நிறுத்துவது மல்டி-லேன் ஃப்ரீ ஃப்ளோ (MLFF) முறைக்கு மாறுவதற்கான முதல் படியாகும். இந்தத் தொழில்நுட்பம் மூலம், நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் போன்ற தடைகள் முற்றிலுமாக அகற்றப்படும். ஃபாஸ்டாக் மூலம் சுங்கச்சாவடிகளில் நிற்காமல் சுங்கக் கட்டணத்தைச் செலுத்த முடியும். தற்போது, பெரும்பாலான சுங்க பரிவர்த்தனைகள் வாகனங்களில் பொருத்தப்பட்ட ஃப்ரீக்வென்சி ஐடென்டிஃபிகேஷனில் (RFID) இயக்கப்பட்ட FASTag மூலம் மின்னணு முறையில் செயலாக்கப்படுகின்றன. வாடிக்கையாளர் FASTag உடன் இணைக்கப்பட்ட கணக்கிலிருந்து நேரடியாக சுங்கக் கட்டணங்களைச் செலுத்த உதவுகிறது. FASTag இந்தியாவில் உள்ள அனைத்து NH சுங்கக் கட்டணச் சாவடிகள் மற்றும் 100 SH டோல் சாவடிகள் உட்பட 750 க்கும் மேற்பட்ட சுங்கக் சாவடிகளில் செயல்படுகிறது.

இந்நிலையில் வரும் ஏப்ரல் 1-ம் தேதி முதல் FASTag இல்லாத வாகனங்களுக்குச் சுங்கச்சாவடிகளில் அனுமதி இல்லை, பணம் ரொக்கமாக கொடுக்க முடியாது. ஒன்று டேக் பயன்படுத்த வேண்டும் அல்லது 1.25 மடங்கு அபராதத்துடன் UPI மூலமாக செலுத்த வேண்டும் என்ற புதிய விதிமுறைகள் அமலுக்கு வரும் என்று கூறப்படுகிறது.

## ஆர்எஸ்எஸ் தொடர்ந்த அவதூறு வழக்கு: ராகுல் காந்திக்கு பிவாண்டி நீதிமன்றம் ஜாமீன்

பிவாண்டி, பிப்.22:



மகாத்மா காந்தி கொலையில் ஆர்எஸ்எஸ்-க்கு தொடர்பு இருப்பதாக கடந்த 2014-ம் ஆண்டு ராகுல் காந்தி கூறியதற்கு எதிராக அப்போது பிவாண்டியின் ஆர்எஸ்எஸ் அலுவலகப் பொறுப்பாளராக இருந்த ராஜேஷ் குந்தே என்பவர் அவதூறு வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில், பிவாண்டி நீதிமன்றம் ராகுல் காந்திக்கு ஜாமீன் வழங்கியது.

மகாராஷ்டிராவைச் சேர்ந்த காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான சிவராஜ் பாட்டீல், ராகுல் காந்திக்கு ஜாமீன் அளிக்க உத்தரவாத கடிதம் கொடுத்திருந்தார். அவர் காலமான நிலையில், வேறு ஒருவர் உத்தரவாத கடிதம் கொடுக்க வேண்டும் என்ற நடைமுறை காரணமாக, ராகுல் காந்தி நீதிமன்றத்தில் ஆஜரானார்.

ராகுல் காந்தியின் வருகையை ஒட்டி பிவாண்டியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. நீதிமன்றத்தை ஒட்டிய கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. நீதிமன்றத்துக்கு வந்த ராகுல் காந்தி, மீண்டும் ஜாமீன் பெற்று திரும்பிச் சென்றார்.

பின்னர் இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி சார்பில் ஆஜரான வழக்கறிஞர், "இது ஒரு தனிப்பட்ட அவதூறு புகார். முந்தைய ஜாமீன்தாரரான சிவராஜ் பாட்டீல் காலமானதை அடுத்து, தற்போது மகாராஷ்டிர பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஹர்ஷ்வர்தன் சப்கால் நீதிமன்றத்தில் இன்று உத்தரவாத கடிதத்தை அளித்தார். நீதிமன்றம் அதை ஏற்று ராகுல் காந்திக்கு ஜாமீன் வழங்கியது.

இந்த வழக்கு விரைவாக நடைபெற்று வருகிறது. குற்றச்சாட்டுக்கு உள்ளான ராகுல் காந்தி நீதிமன்றத்தின் மீது முழு நம்பிக்கை வைத்து ஒத்துழைப்பு அளித்து வருகிறார். இந்த வழக்கை எதிர்கொள்ள தயாராக இருப்பதாகவும், நீதிமன்றத்தில் உண்மையை முன்வைக்கப் போவதாகவும் ராகுல் காந்தி ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். மன்னிப்பு கேட்பது என்ற கேள்விக்கே இடமில்லை" என தெரிவித்தார்.

மனுதாரரான ராஜேஷ் குந்தே கூறுகையில், "மன்னிப்பு கேட்பது குறித்து எந்த பேச்சும் நடைபெறவில்லை. ஜாமீன் நடைமுறை முடிக்கப்பட்டு அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. மகாத்மா காந்தியின் படுகொலையில் ஆர்எஸ்எஸ் அமைக்கு எந்த தொடர்பும் இல்லை என்று எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. இது பலமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கில் நாங்கள் வெற்றி பெறுவோம் என்ற நம்பிகை உள்ளது" என கூறினார்.

## மெட்ரோ முன்பாய்ந்து சிறுவன் தற்கொலை

புதுடெல்லி, பிப்.22:

உத்தம் நகர் மெட்ரோ நிலையத்தில் வெள்ளிக்கிழமை வந்துகொண்டிருந்த மெட்ரோ ரயில் முன்பாக 17 வயது சிறுவன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறியதாவது: காலை 11.07 மணியளவில் துவாரகா நிலையத்திலிருந்து உத்தம் நகர் மெட்ரோ நிலையத்தின் நடைமேடை 1-இல் ரயில் வந்து கொண்டிருந்தது. அப்போது, நடைமேடையில் இருந்த நபர், ரயில் முன்பாய்ந்து தற்கொலை செய்துகொண்டதாக நிலைய கட்டுப்பாட்டு அறையிலிருந்து காவல் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, மெட்ரோ பணியாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்கள் தண்டவாளத்திலிருந்து அவரை மீட்டனர். விசாரணையில், உயிரிழந்தவர் நஜாஃப்கர் பகுதியைச் சேர்ந்த அஸ்வின் தாகர் எனக் கண்டறியப்பட்டது. 12-ஆம் வகுப்பை நிறைவு செய்த அவர், போட்டித்தேர்வுகளுக்காகப் படித்து வந்தார்.

அந்தச் சிறுவன் தனிப்பட்ட பிரச்னைக்காக கடந்த சில நாள்களாக கவலையில் இருந்தது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்தது. அவருடைய பெற்றோருக்கு அவர் ஒரே மகனாவார். சிறுவனின் தந்தை தில்லி போக்குவரத்து கழகத்தில் (டிடிசி) ஒப்பந்த ஓட்டுநராகப் பணிபுரிகிறார். சிறுவனின் உடல் தீன் தயாள் உபாத்யாய் மருத்துவமனைக்கு உடல்கூறாய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்தை மெட்ரோ நிறுவனத்தின் மூத்த அதிகாரிகள் பார்வையிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பல கோணங்களில் விசாரணை நடைபெற்று வருகிறது என்றனர் அந்த அதிகாரிகள்.

## கால்பந்து விளையாடிய மேகாலயா எம்.பி. உயிரிழப்பு

ஷில்லாங், பிப்.22:

மேகாலயா தலைநகர் ஷில்லாங்கிலுள்ள கால்பந்து மைதானத்தில் 5 பேர் விளையாடக் கூடிய புட்சால் கால்பந்து விளையாட்டை ஷில்லாங் தொகுதி எம்.பி. ரிக்கி ஆண்ட்ரூ விளையாடினார்.

அப்போது மைதானத்தில் அவர் திடீரென சுருண்டு விழுந்தார். இதையடுத்து அவரை அருகிலுள்ள மருத்துவமனையில் அவரது நண்பர்கள் சேர்த்தனர். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர். அவரது மறைவுக்கு பிரதமர் மோடி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல், மேகாலயா முதல்வர் கான்ராட் கே.சங்மா உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். ரிக்கி ஆண்ட்ரூ உயிரிழந்ததைத் தொடர்ந்து நேற்று மேகாலயா பேரவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

## கர்நாடகாவில் சிவாஜி ஜெயந்தி பேரணியில் கல்வீச்சு: பாகல்கோட்டையில் 144 தடை உத்தரவு



பெங்களூரு, பிப்.22:

கர்நாடக மாநிலம் பாகல்கோட்டை மாவட்டத்தில் உள்ள நியூ டவுனில் சத்ரபதி சிவாஜி ஜெயந்தி பேரணி நடைபெற்றது. கிலா காளி பகுதியில் உள்ள மசூதி அருகே பேரணி சென்றபோது மர்ம நபர்கள் கல் வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் கூட்டத்தில் வந்த இளைஞர்களும் கற்களை வீசியதால் இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது. இதில் 10-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதுகுறித்து தகவலறிந்த பாகல் கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சித்தார்த் கோயல் தலைமையிலான போலீஸார் அங்கு விரைந்தனர். இரு தரப்பினர் மீதும் லேசான தடியடி நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்நிலையில் வெள்ளிக்கிழமை காலை நியூ டவுன் பகுதியில் உள்ள இறைச்சி கடைகள் மீது சிலர் கல் வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டதால் 500-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் அங்கு சனிக்கிழமை இரவு 12 மணி வரை 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## மே.வங்க எஸ்ஐஆர் பணியில் நீதிபதிகள் நியமனம்: உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, பிப்.22:

மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) நடைபெறுகிறது. இதை எதிர்த்து அந்த மாநில முதல்வர் மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் உச்ச நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுக்களை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த சூழலில் எஸ்ஐஆர் பணி தொடர்பான முரண்பாடுகள் மற்றும் ஆட்சேப மனுக்களை பரிசீலிக்க மாவட்ட நீதிபதிகள், மாவட்ட முன்னாள் நீதிபதிகளை பணியில் அமர்த்த கொல்கத்தா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. "எஸ்ஐஆர் விவகாரத்தில் மேற்குவங்க அரசுக்கும் தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கும் இடையே நம்பிக்கை அற்ற சூழல் நிலவுவதை கருத்தில் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபடும் மாவட்ட நீதிபதிகளுக்கு உரிய பாதுகாப்பை வழங்க உத்தரவிடுகிறோம். எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியது தொடர்பாக கூடுதல் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்ய டிஜிபிக்கு உத்தரவிடுகிறோம்" என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# இந்தியா-பாகிஸ்தான் மோதல்: 11 விமானங்கள் வீழ்த்தப்பட்டன - டிரம்ப்

**வாஷிங்டன், பிப்.22:**

இந்தியா- பாகிஸ்தான் மோதலின் போது 11 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டாகவும் நான் வரி விதிப்பேன் என மிரட்டியதால் போர் நிறுத்தப்பட்டது எனவும் காசா அமைதி வாரியக் கூட்டத்தில் டிரம்ப் கூறியுள்ளார். ஐ.நா அவையின் முக்கியத்துவத்தை குறைத்து, அதை முடக்கும் வகையில் 'காசா அமைதி வாரி யத்தை' டிரம்ப் உருவாக்கியுள்ளார்.

இந்த வாரியத்தில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் (UAE), பாகிஸ்தான், அர்ஜெண்டினா, ஹங்கேரி உள்ளிட்ட 27 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.



ஜனவரி 22 அன்று டாவோஸில் நடைபெற்ற இந்த வாரியத்தின் அறிமுக விழாவில் இந்தியா பங்கேற்க வில்லை. எனினும் இவ்வமைப்பில் இந்தியா உறுப்பினராக இணையுமா இணையாதா என வெளியுறவுத்துறை துவக்கத்தில் தெளிவுபடுத்தாமல் இருந்தது. கடந்த வாரம் வரை இந்த அமைப்பில் இணைவது குறித்து பரிசீலித்து வருவதாக மட்டுமே இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்திருந்தது. இந்தச் சூழலில் அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நடத்த இவ்வமைப்பின் முதல் கூட்டத்தில் இந்தியா பார்வையாளராக பங்கேற்றுள்ளது. இது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைப்பற்றியவிவாதத்தைக் கிளப்பியுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பேசிய போது தான் இந்தியா-பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட மோதலை நான் தான் தடுத்து நிறுத்தனேன் என டிரம்ப் மீண்டும் கூறியுள்ளார். அதாவது இந்தி யப் பிரதமர் மோடி, பாகிஸ்தான் பிரத மர் ஷெரீப் ஆகியோரைத் தான் நேரடி யாகத் தொடர்பு கொண்டு பேசியதாகவும், "இரு நாடுகளின் மீதும் 200 சத வீத வரி விதிப்பேன், உங்களுடனான வர்த்தக ஒப்பந்தங்களை ரத்து செய்து விடுவேன் என எச்சரித்தேன். பணம் என்று வரும்போது எல்லாம் சரியாகிவிடும்" என்றும், அதன் பின்னரே மோதல் முடிவுக்கு வந்ததாகவும் டிரம்ப் குறிப்பிட்டார். மேலும் அந்த மோதலில் சுமார் 11 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்தியா - பாகிஸ்தான் மோதல் என்னால் தான் நிறுத்தப்பட்டது. நான் இரு நாடுகளையும் வர்த்தகம் தொடர்பாக மிரட்டினேன் என டிரம்ப் பலமுறை கூறிவிட்டார். ஆனால் ஒரு முறை கூட அந்த கூற்று தவறு என பிரதமர் மோடியோ இந்திய வெளியுறவுத்துறையோ வெளிப்படையாக மறுப்பு தெரிவிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெப்ரி எப்ஸ்டீன் விவகாரம்: தொடரும் விசாரணை

**வாஷிங்டன், பிப்.22:**

கொடும் குற்றவாளியான ஜெப்ரி எப்ஸ்டீன் உடன் கொண்டிருந்த நட்பு தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட பிரிட்டனின் முன்னாள் இளவரசர் ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் 11 மணி நேர விசாரணைக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டுள்ளார். எனினும், அவர் மீதான விசாரணை தொடர்ந்து நடை பெற்று வருவதாக தேம்ஸ் வேலி காவல்துறை தெரிவித்துள்ளது. அவரது முன்னாள் இல்லமான 'ராயல்லாட்ஜில்' காவல்துறை தொடர் சோதனை நடத்தி வருகிறது. ஆண்ட்ரூ எப்ஸ்டீனின் தனித்தீவுக்கு சென்றதுடன் தான் வர்த்தகத் தூதராக இருந்தபோது அரசின் ரகசிய விஷயங்களையும் எப்ஸ்டீனுக்கு கசிய விட்டுள்ளார்.

# டிரம்ப்புக்கு ஒத்துழைக்க மறுப்பு: ஸ்டார்மர் திடீர் மாற்றம்

அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே போர் பதற்றம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், ஈரானைத் தாக்க பிரிட்டனின் ராணுவத் தளங்களைப் பயன்படுத்த டிரம்ப் கோரிக்கை விடுத்தார். அது சர்வதேசச் சட்டங்களை மீறும் செயல் என அதனை பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மர் நிராகரித்துள்ளார். ரஷ்யா மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு தொடர் உதவிகளை செய்வதுடன் அமெரிக்காவுடன் இணைந்து ஏமன் மீதும் பிரிட்டன் குண்டு வீசியுள்ளது. இந்நிலையில் டிரம்ப்புக்கு ஒத்துழைக்க மறுப்பது ஐரோப்பா அமெரிக்காவுக்கு இடையே ஏற்பட்டுள்ள முரண்பாட்டின் வெளிப்பாடாக இருக்கலாம் என கூறப்படுகிறது.

# ஈரானை தாக்க இஸ்ரேல், அமெரிக்கா தீவிரம்

ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தை நடந்து வரும் நிலையில் அந்நாட்டின் மீது தாக்கு தல் நடத்த டிரம்ப் திட்டமிட்டு வருகிறார். இஸ்ரேலும் தாக்குதல் நடத்த தயாராக உள்ளது. இது அப்பிராந்தியம் முழுவதும் போர்ப் பதற்றத்தை உச்சத்திற்கு கொண்டு சென்றுள்ளது. இத்தகைய சூழலில் அமெரிக்கா கூறுவதை 10-15 நாட்களில் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார். எனினும் நாங்கள் முதலில் தாக்குதல் நடத்த மாட்டோம். எங்கள் மீது தாக்குதல் நடத்தால் பதிலடி கடுமையாக இருக்கும் என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# தொழிலாளர் விரோத நடவடிக்கை : அர்ஜெண்டினாவில் முழு வேலைநிறுத்தம்




அர்ஜெண்டினாவில் தொழிலாளர் நலச்சட்டங்களை திருத்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. இது அந்நாட்டு கீழவையில் விவாதத்தில் உள்ளது. இது தொழிலாளர்களின் வாழ்வை பாதிக்கக்கூடிய நடவடிக்கை என கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. மேலும் இந்த சட்டச் சீர்திருத்த மசோதாவிற்கு எதிராக நாடு தழுவிய அளவிற்கு பொது வேலை நிறுத்தப்போராட்டம் நடத்த அந்நாட்டின் மிகப்பெரிய தொழிற்சங்க கூட்டமைப்பான தொழிலாளர் பொது கூட்டமைப்பு அழைப்பு விடுத்தது. இதன்படி பிப்ரவரி 19 அன்று நாடு முழுவதும் வேலை நிறுத்தம் நடைபெற்றுள்ளது.


# 'அடிமைத்தனம், காலனித்துவம் மனிதகுலத்திற்கு எதிரான குற்றம்'

ஆப்பிரிக்க ஒன்றியத்தின் கூட்டத்தில் அடிமைத்தனம், நாடு கடத்தல் மற்றும் காலனித்துவ ஆட்சி ஆகியவை 'மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்' என அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பிப்.14-15 தேதிகளில் நடைபெற்ற ஆப்பிரிக்க ஒன்றியத்தின் 39 ஆவது அமர்வில் ஆப்பிரிக்க நாட்டுத் தலைவர்கள் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆப்பிரிக்கர்கள் மற்றும் ஆப்பிரிக்க வம்சாவளியினரின் கண்ணியத்தைப் பாதுகாக்கவும், கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு வரலாற்று ரீதியான நீதி மற்றும் இழப்பீடு கோரவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# ஒவ்வொரு 45 நிமிடத்திற்கும் ஒரு சூரிய அஸ்தமனம்! படம்பிடித்த நாசா விண்வெளி வீரர்..!

**வாஷிங்டன், பிப்.22:**

நாசா விண்வெளி வீரர் ஜீனா கார்டுமேன் *(Zena Cardman)* சர்வதேச விண்வெளி நிலையத்தில் *(ISS)* இருந்து பூமியின் பிரமிக்க வைக்கும் டைம்-லேப்ஸ் *(Time-Lapse)* வீடியோவை பகிர்ந்துள்ளார். இந்த வீடியோ, விண்வெளி நிலையம் விண்வெளியில் ஒரு கார்த்துவீல் *(cartwheel)* சுழற்சியை மேற்கொள்ளும் பொழுது, 60 மடங்கு வேகத்தில் சூரிய அஸ்தமனம், இடி மின்னல், நட்சத்திரங்கள் மற்றும் துருவ ஒளிகள் *(aurora)* ஆகியவற்றை ஒரே சீரான சுழற்சியில் படம்பிடித்து காட்டுகிறது.



இந்த டைம்-லேப்ஸ் வீடியோவில் அட்லாண்டிக் முதல் பசிபிக் வரை விண்வெளி நிலையம் செல்லும் பாதை, வளிமண்டல ஒளி, நிலவின் பிரதிபலிப்பு மற்றும் சூரிய உதயம் ஆகியவை அழகாக படம் பிடிக்கப்பட்டுள்ளன.

விண்வெளி நிலையம் பூமியைச் சுற்றி வரும்பொழுது ஒவ்வொரு 45 நிமிடங்களுக்கும் ஒருமுறை சூரிய அஸ்தமனத்தை இந்த வீடியோ மிக அழகாக காட்டுகிறது. இது ஸ்பேஸ் எக்ஸ் *(SpaceX) CRS-33* விண்கல நடவடிக்கைகளின் போது எடுக்கப்பட்டது. இப்பொழுது இந்த வீடியோ சமூக ஊடகங்களில் வைரலாகி, விண்வெளியில் இருந்து பூமியின் அழகை மிக அழகாக எடுத்துக்காட்டுகிறது.

ஜீனா கார்டுமேன், தான் எடுத்த இந்த வீடியோ தான் விண்வெளியில் பார்த்த மிக அழகான காட்சிகளில் ஒன்று என்று குறிப்பிட்டுள்ளார்.


# "மேற்காசியா முழுவதையும் இஸ்ரேல் கைப்பற்றினால் நன்றாக இருக்கும்" - அமெரிக்க தூதர்

**வாஷிங்டன், பிப்.22:**

மேற்காசியா முழுவதையும் இஸ்ரேல் கைப்பற்றினால் நன்றாக இருக்கும் என்று அந்நாட்டுக்கான அமெரிக்க தூதர் மைக் ஹக்கபி தெரிவித்துள்ளார்.

டக்கர் கால்சன் *(TUCKER CARLSON)* என்பவருக்கு அளித்த நேர்காணலில் மைக் ஹக்கபி இவ்வாறு தெரிவித்துள்ளார். எனினும், தனது இந்த கருத்து மிகையானது என்றும் அவர் கூறினார்.

"வரலாற்று ரீதியாகவும் பைபிளில் சொல்லப்பட்டுள்ள படியும் மேற்கு ஆசியா மீது இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது. ஈராக்கின் யூப்ரடீஸ் நதிக்கும் எகிப்தின் நைல் நதிக்கும் இடைப்பட்ட நிலத்தை அபரஹாமின் சந்ததியினருக்கு வழங்க பைபிள் வசனத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, அவர்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும்" என்று மைக் ஹக்கபி தெரிவித்தார்.



தற்போதைய நிலையில் லெபனான், சிரியா, ஜோர்டான், சவூதி அரேபியாவின் சில பகுதிகள் அவர் குறிப்பிடும் பகுதிக்குள் வருகின்றன. இதனால் அதிர்ச்சி அடைந்த டக்டர் கால்சன், முழு பிராந்தியத்திலும் இஸ்ரேல் விரிவடைவதை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா என கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த மைக் ஹக்கபி, "அவர்கள் அதைக் கைப்பற்ற விரும்பவில்லை.

அந்த நிலப்பகுதியை எடுத்துக்கொள்வது பற்றி அவர்கள் பேசவும் இல்லை. இருந்தாலும் எனது கருத்து மிகைப்படுத்தப்பட்ட ஒன்று. இந்த எல்லா இடத்திலும் அவர்கள் (இஸ்ரேலியர்கள்) தாக்கப்பட்டால், போரில் அவர்கள் வெற்றி பெற்றால், அவர்கள் அந்த நிலங்களை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அது முற்றாக வேறு ஒரு விவாதம்" என்று குறிப்பிட்டார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உட்பட இஸ்ரேலிய அரசியல்வாதிகள் சிலர், இஸ்ரேல் விரிவாக்கம் குறித்து வெளிப்படையாக பேசி வருகின்றனர். இதற்கு சவாலாக விளங்கும் சர்வேதச குறறவியல் நீதிமன்றத்தை கலைக்க அமெரிக்காவும் முயன்று வருகிறது.

இது குறித்து குறிப்பிட்ட மைக் ஹக்கபி, "அதிபர் டொனால்டு ட்ரம்ப்பும் வெளியுறவுத் துறை அமைச்சர் ரூபியோவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அகற்ற அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

அவர்களின் இந்த நடவடிக்கைக்கு நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். காரணம், அவை சட்டத்தை சமமாகப் பயன்படுத்துவதில் உண்மையாக இல்லை. மாறாக முரட்டுத்தனமான அமைப்புகளாக மாறிவிட்டன" என தெரிவித்தார்.

# அதிபர் ட்ரம்ப்பின் வரி விதிப்பை ரத்து செய்தது அமெரிக்க உச்ச நீதிமன்றம்

**வாஷிங்டன், பிப்.22:**

அமெரிக்காவில் 2-வது முறை அதிபராக பதவியேற்ற ட்ரம்ப், பரஸ்பர வரி விதிப்பு முறையை கொண்டு வந்தார். அமெரிக்கப் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைக்கவும் ட்ரம்ப் வரிகளை இஷ்டத்துக்கு உயர்த்தினார். இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களின் மீதும் குறைந்தபட்சம் 10% வரி விதிக்கப்பட்டது. ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ததால், இந்தியா மீதான வரியை 50% ஆக உயர்த்தினார். அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் தனது இஷ்டத்துக்கு இந்த வரிவிதிப்பை ட்ரம்ப் உயர்த்தினார். இதை எதிர்த்து 'லேர்னிங் ரிசோர்சஸ், வி.ஒ.எஸ் செலக்சன்ஸ் என்ற நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்தன. இந்த வழக்குகள் ஒன்றிணைக்கப்பட்டு அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டன.

சர்வதேச அவசரகால பொரு ளாதார அதிகாரச் சட்டத்தின் (ஐஇஇபிஏ) கீழ், ஒரு அதிபர் தனது நிர்வாக உத்தரவின் மூலம் இத்தகைய வரிகளை விதிக்க அதிகாரம் உள்ளதா என்பதை உச்ச நீதிமன்றம் ஆய்வு செய்தது. இதை விசாரித்த தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் தலைமையிலான அமர்வு வரிகளை விதிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது. ஐஇஇபிஏ சட்டம் அதிபருக்கு வரிகளை விதிக்க அனுமதி அளிக்கவில்லை என்று கூறியது.

இந்த தீர்ப்பில் மாறுபட்ட கருத்தை தெரிவித்த ஒரு நீதிபதி, "இந்தத் தீர்ப்பால் ஏற்கெனவே வசூலிக்கப்பட்ட பில்லியன் கணக்கான டாலர்களை இறக்குமதியாளர்களுக்குத் திரும்ப அளிப்பது அரசுக்கு பெரிய 'தலைவலியாக' இருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம், இதுவரை சட்டவிரோதமாக வசூலிக்கப்பட்ட 175 பில்லியன் டாலர் வரிப்பணத்தை அமெரிக்கா இறக்குமதி செய்த நாடுகளின் நிறுவனங்களுக்கு திரும்ப அளிக்க வேண்டி வரும். இது பெரும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது.

மாற்றுத் திட்டம்: உச்ச நீதிமன்றத் தீர்ப்பு தமக்கு எதிராக வந்ததையடுத்து, வரி விதிப்பு தொடர்பாகத் தன்னிடம் மாற்றுத் திட்டம் இருப்பதாக அதிபர் ட்ரம்ப் தெரிவித்து உள்ளார்.

# அங்கீகரிக்கப்படாத மூலிகைகளை விற்றதாக கர்நாடக பழங்குடிகள் 26 பேர் கானாவில் கைது!

கர்நாடக மாநிலத்தில் உள்ள ஷிமோகா, தாவணகெரே ஆகிய மாவட்டங்களில் வாழும் ஹக்கி பிக்கி பழங்குடியினர் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆப்பிரிக்க நாடுகளில் பணியாற்றி வருகின்றனர். அங்கு அவர்கள் அரிய வகை மூலிகைகளை விற்பனை செய்துவருவதாக தெரிகிறது. இந்நிலையில் கானா நாட்டில் அங்கீகரிக்கப்படாத மூலிகைகளை விற்பனை செய்ததாக ஹக்கி பிக்கி பழங்குடியினர் 26 பேர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டனர். இதனால் அவர்களின் குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து ஹக்கி பிக்கி பழங்குடியின சங்க தலைவர் புனித் குமார் கூறுகையில், "கானாவில் கைது செய்யப்பட்ட விவகாரம் எனக்கு அங்குள்ள ஹக்கி பிக்கி சமூகத்தினர் மூலம் தெரியவந்தது.

தற்போது மேற்கு கானா சிறையில் அடைக்கப்பட்டுள்ள 26 பேரையும் விடுவிக்க மத்திய மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு தகவல் தெரிவித்துள்ளோம். தூதரக அதிகாரிகள் அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது" என கூறியுள்ளார்.

# டெல்லி ஏஐ மாநாட்டுக்கு ஆதரவு தெரிவிக்க புர்ஜ் கலீபாவில் ஜொலித்த மூவர்ண கொடி

**துபாய், பிப்.22:**

டெல்லி ஏஐ உச்சி மாநாடு முடிவடைந்தது. இந்த மாநாட்டில் பல நாடுகளும், பல தலைமை செயல் அதிகாரிகளும் (சிஇஓ) பங்கேற்றுள்ளனர். மாநாட்டில் 19-ம் தேதி பிரதமர் மோடி உரையாற்றினார்.

இந்நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள நட்புறவை வெளிப்படுத்தும் வகையிலும், ஏஐ மாநாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் உலகின் மிகப்பெரிய கட்டிடமான புர்ஜ் கலீபாவில் இந்திய தேசியக் கொடியின் மூவர்ணம் மின்விளக்குகளில் காட்சிப்படுத்தப்பட்டது. இதற்கு அமீரகத்தில் உள்ள இந்திய தூதரகம் பாராட்டு தெரிவித்துள்ளது. "இந்தியா - யுஏஇ இடையே உள்ள உறவை காட்டும் சக்திவாய்ந்த சின்னம் இது" என்று இந்திய தூதரகம் பெருமிதம் தெரிவித்துள்ளது.

புர்ஜ் கலீபா கட்டிடத்தில் மூவர்ண கொடி ஜொலிக்கும் படத்தை வெளியிட்டு 'இந்திய ஏஐ மாநாட்டை உலகின் மிக உயர்ந்த கட்டிடம் கொண்டாடுகிறது' என்ற படவிளக்கத்துடன் இந்திய தூதரகம் வெளியிட்டுள்ளது. இந்தப் படத்தைப் பார்த்து பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# இந்தியாவுக்கான இறக்குமதி வரி 10% - பிப்.24 முதல் அமல்: வெள்ளை மாளிகை தகவல்

**வாஷிங்டன், பிப்.22:**

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்த உலகளாவிய வரி விதிப்பு சட்டவிரோதமானது என அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், வேறு ஒரு சட்டப் பிரிவின் கீழ் இந்தியாவுக்கான வரியை 10% என்ற அளவில் அதிபர் நிர்ணயித்துள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், சர்வதேச அவசரகால பொருளாதார அதிகாரச் சட்டத்தின் (ஐஇஇபிஏ) கீழ், பரஸ்பர வரி விதிப்பு முறையை கொண்டு வந்தார். இந்த சட்டத்தின் கீழ், பல்வேறு நாடுகளுக்கும் அந்த நாடுகளை அச்சுறுத்தும் வகையில் வரிகளை விதித்தார்.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ததால், இந்தியா மீதான வரியை 50% ஆக உயர்த்தினார். இதுபோல், பல நாடுகளுக்கும் அவர் வரியை நிர்ணயித்தார். அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் இவ்வாறு வரி விதிக்கப்பட்டதை எதிர்த்து 'லேர்னிங் ரிசோர்சஸ், வி.ஒ.எஸ் செலக்சன்ஸ் என்ற நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்தன. இதை விசாரித்த உச்சி நீதிமன்ற தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் தலைமையிலான அமர்வு, வரிகளை விதிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது; ஐஇஇபிஏ சட்டம் அதிபருக்கு வரிகளை விதிக்க அனுமதி அளிக்கவில்லை என்று கூறியது.

இதனால், ட்ரம்ப் விதித்த வரிகள் முடிவுக்கு வந்ததாகக் கருதப்பட்டது. இந்நிலையில், 1974ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வர்தத்க சட்டத்தின் பிரிவு 122ன் கீழ், 150 நாட்களுக்கு பயன்படுத்துவதற்கான தனது அதிகாரத்தைப் பயன்படுத்திடொனால்டுட்ரம்ப் அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்ட நாடுகளுக்கான வரி 10% ஆக இருக்கும் என அறிவித்தார்.

இந்தியா உடனான வர்த்தக ஒப்பந்தம் இன்னும் கையெழுத்தாகாத நிலையில், இந்தியாவுக்கான இறக்குமதி வரி எவ்வாறு இருக்கும் என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த டொனால்ட் ட்ரம்ப், "எதுவும் மாறாது. அவர்கள் வரிகளைச் செலுத்துவார்கள். நாங்கள் வரிகளை செலுத்த மாட்டோம். இது முன்பு இருந்ததற்கு நேர்மாறானது. இந்திய பிரதமர் மோடி ஒரு சிறந்த மனிதர். அவரை எதிர்க்கும் மக்களைவிட அவர் புத்திசாலி. அவர் எங்களை தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருந்தார். எனவே, நாங்கள் இந்தியாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்தோம். அது இப்போது ஒரு நியாயமான ஒப்பந்தம். அவர்கள் வரி செலுத்துகிறார்கள். நாங்கள் வரிகளை செலுத்த மாட்டோம். இந்தியா உடனான ஒப்பந்தம் தொடங்கிவிட்டது. அனைத்து ஒப்பந்தங்களும் தொடங்கி உள்ளன" என தெரிவித்தார்.

இந்தியா உடனான தனது உறவு குறித்த கேள்விக்கு, "இந்தியா உடனான எனது உறவு அற்புதமானது. நாங்கள் இந்தியாவுடன் வர்த்தகம் செய்கிறோம். இந்தியா, ரஷ்யாவில் இருந்து வெளியேறியது. இந்தியா, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்கிக்கொண்டிருந்தது. எனது வேண்டுகோளின்படி அவர்கள் பின்வாங்கினர். ஏனெனில், நாங்கள் அதை (உக்ரைன் போர்) தீர்க்க விரும்புகிறோம்" என தெரிவித்தார். இந்நிலையில், வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிவிப்பில், "அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்ட அனைத்து நாடுகளுக்குமான தற்காலிக வரி 10% ஆக குறைகிறது. இந்தியாவுக்கும் இது பொருந்தும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அனைத்து நாடுகளுக்கும் புதிதாக 10% வரி விதிப்பை அமல்படுத்தினார் டிரம்ப்

## இந்தியா-பிரேசில் வர்த்தகத்தை 5 ஆண்டுகளில் ரூ.1.81 லட்சம் கோடிக்கு மேல் உயர்த்த இலக்கு நிர்ணயம்



## மதுரையில் ரூ.213 கோடி மதிப்பிலான புதிய மேம்பாலம்: முதல்வர் திறந்து வைத்தார்

## ஏப்ரல் 1 முதல் டோல்கேட்டில் இனி 'கேஷ்' செல்லாது! மீறினால் 1.25 மடங்கு அபராதம்!

## வார ராசிபலன்கள்


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை இலவச இ-பேப்பர்